Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 118 • 12.11.2017




அரச
வேலை
தேவையா?


16ம் பக்கம் பாருங்கள்!


• கஜேந்திரகுமார்
கூட்டணியின்
ஆசனப்பங்கீட்டு விபரம்!

• த.தே.கூட்டமைப்பு
எப்பொழுது
உடையும் தெரியுமா?

# தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் இணையும் புதிய கட்சி

சுரேஷ் செலவாகிறார்- வரதர் வரவாகுகிறார்



ழமிக்கி விட்ட
புலிகளின் விமானங்கள்
சுட்டுவீழ்த்திய
இந்திய ஆயுதங்கள்!



# மதிவதனி மூலம் பிரபாகரனிடம் மன்னிப்பு கேட்ட கருணாவின் சகா!

கடைசி கட்டத்தில் மனமுடைந்த தளபதி விதுஷா




அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
கடலுணவு இறைச்சி எண்ணைவகை மருந்துப்பொருட்கள் பழவகைகள் பால்மா
வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

1 பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி யாழ்ப்பாணம் PH: 0212226113

# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)


ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்




தொடர்புகளுக்கு
**தீபம்**
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)



## யாழ் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் அதி உயர்தர வலம்புரி ஹோட்டல்.





Green Grass
**The Valampuri**



NO 1 TOPAZ
**TOPAZ**
No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான ... ஆடைகள்


We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

**TOPAZ**
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645

**TOPAZ TAILORING**
No 89/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643

**TOPAZ MALL**
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933

# எதிர்பாராதவிதமாக சிக்கிய போன் நம்பர்...
## நளினி சிக்கியது இப்படித்தான்



ராஜீவ் காந்தி கொலை
எப்படி... என்ன நடந்தது? 8

கே.ராகோத்தமன்

யார் பாக்கியநாதன்? யார் முத்துராஜா? முருகன் என்பது யார்?

இந்தக் கடிதங்கள் சுட்டும் இந்தப் பெயர்கள், இந்த வழக்குடன் தொடர்புடையவைதானா? எனில், எந்தளவு? சுந்தரி என்ற பெண் விழுப்புரத்திலிருந்து ஹரி பாபுவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள்.


காதல் கடிதம். அந்தக் கடிதம்தான் எத்தனை அதிர்ச்சி சுமந்திருக்கிறது.

வேண்டாம். நாம் இலங்கைக்கெல்லாம் போக வேண்டாம். இங்கேயே திருமணம் செய்துகொண்டு வாழலாம்.

நீ போகிற பாதை ஆபத்தாகத் தெரிகிறது. நமக்கு எதற்கு அதெல்லாம் என்று இந்தப் பெண் எதைச் சொல்கிறாள்? முன்னதாக, ஹரி பாபுவுக்குக் கடிதம் எழுதியிருந்த பாக்கியநாதன் பிபிஎல் ஆல்ரவுண்டர்ஸ் என்றொரு அச்சகம் நடத்தி வருகிறார் என்பது தெரிந்திருந்தது.

பாக்கியநாதனின் அச்சகம், ஹரி பாபு வீட்டில் பேப்பர் பண்டில்கள் ஓரளவு ஒத்துப் போவதாகவே இருந்தது.

ஆனால், அவரும் சுபா சுந்தரத்திடம் வேலை பார்த்தவர்தான் என்கிற விவரம் ரவி சங்கரன் மூலமாகத் தெரியவந்தபோதுதான் ஹரி பாபு பாக்கியநாதன் சுபா சுந்தரம் விடுதலைப் புலிகள் என்று ஒரு நேர்க்கோடு





போட்டு யோசிக்கத் தோன்றியது.

இடையே நளினியும் முருகனும் வந்தபோது எங்கள் வேலை மிகவுமே எளிதாகிப் போனது.

### பார்த்த முகம்

ஹிந்து நாளிதழுக்கு முதலில் போன அந்த பத்து புகைப்படங்களும் எங்களுக்குக் கிடைத்த பிறகு அவற்றை ப்ரிண்ட் போட்டு விசாரணை அதிகாரிகள் அனைவரிடமும் அளித்திருந்தோம்.

'எதையும் விடாதீர்கள். யாரையும் விடாதீர்கள். சந்தேகப்படும்படி யாராக இருந்தாலும் விசாரியுங்கள். யார், என்ன தகவல் அளித்தாலும் அலட்சியம் செய்யாதீர்கள்' என்று சொல்லியிருந்தோம்.

ஸ்ரீபெரும்புதூர் பொதுக்கூட்டத்துக்குச் சென்றிருந்த ஒரு பெண்மணி (இவர் மகளிர் காங்கிரஸ் பிரிவின் உறுப்பினர்) குர்தா பைஜாமா நபருடன் ஹரி பாபுவை அங்கே தாம் பார்த்ததாகச் சொன்னார்.

அவர்களுடன் மேலும் இரு பெண்கள் பேசிக்கொண்டிருந்ததாகச் சொன்ன அவரிடம் நாங்கள் ஹரி பாபு எடுத்த படங்களைக் காட்டியபோது, சரியாக அடையாளம் காட்டினார்.

நளினி! இது யார் புதிய முகம்?

நாங்கள் யோசித்துக்கொண்டிருந்தபோது, புலனாய்வில் ஈடுபட்டிருந்த அதிகாரி ஒருவர், ஹரி பாபுவின் வீட்டில் கிடைத்த தடயங்களின் அடிப்படையில் பாக்கியநாதனை விசாரிப்பதற்காகச் சென்றார். பிபிஎல் ஆல்ரவுண்டர் அச்சக உரிமையாளர் பாக்கியநாதன். பாக்கியநாதன் இளைஞர் இருபத்தி ஐந்து வயதுக்கு மேல் சொல்ல முடியாத தோற்றம். பி.காம் பட்டதாரி.

அவரது தாயார் பெயர் பத்மா. அவர் மயிலாப்பூரில் உள்ள கல்யாணி நர்ஸிங் ஹோமில் நர்ஸாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருக்கு மகள் ஒருத்தி இருந்தாள்.

அவள் பெயர் கல்யாணி. அவளும் நர்ஸ்தான். சிறிய குடும்பம். தகப்பன் உடனில்லாத குடும்பம்., பத்மா, தன் கணவருக்கு இரண்டாம் தாரம் என்பதால் சில குடும்பச் சிக்கல்கள் அவர்களுக்கு இருந்தன.

பொருளாதாரச் சிக்கல் அதில் பிரதானமானது. இந்த விஷயங்களெல்லாம் பாக்கியநாதனிடமிருந்து கிடைத்தாலும் உருப்படியாக ஒரு தடயம் அகப்படவில்லை.

ஹரி பாபுவை அவருக்குத் தெரியும் என்ற ஒரு விஷயம் மட்டுமே எப்படி உதவும்?

அவரை விசாரித்துக்கொண்டிருந்த புலனாய்வு அதிகாரிக்கு மிகத் தற்செயலாகத்தான் ஒருநாள் அலுவலகத்தில் பொறி தட்டியது. நாங்கள் அப்போது ஹரி பாபு எடுத்த புகைப் படங்களை வைத்துக்கொண்டு விவாதித்துக்கொண்டிருந்தோம்.

இரு பெண்களின் அடையாளம் கண்டு, சுட்டிக்காட்டிய மகளிர் காங்கிரஸ் பெண்மணி பற்றிப் பேச்சுவர, அந்தப் புலனாய்வு அதிகாரி தற்செயலாக படத்தில் இருந்த நளினியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

'ஓ, இவரை நான் பாக்கியநாதன் வீட்டில் சில சமயம் பார்த்திருக்கிறேனே?'

தூக்கிவாரிப் போட்டது எங்களுக்கு. வட்டம் சுருங்கத் தொடங்கிவிட்டதா? நளினிக்கும் பாக்கியநாதனுக்கும் என்ன சம்பந்தம்? அவர் அப்படி ஒரு பெயரைச் சொல்லவேயில்லையே? பாக்கியநாதன் வீட்டு உறுப்பினர்கள் என்று அவரது அம்மாவும் தங்கையும் மட்டும்தானே அறிமுகமானார்கள்?

இதற்கிடையில் இன்னொரு விஷயம் நடந்தது. சம்பவம் நடந்த இரு நாள்கள் கழித்து தஞ்சாவூர் அருகே, தமிழக காவல்துறை அதிகாரிகள் ஒரு செக்போஸ்டில் பரிசோதனைப் பணியில் ஈடுபட்டிருந்தபோது சங்கர் என்கிற கோணேஸ்வரன் என்கிற விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் பிடிபட்டிருந்தார்.

அவரிடமிருந்த துண்டுச் சீட்டில் இரண்டு டெலிபோன் நம்பர்கள் இருந்தன.

'நளினி தாஸ் 2419493' என்று ஓர் எண். இன்னொன்று, 'சிவராசா 2343402.' அதன் அடிப்படையில் அந்த இரு எண்களுக்கும் போன் செய்து விசாரித்ததில் முதல் எண், அடையாறில் இருந்த அனபான் சிலிக்கான்ஸ் என்னும் நிறுவனத்தின் டெலிபோன் நம்பர் என்று தெரிந்தது.

நளினி அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தார். இன்னொரு எண், போரூரில் உள்ள எபினேசர் ஸ்டோர்ஸ் என்னும் மளிகைக்



கடையினுடையது.

வேறொரு புலனாய்வுப் பிரிவு அனபான் சிலிக்கான்ஸுக்குச் சென்று நளினியை முன்னதாக விசாரித்திருந்தது. குறிப்பிடத்தக்க தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதற்குமேல் காத்திருக்க அவசியம் இல்லை. மீண்டும் பாக்கியநாதன். மீண்டும் விசாரணை. இம்முறை அவர் ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஆமாம். நளினி என் மூத்த சகோதரி. எனக்கு இரண்டு சகோதரிகள் உண்டு.

பாக்கியநாதனைக் கைது செய்வது என்று முடிவு செய்தோம்.

அவரது அச்சகத்துக்குச் சென்று அவரை அழைத்துக்கொண்டு அவரது வீட்டுக்குப் புறப்பட்டோம். அது ஒரு வழக்கம். ஒருவரைக் கைது செய்து அழைத்துச் செல்வதற்கு முன்னால் அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று சாப்பிடச் சொல்லி கொஞ்சம் சகஜமாகப் பேச்சுக் கொடுப்போம்.

சூழ்நிலை சாதகமாகும்போது விஷயத்தைச் சொல்லி அதிக கலாட்டா இல்லாமல் கைது செய்வது ஒரு நடைமுறை. அந்த மாதிரி பாக்கியநாதனை வீட்டுக்கு அழைத்துச் சென்று சாப்பிட வைத்தோம்.

ஒருவாறு அவர் விஷயத்தை ஊகித்திருக்க வேண்டும். இதற்குமேல் தப்பிக்க முடியாது. எப்படியும் கைது செய்துவிடுவார்கள். எனவே அவர் தப்பிக்கலாம் என்று முடிவு செய்தார். மிகவும் தாமதமான முடிவு. வீட்டிலிருந்து அவர் தப்பியோட முயற்சி செய்து, தோற்று, அழுதபடி கைதானார்.

கையோடு பாக்கியநாதனின் அம்மா பத்மாவையும் கைது செய்தோம்.

நளினி இல்லை. தப்பித்திருந்தார்!

அவரது அடையாறு அலுவலகத்துக்கு மீண்டும் சென்றபோது, அவர் ராஜினாமா கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டதாகச் சொன்னார்கள்.

வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் ஒரு பெண்ணைக் கைது செய்தால் அவரது வாழ்வுக்கு, அது பிரச்னை என்று கருதியே நளினி விஷயத்தில் சற்று விட்டுப் பிடிக்கப் பார்த்தோம்.

அதுவே தவறாகிப் போனது. நளினியை மட்டும் முதலிலேயே கைது செய்திருந்தால் வழக்கு இன்னமும் சீக்கிரம் முடிந்திருக்கும்.

(தொடரும்)

# புலிகளின் விமானங்களை வீழ்த்த முடியாமல் திண்டாடிய விமானப்படை

## கடைசியில் இந்தியா கொடுத்த ஆயுதமே உதவியது

ஹிருத்திக் போஸ் நிஹாலே

வான் புலிகளின் சிலின் விமானத்தை விமானப்படையின் F-7G விமானி அடையாளம் கண்டார் என்பதையும், வான்புலி விமானத்தை பயரிங் ஸ்பொட்டிற்குள் கொண்டு வந்து, எயார் ரூ எயார் மிஷைல்ஸ் சிஸ்டத்தை ஒன் செய்து தாக்க முயன்ற போதும், சிஸ்டம் இயங்கவில்லையென்பதையும் கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன்.


ஏன் இயங்கவில்லை?

வெப்பத்தை நாடிச்செல்லும் இந்த வகையான ஏவுகணைகளை ஏமாற்ற, தமது விமானத்திலிருந்து வெப்பம் வெளியேறும் திசையை புலிகள் மாற்றியமைத்திருந்தார்கள் என்பதை குறிப்பிட்டிருந்தேன். 2009 பெப்ரவரியில் புலிகளின் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்ட பின்னர்தான் பாதுகாப்பு தரப்பினர் இதை கண்டுபிடித்தனர்.

நடுவானில் வைத்து புலிகளின் விமானத்தை அடையாளம் கண்ட பின்னரும் தாக்க முடியாமல் போனது பாதுகாப்பு தரப்பினருக்கு பெரிய தலையிடியாக அமைந்து விட்டது. புலிகள் தாக்குதல் நடத்த முடியாமல் போனது. ஆனால், வான் புலிகளை தொடர்ந்து பயரிங் ஸ்பொட்டிற்குள் வைத்திருக்க முடியவில்லை. காரணம், வான்புலிகள் மிகக்குறைந்த உயரத்தில் பறந்தார்கள். தாக்குதலை முடித்துக்கொண்டு திரும்பும் சமயங்களில் வான்புலிகள் மிகத்தாழ்வாக மர உயரத்தைவிட கொஞ்சம் மேலே பறந்தார்கள். இந்தவகை பறப்பை tree top level flying என்பார்கள்.

தாக்குதலிற்கு செல்லும்போது,இராணுவ ஏழு நிமிடத்தில் வான்படை ஜெட் விமானங்கள் கடந்து விடும். ஆகவே,எட்டு நிமிடங்கள் வான்புலிகளிற்கு ஆபத்தான நிமிடங்கள்.

அனேகமாக வன்னி வான்பரப்பிற்குள் நுழைந்து தரையிறங்கும் சமயங்களே ஆபத்தான தருணங்கள். வந்த வேகத்தில் தரையிறங்குவதென்றால் உயரம் குறைவாக பறந்து வர வேண்டும். tree top level flying முறையில் வந்தால், தாமதமின்றி தரையிறங்கிவிட முடியும். விமானப்படை அப்பாலுள்ள பனிச்சங்குளம் ஓடுபாதைகளை இலக்கு வைத்துதான் பறந்தன. இந்த ஓடுபாதைகளில்தான் வான்புலிகளின் விமானங்கள் தரையிறங்கின என்றுதான் பாதுகாப்பு தரப்பினர் நினைத்தார்கள். பொதுவாகவே விமானங்கள் தரையிறங்கும்போது ரன்வேயை விமானி கண்டறிய லான்டிங் லைற் எரியவிடப்படும். அதுவும், வேகம் அதிகமான தாக்குதல்ஜெட்விமானங்களின் தரையிறக்கத்திற்கு இது அவசியம். வான்



dogfight காட்சியொன்று



14.5 mm கனோன்

ஏவுகணையை செயலிழக்க வைக்கும் நவீன சிஸ்டம் எதையாவது வைத்திருக்கிறார்களோ என்றும் பாதுகாப்பு தரப்பினர் யோசித்தனர்.

வான்புலிகளை சமாளிக்க இலங்கையால் மட்டும் முடியாது, வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனை அவசியம் என்பது இலங்கைக்கு புரிந்தது. வான்புலிகள் பெரும் தாக்குதல்களை நடத்தாவிட்டாலும், புலிகளின் விமானத்தாக்குதல் என்ற செய்தி ஏற்படுத்திய அர்த்த பரிமாணங்கள் கனதியானவை. எப்படியாவது வான் புலிகளை முடக்க வேண்டும்.

வான்புலிகளின் அச்சுறுத்தல் ஏற்படலாமென புலனாய்வு பிரிவு எச்சரித்ததையடுத்தே சீன தயாரிப்பான தி7நி ஜெட்கள் வாங்கப்பட்டன. எயார்ரூஎயார் மிஷைல்ஸ் சிஸ்டம் சிறப்பாக இயங்குவதும், இலங்கைக்கு கட்டுபடியான கிடைக்க கூடிய ஜெட் விமானம் தி7நி தான். இதில் ஆறு விமானங்களை பாகிஸ்தானிடமிருந்து இலங்கை வாங்கியது.

F-7G வாங்கும்போது இலங்கை யோசிக்காத கோணத்தில் புதியதொரு பிரச்சனைகள் உருவாகியிருந்தன. வான்புலிகளை பயரிங் ஸ்பொட்டிற்குள் கொண்டு வந்தும் தளங்களிற்கு மேலான வான்பறப்பை தவிர்த்து, கடலிற்கு மேலாக செல்வதால் சாதாரண உயரத்திலேயே வான்புலிகள் சென்றனர். தாக்குதலை நடத்திவிட்டு திரும்பும்போது, இரண்டு காரணங்களினால் உயரத்தை குறைத்து tree top level flying மேற்கொண்டார்கள். ஒன்று, வான்படை ஜெட்களிடமிருந்து தப்பிப்பது. கட்டுநாயக்காவில் இருந்து பதினைந்து நிமிடத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு வான்பகுதிக்கு வான்புலிகளின் விமானங்கள் வந்துவிடும். இந்த தூரத்தை

**புலிகளின் வான்படையின் எழுச்சியும் வீழ்ச்சியும் 4**

ஜெட் விமானங்களாலும் தாக்க முடியாது.

இதில் புலிகள் இன்னொரு தந்திரத்தை கையாண்டார்கள். வான்புலி விமானங்களை விரட்டிவரும் விமானப் படை ஜெட் விமானங்கள் புதுக்குடியிருப்பின் கேப்பாபிலவு, இரணைமடுவிற்கு

புலிகளின் தரையிறக்கத்தையும் அப்படித்தான் பாதுகாப்பு தரப்பினர் நினைத்தனர்.

புலிகள் அமைத்த இரண்டு ரன்வேயும் தமது விமானங்களின் பாவனைக்கல்ல. புலிகளின் விமானங்களிற்கு இவ்வளவு பெரிய ரன்வே தேவையில்லை. ஏன் அவ்வளவு பெரிய ரன்வே அமைத்தார்கள் என்ற விடயத்தை, தீபம் வார இதழில் வெளியாகும் "இறுதியுத்தத்தில் நடந்தது என்ன?" தொடரில் குறிப்பிடவுள்ளதால் இந்த தொடரில் குறிப்பிட வேண்டாம் என கேட்டுள்ளார்கள். அதனால் இப்பொழுது அது பற்றி எழுதவில்லை.

லான்டிங் லைற் எரியும் புலிகளின் ரன்வே எதுவென விமானப்படை தேடிக்கொண்டிருக்க, புலிகள் எங்கு தரையிறங்கினார்கள் தெரியுமா?

மிக ஆச்சரியமான செய்திதான். ஒன்றில் புதுக்குடியிருப்பை அடுத்த பச்சைபுல்மோட்டை பகுதி (புலிகளின் இறுதி விமானத்தாக்குதலிற்கு 2009 பெப்ரவரியில் கிளம்பியபோது பச்சைப்புல்மோட்டைக்கு பக்கத்திலுள்ள மாத்தளன் நீரேரிக்கு அண்மையான வெட்டைவெளியிலிருந்தே புறப்பட்டனர்)

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

சமூக வலைத்தளங்களில்
/deepamlive



அல்லது மன்னார் பகுதிகள்.

தாழ்வாக பறந்து வந்த திசையிலேயே லான்ட் ஆகி விடுவார்கள் வான்புலிகள். விமானப்படை ஜெட் விமானங்களால் இவ்வளவு தாழ்வாக பறந்து வர முடியாது. முடியாதென்பதல்ல, எந்த விமானியும் அதை செய்ய மாட்டார்கள். ஹை ரிஸ்கியான விசயம். விமானம் தரையில் மோதும் அபாயம் அதிகமாகவுள்ளது.

வான்புலிகளை சமாளிக்க முடியாமல் தனது அதிகாரிகள் திண்டாடிக் கொண்டிருப்பதை பார்த்த கோத்தபாய ராஜபக்ச வெளிநாட்டு உதவியை நாடி முடிவு செய்தார். அப்பொழுது அனேகமான நாடுகளின் பாதுகாப்பு துறையினர் அவருடன் நல்ல தொடர்பில் இருந்தனர். ஆனால்கோத்தபாய மூன்று நாடுகளைதான் தேர்வு செய்தார்.

ஒன்று இந்தியா. புலிகளை அழிக்க இந்தியா முழுமையான ஆசீர்வாதம் வழங்கி இராணுவ உதவிகள் செய்து வந்தது. வான்புலிகளின் தாக்குதல்களை உடனே தடுக்க வேண்டுமென இந்தியா விரும்பியது. 2007 இல் இது பற்றிய மெசேஜ் ஒன்றை இந்தியா தனது தொடர்பாளர்கள் மூலம் புலிகளிற்கு அனுப்பியிருந்தது. ஆனால் புலிகள் அதை கணக்கில் எடுக்கவில்லை.

இரண்டாவது அமெரிக்கா. புலிகளின் சர்வதேச வலைப்பின்னல்களை உடைத்து, புலிகளின் முதுகெலும்பை உடைப்பதில் இந்தியாவிற்கு நிகரான உதவியை அமெரிக்காவும் செய்து வந்தது. புலிகளின் மிதக்கும் ஆயுதக்களஞ்சியசாலைகள் பற்றிய விபரத்தை இந்தியாவுடன் இணைந்து அமெரிக்காவும் இலங்கைக்கு வழங்கிவந்தது.

மூன்று பாகிஸ்தான். F-7G தாக்குதல் ஜெட்களை இலங்கைக்கு பாகிஸ்தான்தான் வழங்கியது. சீன தயாரிப்பான இந்த ஜெட்டை இலங்கை வாங்குவதை இந்தியா விரும்பவில்லை. மிக் அல்லது தனது சுகோய் (Sukhoi) விமானங்களை வழங்க இந்தியா தயாராக இருந்தது. ஆனால் சீனா நேரடியாக அல்லாமல் பாகிஸ்தான் மூலம் F-7G தாக்குதல் ஜெட்களை வழங்க சம்மதித்திருந்தது. சீனாவின் பங்களிப்பை இலங்கை விரும்பியிருந்தது. ஆனால் நேரடியாக சீனா சம்பந்தப்படுவதை இந்தியா விரும்பாது என்பதால், பாகிஸ்தான் வழியாக பாதையேற்படுத்திக் கொடுத்தார் கோத்தபாய ராஜபக்ச.

மூன்று நாடுகளின் பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்பில் இலங்கை முப்படைகளின் அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் மூலோபாய ஆலோசகர்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்த கூட்டம்தான் புலிகளிற்கு மிக அச்சுறுத்தலாக அமைந்த திட்டமொன்றிற்கு வித்திட்டது.

மெதுவாக, குறைந்த உயரத்தில் பறக்கும் விமானங்களை அழிக்க எயார் ரூ எயார் மிஷைல்ஸ் பொருத்தமில்லையென மூன்று நாடுகளின் நிபுணர்களும் கூறினர். நீண்ட தூர பறப்பு செய்தால் தாக்கலாமே தவிர, கொழும்பிலிருந்து வன்னி வரையான சிறிய தூர பறப்பு செய்யும் வான்புலிகள் ரக விமானங்களை தாக்குவதற்கு தரையில் இருந்து வானுக்கு (ground to air) தாக்கும் கலிபர், கனோன் ரக துப்பாக்கிகளே பொருத்தம் என சிபாரிசு செய்தனர்.


இதையடுத்து விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் .50, .30 கலிபர் ரக துப்பாக்கிகள் கொழும்பில் பல இடங்களில் பொருத்தப்பட்டன. வான்புலிகளின் தாக்குதல் நடக்கலாமென கருதப்பட்ட இடங்களிற்கு அண்மையாக இந்த துப்பாக்கிகள் பொருத்தப்பட்டன. புலிகளின் விமானங்கள் வந்தால் வானத்தை நோக்கி எல்லா திசைகளிலும் சுடுவதுதான் திட்டம்.


மூன்று நாடுகளின் நிபுணர்கள் பரிந்துரைத்த இந்த திட்டத்தை, அதற்கு ஏழு வருடங்கள் முன்னரே புலிகள் திட்டமிட்டார்கள் என்று சொன்னால் நம்புவீர்களா?. ஆனால் உண்மை அதுதான்.

2000 ஆம் ஆண்டுகளில் விமானப் படையின் கிபிர், மிக் விமானங்கள் புலிகளிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தன. அப்பொழுது ஓயாத அலைகள் நான்கு படைநடவடிக்கை நடந்து கொண்டிருந்த சமயம்.

தளபதி கடாபிதான் விமான எதிர்ப்பு பிரிவின் தளபதியாகவும் இருந்தார். அதுதவிர, கனரக ஆயுதங்களின் பயிற்சி பொறுப்பும் கடாபியிடமே இருந்தது. கடாபியின் கீழ் அனந்தன் என்ற போராளி இருந்தார். கடாபிக்கு அவரில் நல்ல நம்பிக்கை. குறிபார்த்து சுடுவதில் வல்லவரான இவர், கலிபர் மற்றும் கனோன் பயிற்சி ஆசிரியராகவும் இருந்தார். இவர் ஒரு திட்டம் தீட்டினார்.

வான்படைக்கு பொறியாக இலக்கொன்றை வைத்து விட்டு, அந்த இலக்கை சூழ முக்கோண வடிவத்தில் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை நிறுத்தி வைத்திருந்து, விமானம் முக்கோண வடிவ தாக்குதல் இலக்கிற்குள் நுழையும்போது


புலிகள் பயன்படுத்திய பூமா ரகம்



புலிகளின் விமானம்

தாக்கி வீழ்த்தலாம் என திட்டமிட்டார். 2001 இல் கடலில் ஒரு படகை நிறுத்தி வைத்து, விமானப்படைக்கு தூண்டில் போட்டனர் புலிகள். ஆனால் அன்று விமானத்தை விழுத்த முடியவில்லை.

2006 இன் பின்னர் மீண்டும் முயற்சி செய்தனர். இரணைமடுவிற்கு அண்மையிலுள்ள பனிச்சங்கேணி ரன்வேயில் விமானத்தை போன்ற டம்பி உருவமொன்றை செய்து நிறுத்தியிருந்தார்கள். அதை சூழ 2 கிலோமீற்றர் சுற்றளவில் நான்கு, ஐந்து கனோன் Anti Aricraft துப்பாக்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. வான்புலிகளின் விமானம் நிறுத்தப்பட்டுள்ளதாக நினைத்து வான்படை விமானங்கள் தாக்குதல் நடத்த வரும்போது குண்டு வீச பதிவாக பறக்கும்போது தாக்குதல் நடத்துவதே திட்டம்.

இரணைமடுவில் குண்டுவீச கிபர் விமானங்கள் வந்தபோது, புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு விமானம் சேதத்துடன் சென்றுவிட்டது. இந்த தாக்குதலை புலிகள் சரியாக ஒருங்கிணைக்கவில்லை. சில துப்பாக்கிகள் முன்னரே சுட தொடங்கி, விமானங்களை எச்சரிக்கையடைய வைத்து விட்டன. அதன்பின் புலிகள் பல டம்மிகள் வைத்தபோதும், வான்படை தாக்குதல் நடத்த வரவில்லை.

தரையிலிருந்து தாக்கும் திட்டம்தான் பொருத்தமானதென இந்தியாவும் தன் பங்கிற்கு ஒரு உதவியை செய்தது. அதுதான் வான்புலிகளிற்கு பெரிய சிக்கலை கொடுத்தது.

Anti Aricraft Artillery வகை விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை இலங்கைக்கு இந்தியா வழங்கியது. இவை தரையிலிருந்து வானிற்கு நீண்டதூரம் சுடக்கூடிய சுடுகலன்கள். பொதுவாக Anti Aricraft Artillery வகைகளை இராணுவ பாஷையில் ack ack துப்பாக்கிகள் என்றும் அழைப்பார்கள். இந்த சுடுகலன்களின் ஆரம்ப வடிவங்கள்தான் இரண்டாம் உலகப்போரில் விமான எதிர்ப்பு ஆயுதங்களாக இருந்தன.

Anti Aricraft Artillery களை இந்தியா கொடுத்தது அல்லவா. இலங்கைக்கு இவை கிடைப்பதற்கு ஆறு வருடங்களின் முன்னரே புலிகளின் பாவனையில் அவை இருந்தன!

இவற்றின் மேம்படுத்தப்பட்ட 12.7, 14.5 mm கனோன்களை புலிகள் உக்ரேனிலிருந்து கடல் மார்க்கமாக 2000ஆம் ஆண்டே வன்னிக்கு கொண்டு வந்துவிட்டனர். 12.7 mm கனோன்கள் சிலவற்றை கடற்படையிடம் இருந்து அதற்கு முன்னரே கைப்பற்றியிருந்தனர். 12.7, 14.5mm கனோன்கள் இலங்கையிடம் ஏற்கனவே குறைந்த எண்ணிக்கையில் இருந்தன. ஆனால் அதை வான்புலிகளிற்கு எதிராக பாவிக்கலாமென்ற ஐடியா அவர்களிற்கு வரவில்லை. 2000ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி கடற்படை தளத்தை புலிகள் கைப்பற்றியபோது 14.5mm கனோன் ஒன்றை கைப்பற்றியிருந்தனர். கடலை நோக்கி மவுண்ட் பண்ணப்பட்டிருந்தது. கடல்வழியாக வரும் புலிகளை தாக்க அங்கு மவுண்ட் பண்ணியிருந்தார்கள்.

பின்னர் புலிகள் 14.5mm கனோன்களில் ஒற்றைபரல் (singlebarrel) உடைய சுடுகலனை அப்பாச்சி என அழைத்தார்கள். இரட்டை பரல் (dowel barrel) உடையவற்றை பூமா என்ற பெயரில் பாவித்தார்கள்.

கடைசியில், இந்தியா வழங்கிய இந்த சுடுகலன்கள்தான் வான் புலிகளின் விமானத்தை சுட்டு விழுத்தியது!

இதேவேளை, விமானப்படையினரிடம் வேறொரு திட்டம் இருந்தது. புலிகளின் சிறியரக விமானங்களை எதிர்கொள்ள தம்மிடமிருந்த சிறியரக விமானங்களை களமிறங்கலாமென ஒரு திட்டம் தீட்டினார்கள். வான்புலிகளின் விமானங்களை தம்மால் வீழ்த்த முடியாமலிருக்கிறது என்பது அவர்களிற்கு ஒரு கௌரவ பிரச்சனையாக இருந்தது. விமானப்படையினால் சமாளிக்கவேண்டிய பிரச்சனையை பாதுகாப்பு கவுன்சில் கூட்டங்களில் இராணுவம், கடற்படையுடனும் ஆலோசிக்க வேண்டிய நிலைமை

**புலிகளின் விமானத்தின் வேகம், குண்டின் எடை என எல்லா விபரங்களையும் துல்லியமாக கணிப்பிட்டு, இந்த ஐடியாவை போட்ட தளபதி ஒரு முக்கிய விசயத்தில் கோட்டை விட்டு விட்டார். அது வான்புலிகளின் தாக்குதல் நேரம். வான்புலிகள் பகலில் தாக்குதல் நடத்துவதில்லை.**

வந்ததை அவர்கள் விரும்பவில்லை. எப்படியாவது புலிகளின் விமானத்தை வீழ்த்த வேண்டுமென விரும்பினார்கள்.

இலங்கை விமானப்படையின் பாவனையில் பதினைந்து வருடங்களிற்கு முன்னர் பாவனையில் இருந்த சிறிய ரக விமானங்களை தூசு தட்டி பறக்கவிடுவதே அந்த ஐடியா.

முதலாம் உலகப்போர் பற்றி இராணுவரீதியாக தெரிந்து வைத்திருப்பவர்களிற்கு dogfight என்ற சொல் தெரிந்திருக்கும். கிட்டத்தட்ட வானத்தில் நடக்கும் கைகலப்புதான் அது. ஒன்றையொன்று நேரடியாக எதிர்கொள்வது. விமானப்படையில் அப்பொழுது நடவடிக்கை கொமாண்டராக இருந்த ஒருவருக்குத்தான் (இப்பொழுது ஓய்வு பெற்றுவிட்டார்) இந்த ஐடியா தோன்றியது.

வான்புலிகள் விமானம் ரேக்ஓவ் ஆகி கொழும்பிற்கு வருகிறதென வைப்போம். விமானப்படையின் ராடர் சிஸ்டத்தில் அது விழுந்ததும், விமானப்படையிடமிருக்கும் சிறியரக விமானங்கள் ரேக்ஓவ் ஆகும். வான்புலிகளின் விமானம் வரும் உயரத்தில் சென்றால், இரண்டும் நேருக்கு நேர் சந்திக்கும். இப்பொழுது வானில் துப்பாக்கி சண்டை நடக்கும். இந்த சமயத்தில்

தொடர்ச்சி 11-ம் பக்கம்...



# கூட்டமைப்பிற்குள் இணையும் புதிய கட்சி...

## ஆசன பங்கீட்டால் இழுபறியில் உள்ள புதிய கூட்டணி!



**கருடன் பக்கம்**

**அரசியல்கைதிகளிற்கு ஆதரவாக பல தரப்புக்கள் களமிறங்கினாலும் ஒருங்கிணைந்த தன்மையில்லை. யார் இதில் அதிகம் சாதிப்பதென்ற ஒரு போட்டித்தன்மையிருந்தது. மாணவர்களின் போராட்டத்திற்கு எதிராக பல்கலைகழக நிர்வாகம்களமிறங்கிய பின்னர்தான், பொதுஅமைப்புக்கள் பல்கலைகழக மாணவர்களிற்கு ஆதரவாக களமிறங்கினார்கள்.**

கருடன்

அடை மழையென்றாலும் சொன்ன நேரத்திற்கு வந்து காத்துக்கொண்டிருந்தார் கருடர். நாம் தான் பிந்தி விட்டோம்.

"வெளியில் கடும் மழை. அதனால் கொஞ்சம் பிந்திவிட்டது" என சம்பிரதாயமாக ஆரம்பித்தோம்.

"அடைமழையென்றாலும் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும். யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள் மழைக்கு ஏனும் போராடவில்லையா?"

"அரசியல்கைதிகள் விடயத்தை பற்றித்தான் கேட்கவேண்டுமென நினைத்தோம். தமிழ் தேசிய கூட்டமைபபு ஏன் பல்கலைகழக மாணவர்களை சந்திக்கவில்லை?"

"இது ஒருபெரிய விடயம். ஊடகங்களில் வெளியான செய்தியை வைத்து நடந்ததை புரிந்துகொள்ள முடியாது. இந்த போராட்டங்களின் ஆரம்பத்திலிருந்து சொன்னால்தான் அதை புரிய வைக்கலாம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வந்தபோது, பத்தொன்பது பொதுஅமைப்புக்கள் இணைந்து கறுப்பு கொடி போராட்டம் நடத்தினார்கள். அதற்கு இரண்டுநாள் முன்னர் ஆளுனரின் அலுவலகத்திற்கு முன்னர் நடந்த போராட்டத்திலும், கறுப்புகொடி போராட்டத்திலும் சிவாஜிலிங்கத்தின் அணுகுமுறை மற்றவர்களிற்கு பிடிக்கவில்லை. இதனால் அந்த கூட்டுக்குள் இரண்டு அணிகள் உருவாகியதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்"

"ம்"

"அதன்பின்னர் பல்கலைகழக மாணவர்கள் வகுப்பு பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைகழகத்திற்குள்ளும் பிளவுகள் இருக்கிறது. அரசியல்கைதியொருவரின் சகோதரி கலைப்பீடத்தில் படிக்கிறார். அதனால் கலைப்பீடம் கொஞ்சம் கடுமையான நிலைப்பாட்டை எடுத்தது. அதேநேரம் சட்டபீடம் இப்படியான போராட்டங்களை அதிகமாக விரும்பவில்லை. ஜனாதிபதியுடனான சந்திப்பிற்கு செல்வதில் சட்டபீடம்தான் அதிக அக்கறைகாட்டியது. கலைப்பீடம் கிட்டத்தட்ட ஒதுங்கி நின்று, "உங்கள் முயற்சியாவது பலனளிக்கிறதா பார்ப்போம்" என்பதை போல நின்றது.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்கள் எதுவும் பலனில்லாமல் போனதையடுத்து, கைதிகள் விடுதலை சிக்கலான கட்டத்தில் இருந்தது. இதில் மேலுமொரு சிக்கல் ஏற்பட்டது. அரசியல்கைதிகளின் வழக்கை அனுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு எதிராக சிவாஜிலிங்கம் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார். அரசியல்கைதிகளின் வழக்கை சட்டத்தரணி இரட்ணவேல் கவனித்து வந்த நிலையில், ஒரு சிங்கள சட்டத்தரணியின் மூலம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின்போது, கைதிகளின் இடமாற்றத்திற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்பு தெரிவிக்காதென்ற ஜனாதிபதியின் உத்தரவாதத்தை ஆளுனர் சிவாஜிலிங்கத்திற்கு அறிவித்திருந்தார். இதுபற்றியும் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்"

"ம்... அந்த வழக்கிற்கு என்ன நடந்தது?"

"30ம் திகதி அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அன்று சிவாஜிலிங்கம் ஏற்பாடு செய்த சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு செல்லவில்லை. வழக்கை திடீரென விசாரணைக்கு எடுத்ததால் சட்டத்தரணியால் செல்ல முடியவில்லையென்கிறது சிவாஜிலிங்கம் தரப்பு.

30ம் திகதி கைதிகளின் போராட்டத்திற்கு முடிவொன்று நீதிமன்றத்தின் ஊடாக கிடைக்கும் என சிவாஜிலிங்கம் தரப்பினர் அரசியல்கைதிகளிற்கு தெரிவித்திருந்தனர். ஆனால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவேபடவில்லையென்றதும் அரசியல்கைதிகள் மனதளவில் சோர்ந்துவிட்டனர். ஏற்கனவே பலநாட்களாக உண்ணாவிரதம் இருந்ததால் உடலளவிலும் சோர்ந்து, உண்ணாவிரதத்தை தொடர முடியாத நிலைமைக்கு ஆளானார்கள்.

31ம் திகதி உண்ணாவிரதத்தை கைவிடும் முடிவை எடுத்தனர். ஆனால் முடிவொன்றும் எட்டப்படாமல் உண்ணாவிரதத்தை கைவிடுவதில் எல்லோருக்கும் தயக்கமிருந்தது. சிவில் அமைப்புக்கள், பல்கலைகழக மாணவர்கள், சிவாஜிலிங்கம் தரப்பு என அரசியல் கைதிகள் விவகாரத்தை கையில் எடுத்த அனைவருக்கும் இது தர்மசங்கடமான நிலைமை.

அரசியல்கைதிகள் விடயத்தை யாரையாவது பொறுப்பேற்க வைத்து, கைதிகளின் போராட்டத்தை முடித்து வைக்கவே இந்த தரப்புக்கள் நினைத்தன. அரசியல் கைதிகளும் அதை விரும்பினார்கள்.

அரசியல்கைதிகள் விவகாரத்தில் வெளியிலிருப்பவர்கள் போராட்டங்களை மேற்கொண்டபோது, பலரும் சுட்டிக்காட்டிய ஒரு விடயம்தான் இதில் நடந்தது"

"என்ன விடயம்"

"எப்படியாவது காரியத்தை சாதிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசியல்கைதிகளிற்கு ஆதரவான போராட்டங்களை திட்டமிட வேண்டுமே தவிர, இதை ஈகோ விவகாரமாக்கி, இதற்கு மேல் செய்வதற்கு ஒன்றுமில்லையென ஒரேயடியாக மாற்றிவிடக்கூடாதென்ற அபிப்பிராயங்களும் இருந்தன. ஆனால் அதையெல்லாம் யாரும் கணக்கில் எடுக்கவில்லை.

இறுதியில், எந்த முடிவும் இல்லாமல் போராட்டத்தை எப்படி முடிப்பதென்ற கேள்வி எழுந்தது. இதையடுத்தே பல்கலைகழக மாணவர்கள் நிர்வாக முடக்கல் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்"

"பல அமைப்புக்கள் அரசியல்கைதிகளிற்காக குரல்கொடுக்கிறார்கள். பல்கலைகழக மாணவர்களின் போராட்டத்தில் வேறு அமைப்புக்களை காணவில்லையே?"

"ம்... அரசியல்கைதிகளிற்கு ஆதரவாக பல தரப்புக்கள் களமிறங்கினாலும் ஒருங்கிணைந்த தன்மையில்லை. யார் இதில் அதிகம் சாதிப்பதென்ற ஒரு போட்டித்தன்மையிருந்தது. மாணவர்களின் போராட்டத்திற்கு எதிராக பல்கலைகழக நிர்வாகம் களமிறங்கிய பின்னர்தான், பொதுஅமைப்புக்கள் பல்கலைகழக மாணவர்களிற்கு ஆதரவாக களமிறங்கினார்கள். நவம்பர் 03ம் திகதி தமிழ் எம்.பிக்களை மாணவர்கள் சந்திக்க அழைத்ததன் நோக்கம், அரசியல்கைதிகள் விடயத்தை அவர்கள் பொறுப்பேற்க வைப்பது. அதனால்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு அங்கு போகவில்லை.

நவம்பர் 02ம் திகதி பல்கலைகழக மாணவர்களிற்கும், பொது அமைப்புக்கள் சிலவற்றின் பிரதிநிதிகளிற்குமிடையில் காதும்காதும் வைத்ததை போல சந்திப்பொன்று நடந்தது. மறுநாள், பல்கலைகழகத்திற்கு வரும் எம்.பிக்களை எப்படி அரசியல்ரீதியாக எதிர்கொள்வது என்பது பற்றி பொதுஅமைப்பின் பிரதிநிதிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். குறிப்பாக, தமிழ் தேசிய கூட்டமைப்பை எப்படியாவது பொறுப்புச்சொல்ல வைக்க வேண்டுமென்பதே திட்டம்.

பல்கலைகழகத்திற்கு சென்றால் அரசியல்கைதிகள் விடயத்தை பொறுப்பேற்க வேண்டியதாகிவிடும், தற்போதைய நிலையில் அரசியல்கைதிகள் விவகாரத்தை அரசியல்ரீதியாக கையாள அரசு

தயாராக இல்லையென்பது தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களிற்கு தெரியும். அதனால் அவர்கள் போகவில்லை"

"ஆனால் தமிழ் தேசியஎகூட்டமைப் பினர் மாணவர்களை சந்திப்பார்கள் என முதலில் செய்தி வந்திருந்ததே?"

"03ம் திகதி மாலை 6.15 மணி வரை மாணவர்கள் கூட்டமைப்பு சந்திப்பு நடக்குமென்றுதான் இருந்தது. ஆனால் எங்கேயென்பதில்தான் இழுபறியிருந்து. மார்ட்டின் வீதியிலுள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் சந்திப்பு நடக்கவிருந்தது. 02ம் திகதி மாலைவரை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட எம்.பிக்கள், மாலையில் யாழ்ப்பாணம் புறப்பட தயாரான சமயத்தில்தான் சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டது"

"ஏன் ஒத்திவைக்கப்பட்டது?"

"பல்கலைகழக மாணவர்களில் ஒரு பகுதியினர் தமிழரசுக்கட்சி அலுவலகத்திற்கு செல்ல தயாராக இருந்தபோதும், இன்னொரு பகுதியினர் அதற்கு தயாராக இருக்கவில்லை. பல்கலைகழகத்திற்குத்தான் மக்கள் பிரதிநிதிகள் வரவேண்டுமென விடாப்பிடியாக நின்றனர்.

பொதுஇடமொன்றில் சந்திக்க தயாராக இருப்பதாக கூட்டமைப்பினர் தகவல் அனுப்பினர். யாழ் நகரத்திலுள்ள ஐஸ்கிறீம் நிறுவனத்தின் விடுதியொன்றையும் முன்பதிவு செய்து வைத்திருந்தனர். ஆனால் மாணவர்கள், தமது கோரிக்கையில் விடாப்பிடியாக நின்றனர். கூட்டமைப்பினரும் பல்கலைகழக பக்கமே போகமாட்டோம் என அடம்பிடித்தனர்.

03ம் திகதி சிவசக்தி ஆனந்தன், டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் ஆகிய எம்.பிக்களும், சிவாஜிலிங்கம், சர்வேஸ்வரன் என இரண்டு மாகாணசபை உறுப்பினர்களும் மாணவர்களை சந்தித்தனர்.

வேறொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். பல்கலைகழக மாணவர்கள், கூட்டமைப்பு சந்திப்பு நடக்குமென்பதை எதிர்பார்த்திருந்த பொதுஅமைப்புக்கள், 04ம் திகதி அனுராதபுரத்தில் அரசியல் கைதிகளை சந்திக்கவிருந்தது. பல்கலைகழக மாணவர்கள், கூட்டமைப்பு சந்திப்பு நடந்துள்ளது, போராட்டத்தை அவர்கள் கையிலெடுப்பார்கள் என கூறி அரசியல்கைதிகளின் போராட்டத்தை முடித்து வைப்பதென்பதுதான் திட்டம். அருட்தந்தை சக்திவேல் தலைமையிலான ஒருகுழு அரசியல்கைதிகளை சந்திக்க, சிறைச்சாலை நிர்வாகத்திடம் அனுமதியும் பெற்று வைத்திருந்தார்கள்.

ஆனால் 03ம் திகதி பல்கலைகழக மாணவர்கள், மக்கள் பிரதிநிதிகளின் சந்திப்பில் அனைவரும் அனுராதபுரம் போவதாக முடிவெடுக்கப்பட்டது. பல்கலைகழக மாணவர்கள் தலைமையில் குழு செல்வதா, பொதுஅமைப்புக்கள் தலைமையில் குழு செல்வதா என்ற குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் பல்கலைகழக மாணவர் பிரதிநிதிகள் சிலர், மக்கள் பிரதிநிதிகளுடன் அனுராதபுரம் செல்வதென்றும், பொதுஅமைப்புக்கள் தனியாக அங்கு செல்வதென்றும் முடிவாகியது.

அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் இந்த போராட்டத்திற்குள் வந்தது பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிற்கு உடன்பாடில்லை. இதை அனுராதபுரத்தில் மாணவர்களிடம் சுட்டிக்காட்டியுமிருந்தார்கள். அதையெல்லாம் விட முக்கியமானது, அரசியல்கைதிகள் விவகாரத்தை பொறுப்பேற்க மாணவர்கள் மறுத்துவிட்டார்கள்"

"இதென்ன புதுக்கதை... இது எப்போது நடந்தது?"

"அனுரார்தபுரத்தில்தான் நடந்தது. அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்தை முடித்து வைக்க அனுராதபுரத்திற்கு இரண்டு அணியாக சென்றார்கள். பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒரு அணி. பல்கலைகழக மாணவர் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் ஒரு அணி. ஏதாவது உறுதிமொழி வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதுதானே சம்பிரதாயம். அரசியல்கைதிகள் விவகாரத்தை பல்கலைகழக மாணவர்கள் பொறுப்பேற்கிறார்கள் என கூறுவோமா என சக்திவேல் அடிகள் கேட்டார். ஆனால் பல்கலைகழக மாணவர்கள் இதை ஏற்கவில்லை. அரசகட்சி உறுப்பினருடன் வந்திருக்கிறீர்கள், ஏன் பொறுப்பேற்க முடியாதென பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலர் எகிறினார்கள்.

இறுதியில் அங்கயன் இராமநாதன் அந்த பொறுப்பை ஏற்றார். இத்தனைநாள் போராட்டமெல்லாம் செய்து, இறுதியில் அரசியல்கைதிகளின் விவகாரத்தை அங்கயன் இராமநாதனிடம் ஒப்படைத்துள்ளார்கள்"

"சரி. தமிழ் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் நிறைய சர்ச்சைகள், குழப்பங்கள் நடப்பதைபோல தெரிகிறதே. உள்ளூராட்சி தேர்தலை எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்?"

"நவம்பர் 04ம் திகதி யாழ்ப்பாணம் மார்டின் வீதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்சி தலைவர்கள் கூடி உள்ளூராட்சி தேர்தல் பற்றி ஆலோசனை நடத்தினார்கள். இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கலந்துகொள்ளவில்லை. ஈ.பி.ஆர்.



எல்.எவ் ஐ தவிர்த்துவிட்டு, தேர்தலில் நிற்கும் எண்ணமில்லையென மாவை சேனாதிராசா கூறினார். தேர்தலில் போட்டியிடுவது பற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் இன்னொருமுறை நேரில் பேசப்போகிறேன் என்றார்.

உள்ளூராட்சி தேர்தலில் தொகுதிப் பங்கீடு பற்றியும் அங்கு பேசப்பட்டது. முன்னரை போல இல்லாமல் தொகுதிப் பங்கீட்டில் தமிழரசுக்கட்சி கொஞ்சம் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது. கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் அனைத்திற்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு தவிசாளர் பதவியாவது வழங்குவதென்றும், தகுதியான வேட்பாளர்களை தேர்வு செய்வதென்றும் முடிவாகியுள்ளது. வேட்பாளர்களை தெரிவுசெய்ய மாவட்ட மட்டத்தில் தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளை கொண்ட குழுக்கள் மாவட்டரீதியில் அமைக்கப்படவுள்ளன".

"அப்படியானால் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் நிலை? தனித்து போட்டியிட போகிறதா?"

"இல்லை. நிச்சயமாக தனித்து போட்டியிடாது. முதலாவதாக இந்தியாவின் சிக்னல் என்னவென்று சுரேஷ் பிரேமச்சந்திரன் பார்த்துக் கொண்டிருக்கிறார். கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்வதை இந்தியா விரும்பாதென சுரேஷ் நினைக்கிறார். இந்தியா தலையிட்டால் சில பல நிபந்தனைகளை அவர் விதிப்பார். கூட்டமைப்பை பதிவு செய்வது அதில் முதன்மையானது. ஆனால் இந்தியாவும் அவசரப்படாமல் பிரச்சனையை நீளக்கயிற்றில் விட்டுள்ளது."

"அப்படியானால் கூட்டமைப்பிலேயே அடுத்த தேர்தலில் போட்டியிட வாய்ப்புண்டா?"

கருடர் சிரித்தார். "அதற்கும் வாய்ப்பு குறைவு".

"புரியும்படி சொல்லுங்கள்"

"பிள்ளையாருக்கு கல்யாணம் நடந்தாலும் கூட்டமைப்பு பதிவுசெய்யப்படமாட்டாது. அது எல்லாவற்றையும் விட, இதுதான் கூட்டமைப்பிலிருந்து வெளியில் செல்வதற்கான நேரமென சுரேஷ் நினைக்கிறார். தமிழரசுக்கட்சியில் அதிருப்தி உள்ளது, அதை அறுவடை செய்யலாமென நம்புகிறார். அப்படி நம்புகிறவர்களுடன் கூட்டு வைக்கலாமா என்றும் யோசிக்கிறார்"

"யார் அப்படி நம்புகிறார்கள்?"

"தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அப்படித்தான் நம்புகிறார்கள். உள்ளூராட்சி தேர்தலிற்கு ஒருபோதும் இல்லாத பரபரப்பில் கூட்டணிப் பேச்சுக்கள் நடக்கின்றன.

அரசியல்கைதிகளிற்கு ஆதரவாக போராட்டம் நடத்திய பொதுஅமைப்புக்களும் தேர்தல் களத்தில் குதித்துள்ளன. "ஊழலற்ற வினைத்திறனான" வேட்பாளர்களை களமிறக்குவதென்பது பொது அமைப்புக்களின் யோசனை. இதுவரை நடந்த போராட்டங்களில் கூட்டணியாக செயற்பட்ட அடிப்படையில் தேர்தல் கூட்டு வைக்க, பொதுஅமைப்புக்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் சில சுற்று பேச்சுக்களை முடித்துவிட்டன. ஆனால் இணக்கப்பாடு எட்டப்படவில்லை"

"எந்த விடயத்தில் முரண்பாடு இருக்கிறது?"

"ஒரேயொரு விடயத்தில்தான் முரண்பாடு. ஆசனப்பகிர்வு. பொது அமைப்புக்கள் தமக்கு 40வீதமும், தமிழ்தேசிய மக்கள் முன்னணிக்கு 60 வீதமும் ஆசன பகிர்வு யோசனை வைத்தார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதை ஏற்கவில்லை. பிறகு 30:70 யோசனை வைத்தார்கள். அதையும் த.தே.ம.மு ஏற்கவில்லை.

பொது சின்னமொன்றில் போட்டியிட வேண்டுமென பொதுஅமைப்புக்கள் விரும்புகின்றன. சைக்கிள் சின்னத்தில் போட்டியிட வேண்டுமெ த.தே.ம.மு விரும்புகிறது. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம்தான் கொஞ்சம் சுவாரஸ்யமானது"

"சொல்லுங்கள்"

"இந்த கூட்டுக்குள் சுரேஷ் பிரேமச்சந்திரனும் வருவார். அவரை நம்ப முடியாது. இந்தியா அழுத்தம் கொடுத்தால், இந்த கூட்டணியை விட்டு, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் சென்றுவிடுவார். இப்படியொரு நிலைமை வந்தால், பொதுவான சின்னத்தில் உருவாகும் கூட்டணி சிக்கலை சந்திக்கும். சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடுவோம் என த.தே.ம.மு கூறியுள்ளது.

வடக்கிலுள்ள பொதுஅமைப்புக்களை போல, கிழக்கில் உள்ள பொது அமைப்புக்களும் உள்ளூராட்சி தேர்தலில் களமிறங்க முயற்சிக்கிறது. ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு எதிராக களமிறங்கும் திட்டம் அவர்களிடம் இல்லை.

ஆனால் வடக்கு கிழக்கில் பொது அமைப்புக்கள் கூட்டாக களமிங்கும் யோசனையும் உள்ளது."

"பொதுஅமைப்புக்களில் எந்தெந்த அமைப்புக்கள் உள்ளன?"

"பல்கலைகழக ஆசிரியர் சங்கம், யாழ் பல்கலைகழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், அரசியல்கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பு, சமூக விஞ்ஞான ஆய்வு மையம் என்பனதான் இதில் தீவிரமாக இயங்குபவை.

இதுதவிர, மன்னார், வவுனியா பகுதிகளில் பொதுஅமைப்புகளின் பெயரில் சிலதனிநபர்கள் இயங்குகிறார்கள். இவர்கள்தான் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தைபொதுஅமைப்புக்களிற்கு தருமாறு கேட்டவர்கள்"

"அப்படியும் ஒரு சம்பவம் நடந்ததா?"

"கடந்த யூன் மாதம் ஆனந்தசங்கரியின் பிறந்ததினத்திற்குவாழ்த்து தெரிவிக்கபோன சில தனிநபர்கள்தான் இந்த கோரிக்கையை வைத்தனர். ஆனால் பொதுஅமைப்புக்கள் இதை ஆதரிக்கவில்லை. இன்னொரு முக்கிய செய்தியும் உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் இன்னொரு புதிய கட்சியும் வருகிறது"

"ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியில் போகலாம் என்பதுதானே · இப்போதைய செய்தி. இன்னொரு கட்சி உள்ளுக்குள் வருகிறதா?"

"இதுவும் ஈ.பி.ஆர்.எல்.எவ்தான். முன்னைய பத்மநாபா அணி. இப்போது தமிழர் சமூக ஜனநாயக கட்சி என்ற பெயரில் இயங்குகிறார்கள். சமூக ஜனநாயக கட்சியை கூட்டமைப்பில் இணைப்பது பற்றி, நவம்பர் 04ம் திகதி நடந்த கூட்டமைப்பு தலைவர்களின் கூட்டத்தில் பேசப்பட்டது. மூன்று கட்சிகளும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன. ரெலோ செயலாளர் நாயகம் சிறீகாந்தாதான் இந்த பேச்சை ஆரம்பித்தார். அவரே சமூக ஜனநாயக கட்சி முக்கியஸ்தர்களுடன் 6ம் திகதி பேசியுள்ளார். வரதராஜபெருமாள் போன்ற கட்சியின் முக்கியஸ்தர்கள் நாட்டில் இல்லாததால், அவர்களுடனும் கலந்துபேச சமூக ஜனநாயக கட்சி அவகாசம் கேட்டுள்ளது. விரைவில் கூட்டமைப்பிற்குள் இன்னொரு கட்சியும் நுழைகிறது" என்றபடி பறந்து சென்றார்.

## அதிகாரிகள்தான் சிக்கலுக்கு காரணம்!

வடமராட்சி கிழக்கு தாளையடியில் அமைக்க உத்தேசிக்கப்படும் தனியார் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பான தகவல்களை கடந்த இதழ்களில் தீபம் வெளிப்படுத்தியிருந்தது. வடமராட்சி பகுதிக்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவே இந்த தனியார் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, தாளையடியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஒரு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கு மேலதிகமாக இன்னொரு தனியார் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியதில், நீர் வழங்கல் வடிகாமைப்புசபையின் அசமந்தமான திட்டமிடலே முக்கிய காரணம். குடாநாட்டிக்கான குடிநீர் திட்ட வரைபை தயாரிக்கும்போது, வடமராட்சியை கணக்கில் எடுக்கவில்லை. வடமராட்சிக்கான குடிநீர் தேவையை தவிர்த்துதான், ஆசிய அபிவிருத்தி வங்கியின் தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் வடிகாலமைப்புசபையின் திட்டத்தின் குறைபாடே, தனியார் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தேவையை ஏற்படுத்தியுள்ளது. இந்த சிக்கலை ஏற்படுத்திய அதிகாரிகள் தற்போது புதிய சிக்கலை எதிர்கொள்கிறார்கள். தனியார் திட்டத்திற்கு எழும் எதிர்ப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடக்கும் திட்டத்திற்கும் எதிராக மாறிவிடலாமோ என்ற அச்சம் நீர்வழங்கல் வடிகாலமைப்புசபை அதிகாரிகளிற்கு ஏற்பட்டுள்ளது.




கிளிநொச்சி நகர அபிவிருத்திப் பகுதியிலுள்ள திருவையாறிலேயே இந்தக்காணியும் கட்டிடத்தொகுதியும் கையகப்படுத்தியிருக்கிறது. இதற்குத் துணையாகவும் ஆதரவாகவும் செயற்பட்டிருக்கிறார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

# பிரபாகரனிற்கே ஆப்பு... கிளிநொச்சியில் நடக்கும் தகிடுதத்தங்கள்!

## காந்தரூபன் அறிவுச்சோலைக்கு நேர்ந்த கதி!


கருணாகரன்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மகிந்த ராஜபக்ஸதான் தோற்கடித்தார் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கக்கூடும். இல்லையில்லை, இலங்கைப் படைகளே புலிகளைத் தோற்கடித்தன என்று சிலர் சொல்லலாம். சர்வதேச சமூகமே புலிகளைத் தோற்கடித்தது என்று சொல்வோரும் உள்ளனர். இதெல்லாம் உண்மையாக இருக்கலாம்.

இந்தச் சக்திகளின் மூலமாகப் புலிகள் தோற்கடிக்கப்பட்டது முதலாவது கட்டமென்றால், இரண்டாம் கட்டமாகப் புலிகள் தோற்கடிக்கப்படுவது தமிழ்த்தரப்பினால். தமிழ் அரசியல் கட்சிகள், அவற்றின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேசங்களில் உள்ள கட்சிகளின் தொண்டர்கள், தமிழ் ஊடகங்கள், அதில் பெரும்பணியாற்றும் ஊடகவியலாளர்கள், புலம்பெயர்தோர்களில் ஒரு தொகுதியினர்... என்று ஒரு பெரிய கூட்டம் இதிலுண்டு.

ஒரு பெரிய படைக்கட்டமைப்பைப் போல எல்லோரும் தங்கள் தங்கள் பங்குக்குத் திட்டமிட்டுப் புலிகளைத் தோற்கடித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டு, இவர்கள் எல்லோரையும் இணைத்துப் பார்த்தீர்கள் என்றால் அல்லது இவர்கள் செய்கிற வேலைகளை ஊன்றிக் கவனித்தீர்கள் என்றால், அப்பொழுதே உண்மை புரியும். இதைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. உங்களுக்கே பல சங்கதிகள் தெரியும். பலருடைய இந்த வேட்டை, விளையாட்டுகளைப் பற்றி விளங்கும்.

> வளர்ந்து வரும் நகரமொன்றில் கண்டிப்பாக நகர அபிவிருத்தி குழு, காணி பயன்பாட்டுக்குழு என்பன செயற்பட வேண்டும். ஆனால் கிளிநொச்சியில் இரண்டும் செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன. காணி பயன்பாட்டு குழுவின் சிபாரிசின் அடிப்படையிலேயே பொது தேவைகளிற்கு காணி வழங்கப்பட வேண்டும். இங்கு அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.




முதல் தரப்பினர் புலிகளின் நேரடி எதிரிகள். ஆகவே வெளிப்படையானவர்கள். இரண்டாவது தரப்பினர் நண்பர்களைப் போல, ஆதரவாளர்களைப் போல, விசுவாசிகளைப் போன்று நடிக்கிற எதிரிகள். இவர்கள் புலிகளின் ஆட்களைப் போல இருந்து கொண்டே புலிகளைத் தின்று ஏப்பம் விடுகிறவர்கள். இவர்கள் மாவீரர்களைப் பற்றிக் கதைப்பார்கள். உயிரோடுள்ள போராளிகளைக் கவனிக்கமாட்டார்கள். அரசியற் கைதிகளைப் பற்றிப் பேசுவார்கள். கைதிகளின் விடுதலையைப் பற்றியோ, விடுதலையாகி வந்து சிரமப்படுவோரைப் பற்றியோ அக்கறைப்பட மாட்டார்கள். "படையினர் வெளியேற வேண்டும்" என்று வெளியே சொல்வார்கள். படைத்தரப்பு வெளியேறக்கூடாது என்று உள்ளே நினைப்பார்கள். "பௌத்த விகாரைகள் கட்டப்பட வேண்டாம்" என்று சத்தம் போடுவார்கள். விகாரைகள் கட்டப்படும்போது சத்தமில்லாமல் இருப்பார்கள். அடிக்கடி விடுதலைப் புலிகளைப் பற்றியும் பிரபாகரனைப் பற்றியும் சொல்லிக் கொள்வார்கள். ஆனால், புலிகளின் வழிமுறைகளையோ நடைமுறைகளையே பின்பற்ற மாட்டார்கள். தேவைக்குத் தொட்டுக் கொள்ளும் ஊறுகாயைப்போல, இவர்களுடைய அரசியலுக்கும் ஆதாயங்களுக்கும் புலிகள் ஊறுகாயாக்கப்பட்டுள்ளனர்.

இப்படிப் புலிகளையே பயன்படுத்தி, புலிகளைத் தோற்கடிக்கும் ஒரு காரியத்தை கிளிநொச்சியிலும் ஒரு குழு செய்து கொண்டிருக்கிறது. இவர்கள் புலிகளால் (பிரபாகரனால்) ஒரு காலம் உருவாக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்களுக்கான "காந்தரூபன் அறிவுச் சோலை" யின் பதிவைப் பயன்படுத்தி "ஷிரி அறிவுச்சோலை" என்ற சிறுவர் இல்லத்தை ஆரம்பித்துள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் சட்ட விதிகளின்படி புதிய சிறுவர் இல்லங்களைக் கண்டபடி ஆரம்பிக்க முடியாது. ஆகவே, புலிகள் தமது காலத்தில் "அறிவுச்சோலை சிறுவர் இல்லம்" என்ற பெயரில் பதிவு செய்து நடத்திய, (காந்தரூபன்) அறிவுச் சோலையின் பதிவு இலக்கத்தைத் தங்களுடைய சிறுவர் இல்லத்தை ஆரம்பிப்பதற்குப் பயன்படுத்தியுள்ளனர். செல்வாக்கான வட்டாரமொன்றைப் பிடித்தே இதைச் சாத்தியமாக்கியுள்ளனர்.

காந்தரூபன் அறிவுச்சோலையின் உருவாக்ககதையை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும். வல்வெட்டித் துறையை சேர்ந்த காந்தரூபன் மிகச்சிறிய வயதிலேயே புலிகளுடன் இணைந்து விட்டார். இந்தியப்படைகளுடனான மோதல் காலத்தில் பிரபாகரனுடன் மணலாற்று காட்டில் காந்தரூபனும் தங்கியிருந்தார். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த காந்தரூபன், தனது பதின்னான்காவது வயதில் ஆயுதப்பயிற்சி முடித்து போரிட தொடங்கிவிட்டார். தொண்டமனாறு காவலரணில் இலங்கை படைகளுடன் 1987இன் தொடக்கத்தில் நடந்த மோதலில் இலங்கை படைகளிடம் உயிருடன் பிடிபடக் கூடிய நிலையேற்பட்டபோது, சயனைட் அருந்தினார். பின்னர் காப்பாற்றப் பட்டபோதும், அது உடல்பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. மணலாற்று காட்டில் தங்கியிருந்த சமயத்தில், ஒருநாள் பிரபாகரன் அவருடன் பிரியமுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது "தான் படிக்க விரும்பியிருந்தபோதும், அதற்கான வசதி தன்னுடைய குடும்பத்தில் இல்லாத காரணத்தினால்,

தொடர்ச்சி 19-ம் பக்கம்...

### வருந்துகிறோம்

கடந்த வார(05.11.2017) தீபம் இதழில் இடம்பெற வேண்டிய அரசவேலைவாய்ப்பு விபரங்கள் தவறுதலாக இடம்பெறவில்லை. இந்த தவறு நடப்பு இதழில் சரி செய்யப்பட்டுள்ளதென்பதை வாசகர்களிற்கு அறியத் தருகிறோம்.

## வேண்டாம் தனியார்மயம்!

நாட்டில் மீண்டுமொருமுறை எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதிகாலையிலேயே எழுந்து பெற்றோலுக்கு வரிசையில் நிற்பதே மக்களின் அன்றாடப்பணிகளில் ஒன்று என கடந்த நான்கு மாதங்களில் இரண்டாவது முறையாக பெரும் அலைக்கழிவு ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் இதற்கு விதவிதமான விளக்கங்கள் கொடுக்கிறது. எதிரணி இந்த சந்தர்ப்பத்தை தமது அரசியல் செய்வதற்கான தருணமாக நினைக்கிறது. இதனால் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் பெரும் அமர்களமே நிகழ்ந்தது.

எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு இந்த அரசாங்கமா, கடந்த அரசாங்கமா பொறுப்பு என பாராளுமன்றத்தில் மாறிமாறி மல்லுக்கட்டுகிறார்கள். இந்த மோசமான நிலைமை ஏன் ஏற்பட்டதென்ற நியாயமான விசாரணைகள் இல்லாமல், இப்படியான குற்றச்சாட்டுக்கள் சுமத்திக் கொண்டிருப்பது, அரசியல் ஆதாயங்கள் எதையாவது பெற உதவுமே தவிர, பிரச்சனையை தீர்க்க உதவாது.

இலங்கையின் பொருளாதாரம் திறந்துவிடப்பட்டு, பிராந்திய வல்லரசுகள் சந்தையை தீர்மானிக்கும் நிலைமையை ஏற்படுத்திய ஒவ்வொரு அரசாங்கங்களும் இந்த பிரச்சனைக்கு பொறுப்பேற்க வேண்டும். உள்நாட்டு வர்த்தக சந்தையை வெளிநாடுகளிற்கு ஒப்படைத்ததில் இரண்டு பிரதான கட்சிகளிற்குமே சமமான பங்குண்டு. உள்நாட்டு எரிபொருள் விநியோகத்தை தீர்மானிக்கும் சக்தியாக வெளிநாட்டு நிறுவனமொன்று இருப்பது மிக ஆபத்தானது. சந்தையில் எரிபொருள் இருப்பு, விலை அனைத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களே தீர்மானிப்பது நல்ல பொருளாதார கொள்கையும் கிடையாது.

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

சந்தையின் ஏகபோகம் தனியாரின் கைக்கு செல்வதன் முக்கிய விளைவுதான் அண்மைய தட்டுப்பாடு. தரம் குறைந்த எரிபொருளை இலங்கையில் விநியோகிக்க இந்திய நிறுவனம் முயற்சித்தது, அதில் அரசியல் அழுத்தங்களும் இருந்தன என அமைச்சர் அர்ஜூன ரணதுங்க பகிரங்கமாக கூறியிருக்கிறார். இதைவிட வேறொரு ஒப்புதல் வாக்குமூலமும் வேண்டியதில்லை.


அரசதுறையிலேயே ஊழல் மோசடிகள் பெருகிக்கிடக்கும் சூழலில், தனியார் நிறுவனங்களிடம் அன்றாட வாழ்வுடன் தொடர்பான பொருட்களை வழங்குவதன் ஆபத்தை இது உணர்த்துகிறது. அரசதனியார் கூட்டுறவு செயற்பாடு உலகளவில் வெற்றியடைந்த உதாரணங்கள் நிறைய உள்ளன. ஆனால், அது இலங்கை போன்ற நாடுகளில் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன.

வல்லரசுகளின் ஏஜெண்டாக செயற்படும் பெரு நிறுவனங்களை தட்டிக்கேட்க சிறிய நாடுகளால் முடிவதில்லை. மீறி நடந்தால், வல்லரசு நாடுகளே நேரடியாக தலையிட்டு அழுத்தம் கொடுக்கின்றன. வல்லரசுகளில் தங்கியிருக்கும் சிறிய நாடுகள் தவிர்க்கவியலாமல், அந்த அழுத்தங்களை ஏற்க வேண்டியிருப்பதே யதார்த்தம்.

இலங்கைக்கு எரிபொருள் வழங்கும் பொறுப்பை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்தாலும், அதை முறையாக கண்காணிக்கும் வல்லமை அரசுக்கு தேவை. அது முடியாவிட்டால் அதை அரசு பொறுப்பேற்க வேண்டும்.

ஏனெனில், நிறுவனங்களிற்காக மக்கள் அல்ல. மக்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றும் ஒப்பந்தங்களை மட்டுமே நிறுவனங்கள் பெற்றுள்ளன.

எஸ்.எம்.அனாசியா



# தமிழ் தேசிய கூட்டமைப்பு எப்பொழுது உடையும் தெரியுமா?

## ஒரு வரலாற்று ஆரூடம்

தமிழ் தேசிய ட்டமைப்பின் ஒற்றுமை பற்றி இப்போது பலரும் பேசுகிறார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியேறுமா வெளியேறாதா என்ற வாதப்பிரதிவாதங்கள் வலுவடைந்துள்ள சமயம் இது. தமிழ் தேசிய ட்டமைப்பு ஒற்றுமையாக இருக்க வேண்டுமா இல்லையா என்பதற்கு அப்பால், தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஒற்றுமையான அரசியல் செயற்பாட்டிற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதையும் அவதானிக்க வேண்டும். தமிழ் அரசியல் கட்சிகள், இயக்கங்களிற்குள் ஒற்றுமையான கூட்டணியொன்பது அதிக காலம் நீடிக்கவில்லையென்பதே வரலாற்று யதார்த்தம். ஏதோ நெருக்கடிகளால்தான் கூட்டணிகள் உருவாகின. கூட்டணிக்கான சுயநெருக்கடிகள் இல்லாதபோது கூட்டணிகள் கலைந்தன என்பதே வரலாறு.

1972 இல் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்ட சமயத்தில், பரமவைரிகளாக இருந்த அமரர்கள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஜி.ஜி.பொன்னம்பலம் இருவரும் சந்தித்தார்கள், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கான அடித்தளத்தை இட்டார்கள் என வரலாறுகள் எழுதப்படுகின்றன. ஆனால் இதை இன்னொரு விதத்திலும் பார்க்கலாம். அப்பொழுது தமிழர்கள் மத்தியில் மாறிமாறி செல்வாக்கு செலுத்திய இரண்டு பிரதான கட்சிகளான தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் இரண்டையும் மேற்படி தலைவர்கள் தலைமைதாங்கினார்கள். இவர்கள் தலைவர்களாக இருந்தாலும், தளபதிகளாக இருந்தவர்கள் (அப்படித்தான் அழைத்துக் கொண்டார்கள்) தமிழரசுக்கட்சிக்கு அமிர்தலிங்கம், தமிழ் காங்கிரசிற்கு சிவசிதம்பரம். இருவருமே 1970 தேர்தலில் தோல்வியடைந்திருந்தனர். இதுவரையான தமது அரசியல் பாணி இனி வெற்றியளிக்காமல் போகலாம், புதிய உபாயமொன்றை கண்டடைய வேண்டுமென்ற நெருக்கடி இரண்டு கட்சிகளின் பிரமுகர்களிற்கு ஏற்பட்டிருக்கலாம். தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாகியதில் இந்த பின்புலத்தை குறைத்து மதிப்பிட முடியாது.

அடுத்து வந்த பத்து வருடம், இந்த கூட்டணியின் வெற்றி சூத்திரத்திற்கான காலம். கூட்டணி நீடித்தது. இளைஞர்களினால் புதிய அரசியல் மாற்றம் ஏற்படுத்தப்பட்டபோது, கூட்டணி காலாவதியானது.

1984இல் கருணாநிதியின் முன்முயற்சியில் தமிழ் ஆயுத இயக்கங்களிற்குள் ஒரு கூட்டு ஏற்படுத்தப்பட்டது. தமிழ் தேசிய விடுதலை முன்னணி என்ற அந்த கூட்டில் விடுதலைப்புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், ரெலோ அங்கம் வகித்தன. கருணாநிதி தனது செல்வாக்கை பாவித்து ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கங்களை ஒருங்கிணைத்தார். கருணாநிதியின் அறிவுரையை தவிர்க்கும் நிலையில் இந்த கட்சிகளின் தலைவர்கள் இருக்கவில்லை. ஐக்கிய முன்னணியாக செயற்படலாமென்ற மனநிலை இந்த தலைவர்களிடம் இருந்ததுதான். ஆனால், ஒருகூட்டணியாக அவர்களை திரட்டியதில் கருணாநிதியின் பாத்திரம் முக்கியமானது. சக இயக்கங்கள் பொதுவேலைத்திட்டத்தில் இணைந்ததால் தவிர்க்க முடியாத ஒரு சூழலில்தான் விடுதலைப்புலிகள் இந்த கூட்டணியில் இணைந்தனர். ஆனால் ஒரு வருடத்திற்குள் இந்த கூட்டணி சிதைந்து, கூட்டில் இருந்த இயக்கங்களே பெரும் மோதலில் ஈடுபட்டன.

1989 பாராளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி மீண்டும் களமிறங்கியது. அப்படி சொல்வதுகூட தவறு. களமிறக்கப்பட்டது என்பதே மெய். அப்பொழுது இலங்கையில் பெரும் அரசியல் சதுரங்கம் ஆடப்பட்டுக் கொண்டிருந்தது. இந்திய அமைதிப்படையின் வருகை பெரும்பான்மை சிங்களவர்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. சிங்கள மக்களின் உணர்வுகளை வைத்து பிரேமதாச அரசியல் செய்துகொண்டிருந்தார். இந்தியாவை வெளியேற்ற வேண்டிய தேவை புலிகளிற்கும் இருந்தது. வடக்கு கிழக்கில் புலிகளுடன் ஆயுத மோதலில் ஈடுபட்டிருந்த இந்தியா, தெற்கில் சிங்கள அரசியல் தலைவர்களுடன் அரசியல் மோதலில் ஈடுபட்டிருந்தது. இந்த இழுபறிகாலத்தில் தனக்கு தோதான ஒரு அரசியல்சக்தியை வடக்கு கிழக்கிலிருந்து உருவாக்க நினைத்தது. தமிழர் விடுதலை கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் என்பவற்றை திரட்டி, தமிழர் விடுதலை கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட வைத்தார்கள். 1990 இல் இந்திய அமைதிப்படை வெளியேறியதும், அதை வழிநடத்த யாருமிருக்கவில்லை. கூட்டு சிதறியது.

தமிழ் அரசியலில் அதற்கு பின்னர் ஏற்பட்ட பெரிய கூட்டு இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பு. 2001இல் தமிழீழ விடுதலைப்புலிகளின் பின்னணியில் உருவாக்கப்பட்டது. அது எப்படி உருவாக்கப்பட்டது என்பதற்கு ஒரு நல்ல உதாரணம், தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பிற்குள் அழைத்து வரப்பட்ட விதம்.

அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்தவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி. சைக்கிள் சின்னத்தை கைவிட அவர் தயாராக இருக்கவில்லை. பத்திரிகையாளர் சிவராம் அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு, கூட்டமைப்பிற்குள் வராவிட்டால் துப்பாக்கி பேசும் என்ற சாரப்பட மிரட்டியே, தமிழ் காங்கிரஸை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் வரவைத்தார்.

விடுதலைப்புலிகள் இருந்தவரை "ஒழுங்கு மரியாதையாக" இருந்த கூட்டமைப்பு இல் முதலாவது உடைவை சந்தித்தது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியேறியது. இப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியேறும் நிலைமை.

தமிழர்களிற்கு கூட்டுணர்வு வெகு அரிது. 1972இல் ஏற்பட்டதை போன்ற அரசியல் நெருக்கடி இருந்தால், கட்சிகளின் ஐக்கியம் நீடிக்கும். அல்லது யாராவது கண்காணிப்பாளர்கள் அவசியம். இரண்டும் இல்லாத இந்த சூழலில் கூட்டமைப்பு இதுவரை உடையாமலிருப்பதே ஆச்சரியம்தான்!

# ஒரேயொரு தண்ணீர்போத்தல் கிடைக்காத அகதி!

மருதன்

‘தினமும் உணவுவேளை வரும்போது முகாமில் உள்ள அகதிகள் வரிசையாக உங்களிடம் வருவார்கள். ஒவ்வொருவரிடமும் ஓர் அடையாள அட்டை இருக்கும். அதில் அவருடைய பெயரும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறிக்கப்பட்டிருக்கும். அதை வாங்கிப் பாருங்கள். எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை உணவுப்பொட்டலங்களை அவர்களுக்கு வழங்கவேண்டும். குழந்தைகளுக்கு மட்டும் ஒரு பழச்சாறு பாக்கெட் கூடுதலாக அளிக்கவேண்டும். உங்களால் இதைச் செய்யமுடியும், இல்லையா?’

இதைவிட எளிமையான ஒரு வேலை இருக்காது என்று நினைத்துக்கொண்டார் செல்சியா ரோஃப். கிரீஸில் உள்ள ஓர் அகதி முகாமில் பணியாற்றுவதற்காக அவர் வந்திருந்தார். அடிப்படையில் அவர் ஒரு பத்திரிகையாளர். அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சலீஸ் பகுதியைச் சேர்ந்தவர். ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை நடத்திவருகிறார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்துகொண்டிருக்கிறார். அகதிகள் பிரச்னை குறித்து ஓராண்டுக்காலம் கட்டுரைகள் எழுதிவந்திருக்கிறார்.

அகதிகள் யார், அவர்கள் எப்படி உருவாகிறார்கள், அவர்கள் ஏன் தங்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள், முகாம்களில் அவர்களுடைய வாழ்க்கை எப்படியிருக்கும் என்பது தொடங்கி ஏராளமான தரவுகளை அவரால் இணையத்திலிருந்து பெறமுடிந்தது. ரோஹிங்கியா முஸ்லீம்கள் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமா? சிரிய அகதிகள் குறித்த அறிமுகம் வேண்டுமா? ஆப்கானிஸ்தானிலும் இராக்கிலும் நடைபெற்ற போர்கள் குறித்த பின்னணி தெரியவேண்டுமா? பிரச்னையே இல்லை. இணையத்தைத் திறந்தால் செய்திகளும் கட்டுரைகளும் ஆய்வுக் குறிப்புகளும் புள்ளிவிவரங்களும் மலை மலையாகக் கொட்டிக் கிடந்தன. புகைப்படக் கட்டுரைகளுக்கும் ஆவணப் படங்களுக்கும்கூடக் குறைவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதனால் எல்லாப் பத்திரிகையாளர்களையும்போல் செல்சியாவுக்கும் அகதிகள் குறித்த தரவுகள் திரட்டுவதிலும் உருக்கமான கட்டுரைகளை எழுதுவதிலும் சிக்கல்கள் எதுவும் இருக்கவில்லை.

இவ்வளவு மாய்ந்து மாய்ந்து எழுதுகிறோமே, நாம் ஏன் ஓர் அகதி முகாமை நேரில் சென்று பார்வையிடக்கூடாது என்று ஒரு நாள் செல்சியாவுக்குத் தோன்றியது. வெறுமனே பார்வையிடுவதைவிட முகாமில் சிறிது காலம் பணியாற்றுவதன்மூலம் அகதிகளை இன்னும் நெருக்கமாக அறிந்துகொள்ள முடியும் அல்லவா? கிரீஸ் நாட்டின் தலைநகரமான ஏதென்ஸிலிருந்து இரண்டு மணி நேரப் பயணத்தில் அமைந்திருந்த ரிட்சோனா என்னும் அகதி முகாம் செல்சியாவின் உதவியை ஏற்றுக்கொள்ள முன்வந்தது.

அந்த முகாமில் மொத்தம் 900 அகதிகள் இருந்தனர். அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் சிரியர்கள். மற்றவர்கள் இராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் போக, பாலஸ்தீனிய மற்றும் குர்தி அகதிகளும்கூட இருந்தனர். ஒருகாலத்தில் ராணுவ முகாமாக இருந்த அந்த இடம் இப்போது அகதி முகமாக மாற்றப்பட்டிருந்தது. மின்சாரம் கிடையாது. தண்ணீர் கிடைப்பது சிரமமாக இருந்தது. முரட்டுத் துணிகளைக் கொண்டு கூடாரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. தரை சீரற்றதாக இருந்தது. களிமண்ணையும் குப்பைகூளங்களையும் அள்ளியெடுத்துவந்து அடுப்புகளை உருவாக்கியிருந்தார்கள் அகதிகள். அடுப்புக்கு அருகிலேயே படுத்து உறங்கினார்கள்.

முதல்முறை அந்த முகாமுக்குள் அடியெடுத்து வைத்தபோதே செல்சியாவுக்குத் தெரிந்துவிட்டது. நான் இதுவரை புத்தகங்களிலும் இணையத்திலும் செய்தித்தாள்களிலும் பார்த்த முகாம் இதுவல்ல. இங்குள்ள மனிதர்கள் வேறு உலகைச் சேர்ந்தவர்கள். இந்த உலகம் இதுவரை நான் காணாதது. எலிகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தன. சில குழந்தைகள் எலிகளைத் துரத்திக் கொண்டிருந்தார்கள். அழுக்கு உடைகளை அணிந்த சிறுவர்கள் ஆர்ப்பாட்டமாகக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லாப் பக்கங்களிலிருந்தும் மனிதர்கள் இருமிக்கொண்டிருந்தார்கள். காசநோய் அந்த முகாமில் சகஜம் என்று சொல்லப்பட்டது. மனச்சிதைவை நெருங்கிக் கொண்டிருந்த பலரையும் அவர் கடந்துசெல்ல நேரிட்டது.

ஒரு சிறுமி எங்கிருந்தோ ஓடிவந்து செல்சியாவின் கால்களைக் கட்டிக் கொண்டாள். ‘ஹலோ’ என்றபடி கன்னத்தில் குழி விழ புன்னகைத்த அந்தச் சிறுமியிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் ‘ஹலோ’ என்று பதிலுக்குப் புன்னகைத்தார் செல்சியா. முகாமுக்கு அருகில் இருந்த மின்சாரக் கம்பங்களிலிருந்து வயர்களை இழுத்துவந்து சிலர் செல்போன்களுக்கு உயிரூட்டிக்கொண்டிருந்தார்கள். அது எவ்வளவு ஆபத்தானது என்பதை ஒருவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

யாரும் எதையும் உணரும் நிலையில் அங்கு இல்லை. பிரான்ஸில் அமைந்திருந்த மற்றொரு முகாமுக்குச் சென்றபோது அவர் கிட்டத்தட்ட இதே காட்சிகளையே மீண்டும் காண வேண்டியிருந்தது. நாம் ஒரே மனிதர்களைத்தான் வெவ்வேறு இடங்களில் மீண்டும் மீண்டும் சந்தித்துக்கொண்டிருக்கிறோமா என்று குழப்பம் வந்துவிட்டது. அதே இருமல் சத்தம். சிறிது சிறிதாக மனிதர்களை அரித்துத் தின்னும் விதவிதமான நோய்கள். அதே இருமல் சத்தம். அதே அழுக்கு. எதற்கும் கவலைப்படாமல் பட்டாம்பூச்சிகளைப் போல் திரிந்து கொண்டிருக்கும் குழந்தைகள்.






நீங்கள் என் நண்பரா என்று ஒரு சிறுமி ஓடிவந்து செல்சியாவிடம் கேட்டார். தன் காலைவிடப் பெரிய அளவு கொண்ட ஒரு எலி இறந்துகிடந்ததை அவர் கண்டார். அதற்கு அருகிலும் குழந்தைகள் விளையாடிக் கொண்டுதான் இருந்தார்கள். ‘நாங்கள் விலங்குகள் அல்லர்; மனிதர்கள்’ என்று ஒரு முகாமில் கறுப்பு மையில் யாரோ நல்ல கையெழுத்தில் எழுதியிருந்தார்கள். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள், உங்கள் நாடு எப்படி இருக்கும், நீங்கள் வசிக்கும் வீடு எப்படி இருக்கும் என்று சிலர் செல்சியாவிடம் கேள்வி எழுப்பினார்கள். எனக்கு ஆங்கிலம் கற்றுத்தரமுடியுமா என்று சிரியர்கள் சிலர் ஆர்வத்துடன் அவரை நெருங்கினார்கள். நீங்கள் பத்திரிகையாளர்தானே, நிலைமை எப்போது சீரடையும்... உங்களுக்குத் தெரியும் அல்லவா என்று சிலர் கேட்டார்கள். ஆனால் செல்சியாவிடம் கேள்விகளே அதிகம் இருந்தன; பதில்கள் அல்ல.

செல்சியா தினமும் கொஞ்சம் விறகு வெட்டினார். சிலருக்கு ஆங்கிலம்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

கற்றுக்கொடுக்க முயற்சி செய்தார். உணவுத்தயாரிப்பில் உதவினார். பொட்டலங்களை எடுத்துச் சென்று விநியோகித்தார். ஒரு நாள் உணவுக் கிடங்குக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தேவையான பொட்டலங்களைக் கணக்கிட்டு அளிக்க வேண்டிய எளிமையான பணி. செல்சியா தன் வேலையை ஆரம்பித்தார். மதிய நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. அகதிகள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். முதலில் ஒரு பெண் தன் அட்டையுடன் செல்சியாவை நெருங்கினார். செல்சியா அட்டையை வாங்கிப் பார்வையிட்டார். வளர்ந்தவர்கள் இருவர், குழந்தைகள் மூவர். செல்சியா ஐந்து உணவுப் பொட்டலங்களை எடுத்துக்கொண்டார். குழந்தைகளுக்கு மூன்று பழச்சாற்றுப் பொட்டலங்கள். எல்லாவற்றையும் ஒரு

**“அவள் இதற்கு முன்பு எப்படி வாழ்ந்திருப்பாள்? அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவள்? வசதியானவளா, ஏழையா? சொந்த வீடு இருந்ததா? தன் குழந்தைகளை அவள் இதற்குமுன்பு எப்படி வளர்ந்துவந்தாள்? இறந்த எலிகளோடு தன் குழந்தைகள் விளையாடுவதை அவள் அனுமதித்திருப்பாளா?’**

பெரிய பொலித்தீன் பையில் போட்டு அந்தப் பெண்ணிடம் ஒப்படைத்தார்.

ஒரு புன்னகையுடன் அதைப் பெற்றுக்கொண்ட அந்தப் பெண் தயங்கியபடியே நின்றுகொண்டிருந்தார். நீங்கள் போகலாம் என்று செல்சியா சொன்னபிறகும் அவர் நகரவில்லை. மாறாத புன்னகையுடன் அவர் செல்சியாவிடம் கேட்டார். “எனக்கு ஒரு தண்ணீர்



போத்தல் அளிக்கமுடியுமா?” “ஓ, தருகிறேன் இருங்கள்” என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார் செல்சியா. வரிசையாகத் தண்ணீர் போத்தல்கள் அடுக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்றார். ‘வெளியில் ஒரு பெண் தண்ணீர் போத்தல் கேட்கிறார், எடுத்துக்கொள்ளவா?’

அங்கே இருந்த அதிகாரி விளக்கினார். “இதோ பார் செல்சியா, தண்ணீர் போத்தலுக்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. கேட்பது யார், அவர் எந்த முகாமைச் சேர்ந்தவர், அவருக்கு ஒரு நாளைக்கு எத்தனை போத்தல் வரை தரலாம் என்று சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. விதிமுறைகளை மீறி எதையும் யாருக்கும் அளிக்கக்கூடாது, புரிகிறதா?” செல்சியா அந்த அட்டையைக் கவனமாக ஆராய்ந்தார். குடிநீர் என்னும் தலைப்பின் கீழ் அழுத்தமாக ஒரு கோடு கீறப்பட்டிருந்தது. அதன் பொருள், அவர் குடும்பத்துக்குத் தேவையான குடிநீரை அவர் ஏற்கெனவே பெற்றுக்கொண்டு விட்டார் என்பதுதான்.

செல்சியா அந்தப் பெண்ணிடம் இதை விளக்கிச் சொல்லவேண்டியிருந்தது. “இதோ பாருங்கள் அம்மா, உங்களுடைய இன்றைய உணவுக்கணக்கில் குடிநீர் வராது. உணவுப் பொட்டலங்கள் மட்டும்தான்.” அந்தப் பெண் நகரவில்லை. புன்னகை மாறாத முகத்துடன் மெல்லிய குரலில் பேசினார். “எனக்குக் கொடுக்கப்பட்ட குடிநீரை நான் சமைப்பதற்குப் பயன்படுத்திவிட்டேன். அழுக்கு நீரில் சமைக்க மனமில்லாததால் இப்படிச் செய்துவிட்டேன். அது தவறு என்று எனக்குத் தெரியும், ஆனால், வேறு வழி தெரியவில்லை. தயவு செய்து இந்தமுறை மட்டும் இன்னொரு போத்தல் கூடுதலாக அளிக்கமுடியுமா?”

அன்றைய பணி முடிந்து தன்னுடைய ஹொட்டலுக்குத் திரும்பிப் போகும்வரை செல்சியாவின் நினைவுகளை அந்தப் பெண்ணின் புன்னகைக்கும் முகமே ஆக்கிரமித்திருந்தது. அதற்குப் பிறகு ஐரோப்பாவில் உள்ள வேறு சில அகதி முகாம்களுக்குச் சென்று பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. சிலவற்றில் பணியாற்றவும் முடிந்தது. விறகு வெட்டுவது தொடங்கி உணவுத் தயாரிப்பு வரை ஒவ்வொரு முகாமிலும் ஒவ்வொரு விதமான பணி. தனது பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் லாஸ் ஏஞ்சலீஸ் திரும்பினார் செல்சியா.

முகாமும் அவரோடு சேர்ந்து ஒட்டிக்கொண்டு விமானத்தில் ஏறி இறங்கி அவர் வீட்டுக்குள் நுழைந்துவிட்டிருந்தது. கிறீச் கிறீச் என்று கத்தும் எலிகளையும். வெறித்த கண்களோடு சுற்றிக்கிடந்த மனிதர்களையும், கூச்சலிட்டு விளையாடும் குழந்தைகளையும் அவரால் மறக்க முடியவில்லை. முகாமின் அழுக்கும் சத்தமும் வாசமும் பிரிக்க முடியாதபடி தன்னோடு கலந்துவிட்டதை அவர் உணர்ந்தார்.

படுக்கையில் சென்று விழுந்தார். மெலிதான பஞ்சுத்தலையணையும் மெத்தையும் அவரை உள்வாங்கிக் கொண்டன. எத்தனை முயன்றும் அந்தப் பெண்ணின் அழகான புன்னகையை அவரால் மறக்க முடியவில்லை. அவர் கேட்டது ஒரே ஒரு தண்ணீர் போத்தல் மட்டுமே. ஆனால், அதை அளிப்பதற்குக்கூட விதிமுறைகள் இடம்கொடுக்கவில்லை.

“அவள் இதற்கு முன்பு எப்படி வாழ்ந்திருப்பாள்? அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவள்? வசதியானவளா, ஏழையா? சொந்த வீடு இருந்ததா? தன் குழந்தைகளை அவள் இதற்குமுன்பு எப்படி வளர்ந்துவந்தாள்? இறந்த எலிகளோடு தன் குழந்தைகள் விளையாடுவதை அவள் அனுமதித்திருப்பாளா? அசுத்தமான நீரில் சமைக்கும் வழக்கம் அவளுக்கு முன்பே இருந்திருக்குமா? ஒரேயொரு குடிநீர் போத்தலுக்காக ஓர் அந்நிய நாட்டுப் பணியாளரிடம் குழைந்து, புன்னகைத்து, கெஞ்சவேண்டிய அவசியம் அவருக்கு ஏன் நேரவேண்டும்? என்னால் அதற்குமேல் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வெடித்து அழ ஆரம்பித்துவிட்டேன்” என்கிறார் செல்சியா.

நீங்கள் வாசித்துத் தெரிந்துகொள்ளும் முகாம் வேறு, உண்மையான முகாம் வேறு என்கிறார் செல்சியா. நாம் ஏற்கெனவே சந்தித்த இராக்கைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி ஹிப்பா திடமான குரலில் சொல்கிறார். ‘போர் என்றால் என்னவென்று எனக்குத் தெரியும். நான் போரைப் பார்த்திருக்கிறேன். ஒரு குண்டு அருகில் வந்து விழுந்தால் எப்படி இருக்கும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். ஒவ்வொருமுறை சத்தம் வரும்போதும் நாங்கள் எல்லோரும் காதைப் பொத்தியபடி ஒருவரையொருவர் பயத்துடன் பார்த்துக்கொள்வோம். தலைக்கு மேலே விமானங்கள் பறந்து சென்றுகொண்டிருக்கும். பூமி அதிர்ந்து நடுங்க ஆரம்பிக்கும். நாங்கள் உடனே கட்டிலுக்குக் கீழே தவழ்ந்து சென்றுவிடுவோம். உலகம் எங்களைச் சுற்றி வெடித்துச் சிதறிக்கொண்டிருப்பதைப் போலிருந்தது. நிச்சயம் இறந்துவிடுவோம் என்று நாங்கள் எல்லோருமே நம்பினோம். இந்த உணர்வுதான் போர். இதை நீங்கள் உணர்ந்தால்தான் போர் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியும்.’

ஹிப்பா சந்தித்த போரையும். செல்சியா சந்தித்த முகாமையும் நம்மால் முழுமையாக உள்வாங்கிக்கொள்ள முடியாது. இறந்துபோன தன் அப்பாவின் புகைப்படத்தைக் கையில் ஏந்தியபடி ஹிப்பா சொல்கிறார். ‘ஒரு போர் என்னவெல்லாம் செய்யும் என்பதை உங்களால் கற்பனைகூடச் செய்யமுடியாது. அதே போல், ஓர் அகதியாக இருப்பது என்றால் என்னவென்பதையும் உங்களால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாது.’ செல்சியா இதை நூற்றுக்கு நூறு ஒப்புக்கொள்வார்.

**சொந்தங்கள் வருவார்கள்**

5-ம் பக்க தொடர்ச்சி...

விமானப்படை விமானங்களின் கைதான் ஓங்கியிருக்கும். அது ஏனென பார்ப்போம்.

வான்புலிகளின் விமானம் ZLIN-143. இதன் அதிகபட்ச வேகம் 260km/h. தமது விமானங்களில் EBR (Electrical Bomb Release) சிஸ்டத்தை அமைத்து இரண்டு குண்டுகள் காவிச்செல்லும் வசதியை ஏற்படுத்தியிருந்தனர். ஒவ்வொரு குண்டும் கிட்டத்தட்ட 50 கிலோ எடையானவை. இதன்படி பார்த்தால், ஒரு விமானத்தில் 100 கிலோ எடை காவிச்செல்லப்படுகிறது. இந்த எடை விமானத்தின் பறப்பு வேகத்தை கணிசமாக குறைக்கும்.

வான்புலிகள் தாக்குதலிற்கு வரும்போதே dogfight முறையில் விமானப்படை விமானங்கள் எதிர்கொள்ள வேண்டும். அதிக வேகத்தில் பறக்க முடியாத வான்புலிகளின் விமானத்தை சுலபமாக தாக்கலாம் என்பதே திட்டம். தாக்குதலிற்கு வசதியாக விமானப்படையின் சிறிய விமானங்களில் .50 கலிபர் துப்பாக்கிகள் பொருத்தலாம் என்பது திட்டம்.

இந்த திட்டம் விமானப்படை தளபதிக்கு போனதும், விமானப்படையின் உயர்மட்ட கூட்டமொன்று நடந்தது. பிராந்திய தளபதிகள், தாக்குதல் ஸ்குவாட்ரன் லீடர்கள் என கிட்டத்தட்ட விமானப்படையின்எல்லா மட்டத்தினரும் கலந்துகொண்ட கூட்டம் அது. அதில் ஸ்குவாட்ரன் லீடர்கள்தான் இந்த திட்டத்தின் முக்கிய பலவீனமொன்றை குறிப்பிட்டார்கள்.

புலிகளின் விமானத்தின் வேகம், குண்டின் எடை என எல்லா விபரங்களையும் துல்லியமாக கணிப்பிட்டு, இந்த ஐடியாவை போட்ட தளபதி ஒரு முக்கிய விசயத்தில் கோட்டை விட்டுவிட்டார். அது வான்புலிகளின் தாக்குதல் நேரம். வான்புலிகள் பகலில் தாக்குதல் நடத்துவதில்லை. அனைத்து தாக்குதல்களையும் இரவில்தான் செய்தார்கள். Dogfight முறை இரவு தாக்குதலிற்கு சரிவராது!

Dogfight முறை முழுக்கமுழுக்க பகல் வேளைக்கே உகந்தது. எதிரி விமானத்தை கண்ணால் பார்க்க வேண்டும். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் இப்போதிருப்பதை போல உயர்தர நைட் விஷன்கள் கிடையாது. பிறைமரி நைட்விஷன் கள்தான் இருந்தன. ஒரு மில்லிவிநாடி தடுமாறினாலும் விமானம் மோதி விபத்திற்குள்ளாகும் ஹை ரிஸ்க்கான வானத்தில் நடக்கும் Dogfight, இரண்டாம் உலகபோரில் பகலில் மட்டுமே நடந்தது.

இன்றும்கூட இலங்கை போன்ற நாடுகளினால் இரவில் Dogfight செய்ய முடியாது. அதற்கு விமானத்தில் உள்ள ராடர் சிஸ்டம் மாற்றப்பட வேண்டும். Dogfight செய்ய உகந்த விமானங்களில் உள்ளது 2D ராடர்கள். இன்றைய நவீன தாக்குதல் விமானங்களில் 3D ராடர்கள் உள்ளன. இவைதான் எதிரி விமானத்தின் வேகம், உயரம், திசை என அனைத்தையும் துல்லியமாக கணிக்கும். ஆனால் 2D ராடர்களால் அது முடியாது. எதிரி விமானங்களின் திசை, வேகம் என்பவற்றை கணிக்குமே தவிர, விமானத்தின் உயரத்தை துல்லியமாக கணிக்காது. இரவில் Dogfight செய்வதெனில், விமானத்தின் திசை, வேகம் எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியம் விமானத்தின் உயரமும்.

விமானப்படையிடம் உள்ள பழைய விமானங்களில் உள்ள 2D ராடர்களை வைத்து வான்புலிகளுடன் Dogfight செய்ய முடியாதென்ற முடிவிற்கு விமானப்படை வந்தது. ஆனால் வான்புலிகளை கட்டுப்படுத்தும் பொறுப்பு தம்மிடமிருந்து நழுவிச்செல்வதையும் விரும்பவில்லை. அதனால் வேறொரு ஐடியா போட்டார்கள்.

தம்மிடமுள்ள பழைய விமானங்களிற்கு 3டி ராடர்கள் பொருத்துவதே அந்த திட்டம்!

இது பெரும் செலவான, தொழில் நுட்பத்தில் முன்னேறிய நாடுகளிற்கு மட்டுமே சாத்தியமான திட்டம். என்றாலும். இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்காவிடம் கேட்டுப்பார்க்கலாமென்பதால், இந்த திட்ட வரைபை பாதுகாப்பு செயலாளரிடம் கையளித்தனர். ஆனால் அதனை நிராகரித்து விட்டார். ஆனால், மூன்று நாடுகளின் நிபுணர்கள் முன்மொழிந்தது இதைவிட நல்ல திட்டமென்பது கோத்தபாயவின் எண்ணம். இறுதியில் அதுதான் வெற்றியளித்தது!

இந்தியா வழங்கிய Aricraft Artillery ரகத்தை சேர்ந்த 12.7, 14.5mm கனோன்கள் எல்லாம் இராணுவத்திற்கு வழங்கப்பட்டது. கொழும்பை மையப்படுத்தி Anti Aricraft Artillery துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர் அதிகளவில் நிறுத்தப்பட்டனர். விமானப்படை, கடற்படைக்கும் AntiAricraft Artilleryèœ வழங்கப்பட்டிருந்தன.

(தொடரும்)

# மீற்றர் வட்டி... சிக்காமல் தப்பிக்க சில வழிகள்!

ராஜசேகரன்

சில வருடங்களின் முன் கீழ்த்தரமான தொழிலாகப் பார்க்கப்பட்டு வந்தது வட்டித்தொழில். ஆனால்,இன்று அரசியல், அதிகாரம், பணபலம் இருப்பவர்கள் நடத்தும் தொழிலாக மேலான ஒரு நிலையை அடைந்திருக்கிறது.

வட்டிக்குக் கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை மிகப் பெரிய அளவில் உயர்ந்திருப்பதே இதற்குக் காரணம். 'கடன் வேணுமா?' என்று கேட்கிறவர்கள் ஒருபக்கமெனில், 'கடன் கிடைக்குமா?' என்று கேட்கிறவர்களும் நிறையவே இருக்கிறார்கள். இதன் விளைவாக, கடன்களும், வட்டிகளும் பல வகையான அவதாரங்கள் எடுத்திருக்கின்றன.

### பலவிதமான வட்டிகள்

இன்றைக்குப் பலவிதமான கடன்கள் இருக்கின்றன. அவற்றுக்கு வாங்கப்படும் வட்டியின் அளவைப் பொறுத்து, அந்தக் கடன்களின் பெயர்கள் மாறுகின்றன. மீட்டர் வட்டி, மின்னல் வட்டி, ஸ்பீட் வட்டி, நிமிட வட்டி, நாள் வட்டி, வார வட்டி, மாத வட்டி, ரன் வட்டி, பைக் வட்டி எனப் பல பெயர்களில் வட்டிகள் விஸ்வரூபம் எடுத்துவருகின்றன.

இதில் எந்தவொரு வட்டியில் கடன் வாங்கினாலும் மாதமொன்றுக்குக் குறைந்தது 3% முதல் 4%, 5%, 10%, 12%, 15% வட்டி வரை தாராளமாக வசூலிக்கப்படுகிறது. கடன் வாங்குபவர்கள் அவசரம் காட்டினால், மிக அதிகமான வட்டி வசூலிக்கப்படும்.

ஒவ்வொரு கடனிலும் எந்த அளவுக்கு வட்டி வசூலிக்கப்படுகிறது என்பதைப் பார்த்தால், நமக்குக் குலைநடுங்கும். விவரம் தெரியாமல் கடன் வாங்கிவிட்டு, அதிலிருந்து மீள முடியாமல் தீக்குளித்துச் சாவதற்குக் காரணமாக இருப்பது இந்த அநியாய வட்டிதான். இந்த வட்டிகளைப் பற்றி கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

மீட்டர் வட்டி, ஸ்பீட் வட்டி, மின்னல் வட்டி போன்றவை பொதுவாக வியாபாரிகளுக்கு வழங்கப்படுவதாகும். மீட்டர் வட்டியில் கடன் கொடுக்கும்போது முதல் தவணை வட்டியைக் கந்துவட்டிக்காரரே எடுத்துக்கொள்கிறார். உதாரணமாக, ரூ.10,000 கடன் வாங்கினால், அதில் 10% அதாவது, முதலிலேயே 1,000 ரூபாயைக் கந்துவட்டிக்காரர் எடுத்துக்கொள்வார். இதில் காலையில் ரூ.9,000 வாங்கினால், மாலையில் 10,000 ரூபாய் கொடுக்க வேண்டும்.

ஸ்பீட் வட்டி/ மின்னல் வட்டி: இந்தக் கடன் சில மணி நேரத்துக்கு மட்டுமே தரப்படும். குறிப்பிட்ட நேரத்தில் வாங்கிய பணத்தை வட்டியுடன் தரத் தவறினால் வட்டி இருமடங்காகும் என்பது திகில் உண்மை.

நிமிட வட்டி: பெரிய வியாபாரிகளுக்குத் தரப்படுவது. இவர்கள் வரி கட்ட, செக் க்ளியராகாதபோது உடனே பணம் தர, வரவேண்டிய பணம் உரிய நேரத்தில் வராமல்போய், பிறருக்குத் தரவேண்டிய பணத்தைத் தந்தே ஆகவேண்டிய கட்டாயம் போன்ற பிரச்னைகளைச் சமாளிக்க வாங்கப்படுவதாகும். இந்த மாதிரியான கடனுக்கு 3% முதல் 10% வரை குறிப்பிட்ட நேரத்துக்கும், நாள்களுக்கும் வட்டி வாங்கப்படுகிறது.

வார வட்டி: இந்த வகையான வட்டி, பொதுவாக வாரச் சம்பளம் வாங்குகிறவர்களுக்குக் கடனாகத் தரப்பட்டு வசூலிக்கப்படுவதாகும். கொடுக்கும் பணத்துக்கு வார இறுதியில் வட்டியுடன் அசலையும் திருப்பித் தரவேண்டும். அல்லது அதற்கான வட்டியைக் கொடுத்து அசலில் எவ்வளவு குறைக்க முடியுமோ, அவ்வளவுக்குக் குறைத்துத் தரவேண்டும். இதில் சிறு கடன்கள் மட்டுமே தரப்படுகிறது. இதில் ரூ.1,000 5,000 வரை கடனாகத் தரப்படும். இதற்கு வட்டியாக 10% வரை வசூலிக்கப்படுகிறது.

மாத வட்டி: இந்த வட்டியைத்தான் பொதுவாக அனைத்துத் தரப்பினரும் வாங்குகிறார்கள். இதில் 2% முதல் 6% வரை மாத வட்டியாக வசூலிக்கப்படும். அசல் எப்போது கிடைக்கிறதோ, அப்போது கடனை முடித்துக்கொள்ளலாம். இந்தக் கடனை அடைப்பதும் மிகவும் கடினம். இந்தக் கடனை வாங்கிய பல லட்சம் பேர் பல வருடங்களாக மாட்டிக்கொண்டு, வட்டி மட்டுமே கொடுத்துவருகிறார்கள். அசலை அடைக்க முடியாமல் திணறி வருகிறார்கள்.

**தண்டல் வட்டி:** இத்தகைய கடன்தான் கடன்களின் ராஜா என்கிறார்கள். அனைத்துத் தரப்பு மக்களும் இந்தக் கடனை வாங்கி வாழ்க்கையைத் தொலைக்கிறார் கள். இந்தக் கடனை டீ கடை முதல் பெரிய துணிக்கடை வரை அனைவரும் வாங்குகிறார்கள். இதில் ஒருமுறை கடன் வாங்கி ஒழுங்காகக் கட்டிவிட்டால், எவ்வளவு தொகையைக் கடனாகக் கேட்டாலும் அடுத்தமுறை தருவார்கள். இது 100 நாள் கடன் திட்டம். இந்தக் கடனில் கொள்ளை லாபம் கிடைப்பதால், இந்தக் கடனைத் தருவதிலேயே கந்து வட்டிக்கா ரர்கள் குறியாக இருப்பார்கள். இந்தத் தண்டல் கடனை வாங்கிய ஒருவர் எப்படிப் பாதிக்கப்படு கிறார் என்பதை ஒரு உதாரணம் மூலம் பார்ப்போம்.

கணக்குப்படி வாங்கிய கடன் தொகை: ரூ.50,000

அதற்கான வட்டியாக முதலிலேயே பிடிக்கப்படும் தொகை: ரூ.5,000

கைக்குக் கிடைக்கும் அசல் கடன் தொகை: ரூ.45,000

வாங்கியவர் தினமும் கட்ட வேண்டிய தொகை: 550 (100 நாள்களில்)

550*100=55,000

அதாவது, ஏற்கெனவே ரூபாய் 5,000 வட்டியைப் பெற்றுத்தான் ரூ.45,000 தரப்படுகிறது. கடன் தொகை 50,000 ரூபாயை 100 நாள்களில் வசூலிக்க 500 ரூபாய்தான் வாங்கவேண்டும். ஆனால், தினமும் 550 ரூபாய் வாங்கி, கொள்ளை லாபம் பார்க்கிறார்கள். 100 நாள்களில் ரூ.10,000 லாபம் பார்க்கிறார்கள்.

### சிக்காமல் தப்பிக்கும் தாரக மந்திரம்

சாதாரண மனிதர்களாக இருந்தாலும் சரி, பிசினஸ் செய்பவர்களாக இருந்தாலும் சரி, திடீர் தேவைக்குக் கடன் வாங்குவது தவறில்லை. ஆனால், தொடர்ச்சியாக கடனை வாங்கிக்கொண்டே வாழ்க்கையையும், பிசினஸையும் நடத்துவதுதான் தவறு. பணத்தைக் கடனாக வாங்கும்போது அது நமக்கு எதிராக வேலை செய்கிறது. ஆனால், முதலீடு செய்யும்போது நமக்குச் சாதகமாகச் செயல்படுகிறது. பணத்தின் இந்தத் தாரக மந்திரத்தைப் புரிந்துகொள்பவர்கள் கடன் வலையில் ஆரம்பத்தில் சிக்கினாலும், பிறகு அதில் சிக்கவே மாட்டார்கள்.

### வருமானத்துக்குள் செலவு

முடிந்தவரை கடன் வாங்காமல் நமது தேவைகளை நிறைவேற்றக் கற்றுக் கொண்டால் நிம்மதியுடன் வாழலாம். மாதம் ரூ.5,000 சம்பாதித்தாலும், ரூ.50,000 சம்பாதித்தாலும் இன்னும் நிறைய பணம் வேண்டும் என்றுதான் பலரும் நினைக் கிறார்கள். இந்த எண்ணம் தவறானது.

பக்கத்து வீட்டுக்காரர் அதை வைத்திருக்கிறார், இதை வைத்திருக்கிறார் என்று சொல்லி நாம் கடனில் பொருள் களை வாங்குவது தவறு. கல்யாணமோ, கருமாதியோ, நம் கையில் உள்ள பணத் துக்கேற்ப செலவு செய்ய நினைக்கும் தைரியம் நமக்கு வேண்டுமே தவிர, கௌர வத்துக்காக கடன் வாங்கிச் செலவு செய்துவிட்டு, சிக்கலில் மாட்டக்கூடாது. வருமானத்துக்கேற்ப வாழக் கற்றுக் கொண்டால், கடன் வலையில் சிக்காமலே இருக்கலாம்.

### வட்டியைப் புரிந்துகொள்ளுங்கள்

கடன் வாங்கும்போது தனிப்பட்ட நபர்களிடம் வாங்குவதைவிட, வங்கிகளில் வாங்குவது நல்லது என்பதற்குக் காரணம் வட்டிதான். இந்த வட்டியைப் புரிந்துகொண்டால், கடன் வாங்க பலரும் யோசிக்கவே செய்வார்கள்.

வங்கியில் ரூ.10,000 கடன் வாங்குகிறோம் எனில், அதற்கு வட்டியாக ஆண்டுக்கு 10% என்றால், ஆண்டுக்கு ரூ.1,000 கட்டினால் போதும். இதை மாதக் கணக்கில் கணக்கிட்டால் வெறும் ரூ.83 மட்டுமே ஆகும்.

ஆனால்,கந்துவட்டி அப்படியல்ல.இதில் மாதத்துக்கு ஒரு ரூபாய்க்குக் குறைந்தது மூன்று வீதம் முதல் அதிகபட்சமாக 10, 12, 15 வீதம் என்கிற அளவில் வட்டி வசூலிப்பார். அதாவது, 10,000 ரூபாய்க்கு மாதத்துக்கு மூன்று வீத வட்டி என்றால், அதற்கு மாதத்துக்கு வட்டியாக 300 ரூபாய் தரவேண்டும். ஆக, ஆண்டுக்கு ரூ. 3,600 வட்டி போகும். சதவிகிதக் கணக்கில் பார்த்தால், ஆண்டுக்கு 36% சதவிகித வட்டியாகும்.


மூன்று வீதத்துக்கே இப்படி எனில், நான்கு, ஐந்து, பத்து வீதம் என்றால், வட்டியாகக் கட்டவேண்டிய பணம் எவ்வளவாக இருக்கும் என்பதை நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள். இந்த வட்டிக் கணக்கைப் புரிந்துகொள்ளாமலே பலரும் கடன் வாங்கி, பிறகு அசலைத் திரும்பத் தரமுடியாமல் வட்டி மட்டுமே கட்டி, தன் வாழ்க்கையைத் தொலைக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

### வங்கியில் வாங்கினால் தப்பில்லை

வங்கியில் கடன் வாங்கத்தான் நினைக்கிறோம். ஆனால், தரமாட்டேன் என்கிறார்களே என்பதே பலருடைய புகாராக இருக்கிறது. வங்கிகளில் மக்கள் டெபாசிட் செய்துள்ள பணத்தைத்தான் வங்கிகள் மற்றவர்களுக்குக் கடனாகத் தருகின்றன. எனவே, பணத்தைத் திரும்பச் செலுத்தும் தகுதியிருந்தால் மட்டுமே வங்கிகளில் கடன் கிடைக்கும் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். வங்கிகளில் கடனுக்கான வட்டி நியாயமாக இருப்பதால், அங்கு மட்டுமே

தொடர்ச்சி 25-ம் பக்கம்...





**கடன் வாங்கும்போது தனிப்பட்ட நபர்களிடம் வாங்குவதைவிட, வங்கிகளில் வாங்குவது நல்லது என்பதற்குக் காரணம் வட்டிதான். இந்த வட்டியைப் புரிந்துகொண்டால், கடன் வாங்க பலரும் யோசிக்கவே செய்வார்கள்.**

# பிள்ளையின் பாதுகாவலும் உரோமன் டச்சுச் சட்ட எண்ணக்கருக்களும்



ரமணன் llb



பாதுகாவல் என்ற பதம் பிள்ளைகள் மீதான கட்டுப்பாடு, நாளாந்த வாழ்க்கை, பிள்ளையுடைய கல்வி என்பவற்றை உள்ளடக்குகின்றது எவ்வாறாயினும் பிள்ளைகளுடைய ஆதனத்தை நிர்வகிக்கும் உரிமை பாதுகாவல் என்ற விடயத்திற்குள் உள்ளடக்கப்படமாட்டாது. உரோமன் டச்சுச்சட்டத்தின் கீழ் பிள்ளைகளுடைய பாதுகாவல் விடயமாக இரண்டு கொள்கைகள் பிரயோகிக்கப்படுகின்றன

திருமணம் நிலைத்திருக்கின்ற காலப் பகுதியில் மணம்சார் அதிகாரத்தை வைத்துள்ள தந்தைக்கு பிள்ளையுடைய பாதுகாவல் தொடர்பாக முன்னுரிமை காணப்படுகின்றது. இதே உரிமை திறந்தவர்கள் இருவரும் விவாகரத்துப் பெறாமல் பிரிந்து வாழுகின்ற இடத்திலும் காணப்படுகின்றது இத்தகைய சூழ்நிலை ஒன்று பிள்ளையுடைய பாதுகாவலைக் கோருகின்றதாய் தனது பிள்ளையினுடைய பாதுகாவலில் தந்தைக்கு அக்கறை இல்லை என்பதை நீதிமன்றில் நிரூபிப்பதன் மூலம் பிள்ளையுடைய பாதுகாவலைப் பெற்றுக் கொள்ளலாம்

எவ்வாறாயினும் பிள்ளையுடைய பாதுகாவல் என்ற விடயம் விவாகரத்து வழக்கு நடவடிக்கையின் போது அல்லது திருமணக் குலைப்பு நடவடிக்கையின் போது அல்லது திறந்தவர்கள் விவாகரத் துக்கான கட்டளை ஒன்றைப் பெற்றுக் கொள்ளாதவிடத்து பிள்ளை மீதான தந்தையுடைய பாதுகாவல் அதிகாரம் முதலிடத்தை வகிக்காது இவ்விடத்தில் பிள்ளையினுடைய அக்கறை நலன் என்பனவே முக்கியம் பெறுகின்றது. இத்தகைய சூழ்நிலை ஒன்றில் பிள்ளையினுடைய சிறந்த நலன் மீது யார் செயற்படுவார் என்பதை நீதிமன்றின் முன்னிலையில் நிரூபிப்பதன் மூலம் பிள்ளையினுடைய பாதுகாவலைப் பெறலாம்.

இத்தகைய சட்ட நிலமை கலீற்ஸ் எதிர் கலீற்ஸ் *(1939)* என்ற முக்கியமான தென்னாபிரிக்க வழக்கில் தாபிக்கப்பட்டது. இலங்கையிலும் இத்தீர்ப்பு பின்பற்றப் படுகின்றது. ஆகையால் இவெட்லி எதிர் இவெட்லி *(1956)* வழக்கில் பிரான்ஸைச் சேர்ந்த தந்தை மற்றும் மனைவி இருவருக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டபோது, நீதிமன்றம் திறந்தவர்கள் விவாகரத்துப் பெறாது பிரிந்து வாழ்கின்ற இச் சூழ்நிலையில் பிள்ளையினுடைய பாதுகாவல் தொடர்பில் தந்தைக்கே முன்னுரிமை உள்ளது எனக்கூறி பிள்ளையினுடைய பாதுகாவலைத் தந்தையிடம் ஒப்படைத்தது.

இத்தகைய சட்டநிலைமை மடுலாவதி எதிர் வில்பஸ் *(1967)*[8] வழக்கில் பின்பற்றப்பட்டது. இந்த வழக்கில் முறையே 5, 1 வயது நிரம்பிய பிள்ளைகளுடைய பாதுகாவல் தொடர்பான பிணக்கு ஏற்பட்டது. மனைவி மூத்த பெண் பிள்ளையுடைய பாதுகாவலை, தந்தை விவசாயத்திற்குச் செல்கிறார் எனவே வீட்டிலே பராமரிப்பதற்கு ஒருவரும் இல்லை என்ற அடிப்படையில் கோரினார். எனினும் தந்தை தனது தாயும் சகோதரியும் வீட்டிலே பிள்ளையை பராமரிப்பர் என்பதை நிரூபித்தார். இந்த வகையில் நீதிமன்றம் மூத்த பிள்ளையுடைய பாதுகாவலை தந்தைக்கு வழங்கி இரண்டாவது பிள்ளையுடைய வயதைக் கருதி நீதிமன்றம் தாயிடம் ஒப்படைத்தது.

தாய் ஒருவர் பிள்ளையுடைய நலனுக்காக தந்தை செயற்படவில்லை என்பதை நிரூபிக்கின்ற சூழ்நிலையில் நீதிமன்றம் உயரிய பாதுகாவலாக செயற்பட்டு தந்தையுடைய முன்னுரிமையை அங்கீகரிக்காது பிள்ளையுடைய பாதுகாவலைத் தாயிடம் ஒப்படைக்கும். கமலாவதி எதிர் டி சில்வா *(1961)* வழக்கில் தாய் 5 வயது நிரம்பிய தனது குழந்தையுடைய பாதுகாப்பைக் கோரி நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு வழக்கொன்றை தாக்கல் செய்தார். பிள்ளை கணவனுடைய பாதுகாப்பில் இருந்தது. இவ்விடத்தில் கணவன் மனைவியை பராமரிக்கவில்லை என்ற அடிப்படையில் இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்பட்டன. கணவன் வீட்டுத் தேவைகளுக்காகப் பணம் கொடுக்காத காரணத்தினால் அவள் தனது பெற்றோருடைய வீட்டுக்குச் சென்றாள். மேலும் தான் கண்டியில் உள்ள தனது பெற்றோருடைய வீட்டில் இருக்கின்ற போது தனது கணவன் பிள்ளையைப் பார்க்கவரவில்லை என்பதை நீதிமன்றத்தின் முன் நிரூபித்தாள். நீதிமன்றம் பராயமடையாத ஒரு பிள்ளைக்கு தாயுடைய அன்பு மற்றும் கவனம் அவசியம் மாதத்திற்கு ஒருமுறை சென்றுவரும் பிரதிவாதியால் பிள்ளைக்குரிய அன்பை வழங்க முடியாது. ஆகையால் பிள்ளையுடைய பாதுகாவலை தாயிடமே வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தது. மேலும் பிள்ளையைச் சென்று பார்த்துவர தந்தைக்கு உரிமை வழங்கியது.

பிள்ளையினுடைய பாதுகாவல் தொடர்பான விடயங்களைத் தீர்மானிப்பதற்கு மாவட்ட நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இருந்த போதிலும் இலங்கையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிள்ளையினுடைய பாதுகாவலைக்கோரி ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்யும் நடைமுறை காணப்படுகின்றது. இதன் விளைவாக உள்நாட்டுவழக்குகள் ஆங்கிலச் சட்டம் மீதான பிள்ளையினுடைய பாதுகாவல்தொடர்பான விடையங்களைக் கருத்தில் எடுத்து பிள்ளையினுடைய பாதுகாவலைத் தீர்மானிக்கின்றது. பிள்ளையுடைய பாதுகாவல் தொடர்பான பிணக்குகள் மாவட்ட நீதிமன்றால் தீர்மானிக்கப்படுகின்றபோது உரோமன் டச்சு சட்டத்தின் கீழ் உள்ள தந்தையுடைய பாதுகாவல் தொடர்பான முன்னுரிமை பிள்ளையுடைய சிறந்த அக்கறை கருதி பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் இவ்வாறு தாயிடம் முன்னுரிமையை அங்கீகரிக்காததால் திருமண ஒப்பந்தம் ஒன்றில் பங்குதாரரான தாயுடைய சட்ட நிலமையைக் குறைத்து மதிப்பிடப்படுகின்றது. எனவே, பாதுகாவல் தொடர்பான விடயத்தில் தாய் பல பிரதிகூலமான நிலமையை அனுபவிக்கின்றார்.

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு அமைவாக பிள்ளையுடைய பாதுகாவல் தொடர்பில் முன்னுரிமை அந்தஸ்தை தந்தைக்கு வழங்குவதன் மூலம் பாதுகாவல் விடயத்தைத் தக்கவைத்துக் கொண்டாலும் சில சூழ்நிலைகளில் பிள்ளையின் அக்கறைக்கு பங்கம் விளைவிக்குமாயின் பிள்ளையுடைய பாதுகாவலை தாயிடம் ஒப்படைக்கின்றது. வேரகொட எதிர் வேரகொட *(1961)* வழக்கில் நீதிமன்றம் தந்தையுடைய முன்னைய நடத்தையைக் கருத்திற் கொண்டு ஒன்பதரை வயது நிரம்பிய பிள்ளையுடைய சிறந்த நலனைக் கருத்திற் கொண்டு அப்பிள்ளையின் பாதுகாவலைத் தாயிடம் ஒப்படைத்தது. பத்மா பெர்னாண்டோ எதிர் ரி.எஸ். பெர்னாண்டோ *(1956)*[11] வழக்கில் இதே கருத்து வெளியிடப்பட்டது. சுபைர் எதிர் இப்திகார் *(1974)*[12] வழக்கில் முஸ்லிம் தந்தை மற்றும் தாய் ஆகியோருக்கிடையில் பிள்ளையுடைய பாதுகாவல் பிணக்கு எழுந்தபோது பிள்ளையின் சிறந்த அக்கறை கருத்தில் கொள்ளப்பட்டது. நீதிமன்றம் இஸ்லாமியச் சட்டத்தின் கீழ் உள்ள இரண்டுவிதமான கருத்துக்களை அதாவது 7 வயது நிரம்பிய ஆண்பிள்ளைக்கு, யாரிடம் இருக்க வேண்டும் என்ற விருப்புரிமையை தீர்மானிக்க சந்தர்ப்பம் இருந்தது. எனினும் 7 வயது நிரம்பிய மகனுடைய பாதுகாவலை தந்தையுடைய நடத்தையைக் காரணம் காட்டி நீதிமன்றம் தாயிடம் ஒப்படைத்தது.

ஜயராஜன் எதிர் ஜயராஜன் *(1999)*[13] வழக்கில் உரோமன் டச்சுச் சட்டத்திலுள்ள பாரம்பரியக் கோட்பாடாக பராயமடையாத பிள்ளை தொடர்பான பாதுகாவல் விடயத்தில் தந்தையுடைய முன்னுரிமை என்பது இன்றும் வழக்கத்தில் இருக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டது. எனினும் உயிர் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் மற்றும் பிள்ளையினுடைய ஒழுக்கம் கருதி சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் இந்த உரிமை மீது சட்டம் கட்டுப்பாட்டை விதிக்கின்றது.

நீதிமன்றம் பிள்ளையினுடைய பாதுகாவல் தொடர்பில் மூன்றாம் நபர்களுக்கு எதிராக இயற்கைப் பெற்றோர்களுக்கு முன்னுரிமை உள்ளது என அங்கீகரித்துள்ளது. ஆகையால் பிள்ளையுடைய பாதுகாவல் தொடர்பான விடயத்தில் இயற்கைப் பெற்றோர் பொருத்தமற்றவர்கள் என நிரூபிக்கின்ற வரையில் நீதிமன்றம் பிள்ளையினுடைய பாதுகாவலில் தலையிடமாட்டாது. எவ்வாறாயினும் எல்லாச் சூழ்நிலைகளிலும் பிள்ளையினுடைய சிறந்த பாதுகாப்பு என்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. என்டோரிஸ் எதிர் கிரிபொத்தா *(1968)* வழக்கில் 8 வயது நிரம்பிய மகனுடைய பாதுகாவலை தந்தை கோரினார். இங்கு பிள்ளை பிறந்து ஒரு மாதத்தில் தாய் இறந்தாள். தாயினுடைய இறப்பினை அடுத்து விண்ணப்பதாரியினுடைய சகோதரி தொடர்ந்து தனது கட்டுக்காப்பில் வளர்த்து வந்தாள். நீதிமன்றம் இங்கு தந்தையுடைய பாதுகாவல் தொடர்பான உரிமை இன்னொருவருக்கு வழங்கப்பட்டதன் மூலமாக இல்லாமல் ஆக்கப்படவில்லை எனத் தீர்த்தது. இவ்வாறான எண்ணக்கருக்கள் பிள்ளையின் பாதுகாவல் தொடர்பில் இலங்கையில் பின்பற்றப்படுகின்றன.






தீரன் அதிகாரம் ஒன்று



பாஸ்கர் ஒரு ராஸ்கல்





## விஜய் டிவிக்கு முதுகில் குத்திய ஆர்த்தி



ஒரு டிவியில் தோன்றி புகழ் பெற்றுவிட்டால், அவரை இன்னொரு டிவி இழுத்துக் கொள்வது வழக்கம். விஜய் டிவியின் கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியில் நடுவராக இருந்தவர் நடிகை நந்தினி. சன் டிவியின் காமெடி சீரியல் ஒன்றில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததும் போய்விட்டார். இதனால் கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியில் இருந்து அவரை தூக்கினார்கள். விஜய் டிவிதான் நந்தினிக்கு கல்யாணம் முதல் வளைகாப்பு வரை அனைத்தையும் செய்தது. பின்னர், சிறிதுகாலத்தில் விஜய்க்கே திரும்பி வந்தார். ஆனால் கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியில் நந்தினியை சேர்க்கவில்லை. இதற்கு பதிலாக குண்டு ஆர்த்தியை நடுவராக களமிறக்கியது டிவி. ஆர்த்தியை பிக்பாஸில் சேர்த்து, பிரபலமாக்கியதும் விஜய் டிவிதான். இப்பொழுது இன்னொரு டிவியில் நடக்கும் ஸ்டார் வோர்ஸ் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சென்றுவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த விஜய் டிவி, ஆர்த்தியை கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியில் இருந்து தூக்கிவிட்டது.

## ஷபானாவிற்கு ஆடவும் தெரியுமாம்



ஜீ தொலைக்காட்சியில் செம்பருத்தி சீரியலில் பார்வதியாக நடிப்பவர் ஷபானா. மும்பையை சேர்ந்த இவர் அழகாக தமிழ் பேசி, அசல் தமிழ்பெண்ணாக நடிக்கிறார். மலையாள சீரியல் ஒன்றில் நடித்தபோது ஏற்பட்ட அறிமுகத்தால் செம்பருத்தி சீரியல் வாய்ப்பு கிடைத்ததாம். சீரியலில் தனது தம்பியாக நடிப்பவருடன், நிஜமாகவே தம்பி மாதிரி பழகுகிறாராம். தம்பியுடன் பாசக்கார அக்காவாக இருப்பதால், சீரியலில் பாசமழை பொழிகிறாராம். மும்பையில் பிறந்தநாள், பார்ட்டிகளை தொகுத்து வழங்குகிறாராம். டான்சும் ஆடுகிறாராம்.

## முகத்தை மூடும் நடிகை



ஜீ தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அழகிய தமிழ் மகள் சீரியலில் வெகுளியான காமெடி வேடத்தில் கலக்கும் உஷா சாய், 18 வருடங்களாக சின்னத்திரையில் நடித்து வருகிறார். மூன்று வயதில் இருந்து நடிக்கிறாராம். அழகிய தமிழ்மகள் சீரியலில் அவர் நடிக்கும் மாரி கரக்டர் நிறையப்பேருக்கு பிடித்து விட்டதாம். பொதுஇடங்களில் மாரி என்றுதான் அழைக்கிறார்களாம். துணிக்கடைகளிற்கு போனால், அங்குள்ளவர்கள் உட்கார வைத்து ஒவ்வொரு உடுப்பாக எடுத்துக்காட்டி திக்குமுக்காட வைக்கிறார்களாம். இதனால் முகத்தை துணியால் மூடிக்கட்டிக்கொண்டுதான் துணிக்கடைக்கு செல்கிறாராம். கோலிசோடா படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்ததாம். ஆனால் வீட்டில் அனுமதிக்கவில்லையாம். சினிமாவை வீட்டில் விரும்பாததால், அந்த பக்கத்திற்கு பெரிய கும்பிடு போட்டுவிட்டேன் என்கிறார் உஷா.



## ஜெனிபருக்கு நல்ல மார்க்கெட்

முன்பெல்லாம் நடிகர்கள்தான் அதிக சம்பளத்திற்கு ஒப்பந்தமாகுவார்கள். இப்பொழுது நடிகைகளும் அதிக சம்பளம் வாங்க தொடங்கிவிட்டார்கள். சின்னத்திரை நாயகிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்தி சீரியல் நடிகை ஜெனிபர் ஒரு எபிசோட்டுக்கு 85 ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கி வந்தார். இவருக்கு ரசிகர்கள் மத்தியில் உள்ள வரவேற்பையடுத்து, பேஹாத் சீரியலில் ஒப்பந்தமாகியுள்ளார். இதில் மாறுபட்ட வேடத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். ஒரு எபிசோட்டுக்கு ஒரு இலட்சம் சம்பளம் பெறுகிறார். பேஹாத்தில் இவரது நடிப்பை பார்த்துவிட்டு, ஹர்சாத் சோப்ராவிற்கு நாயகியாக புதிதாக ஆரம்பிக்கவுள்ள சீரியலில் ஒப்பந்தமாகியுள்ளார். பேஹாத்தைவிட இதற்கு சம்பளம் அதிகமாம்.

## சின்னத்திரையில் ரேவதி

மண்வாசனை படத்தில் அறிமுகமான ரேவதி, ஏராளம் படங்களில் நடித்து விட்டார். தமிழில் வாய்ப்புக்கள் குறைந்ததும், 1990 இல் தூர்தர்ஷனில் ஒளிபரப்பான இரவில் ஒரு பகல் தொடரில் அறிமுகமானார். அதன் பின்னர் பெண், ரேவதி, நிறங்கள் உள்ளிட்ட பல தொடர்களில் நடித்து விட்டார். புதுமைப்பெண்கள், சிந்தனைகள், சம்பியன்ஸ் என பல நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினார். சிலகாலம் சின்னத்திரையிலிருந்து ஒதுங்கியிருந்த ரேவதி, இப்பொழுது மீண்டும் சின்னத்திரைக்கு வந்திருக்கிறார். அழகு என்ற தொடரில் நடிக்கவிருக்கிறார். ரேவதியின் கணவராக தலைவாசல் விஜய் நடிக்கிறார். குடும்ப பிரச்சனைகளை வெற்றிகரமாக கையாளும் பாத்திரமாம்.

## நிகழ்ச்சி தொகுப்பாளரை காதலிக்கும் ஆர்த்தி?

பிக்பாஸ் புகழ் ஜூலி தற்போது டிவி நிகழ்ச்சியொன்றை தொகுத்து வழங்குகிறார். கலா மாஸ்டரின் உதவியால் இந்த வாய்ப்பு கிடைத்தது. விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் ரக்சனை, ஜூலி காதலிக்கிறாராம். பிக்பாஸ் வெற்றிக்கொண்டாட்டத்தில் ரக்சனும் கலந்து கொண்டார். இதன்போது இருவரும் அறிமுகமாகி, செல்போன் இலக்கம் பரிமாறி கொண்டனராம். தற்போது இருவரும் ஒன்றாக சுற்றி வருகிறார்களாம். ஜூலிக்காக தொலைக்காட்சிகளை தொடர்பு கொண்டு ரக்சன் வாய்ப்பு கேட்டு வருகிறாராம். சிலவேளைகளில் கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியில் இருவரும் இணையக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



# வண்ணத் திரை



## அஜித்தை தல ஆக்கியது முருகதாஸ் அல்ல

அஜித் நடிப்பில் மெகா ஹிட்டடித்த படம் தீனா. இயக்குனர் முருகதாஸ் இயக்கிய படம் அது. இதன்பின் அஜித்தின் கரியர் உயர்ந்து, இன்று பெரிய நடிகராகிவிட்டார். தீனா படத்தில்தான் அஜித்தை தல என முதன் முதலில் அழைத்தார்கள். இதுவே இன்று அஜித்தின் அடைமொழியாகி விட்டது. தீனா படத்தில் தல வார்த்தை அறிமுகமானதால், இயக்குனர் முருகதாஸ்தான் அந்த பெயரை அஜித்திற்கு வைத்ததாக பலரும் நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. முருகதாஸின் உதவி இயக்குனரான மோகன் என்பவரே இப்படி அழைத்துள்ளார். பல நாட்களின் பின் உதவி இயககுனர்கள் சொல்லித்தான் முருகதாஸிற்கே இந்த பெயர் விவகாரம் தெரிந்ததாம்!

## குடும்பத்திற்காக ஹொட்டல் கட்டும் சூரி

தமிழில் வேகமாக வளர்ந்துவரும் காமெடியன் சூரி. பரோட்டா நகைச்சுவைதான் சூரியின் முதல் அடையாளம். வருத்தப்படாத வாலிபர் சங்கம், ரஜினி முருகன் என இரண்டு படங்களில் சிவகார்த்திகேயனுடன் நடித்திருக்கிறார். இதன்போது இருவருக்கும் நெருக்கமான நட்பு ஏற்பட்டது. தான் சம்பாதிக்கும் பணத்தில், தனது உறவினர்களின் பிள்ளைகள் பலரை சூரி படிக்க வைக்கிறார். சூரி குடும்பத்தினர் அனைவரும் கூட்டு குடும்பமாகவே இருந்து வருகின்றனர். இப்போது ஹோட்டல் ஒன்றை சூரி திறந்துள்ளார். இதன் வருமானம் முழுக்க குடும்பத்தினர் அனைவருக்கும் பிரிக்கப்படுமாம். சிவகார்த்திகேயன் ஹோட்டலை திறந்து வைத்தார்.

## இலியானா கதைதான் ரகுலிற்குமா?

தெலுங்கில் முன்னணி நாயகியாக இருந்தவர் இலியானா. ஆனால் அவரால் தமிழில் வெற்றிக்கொடி நாட்ட முடியவில்லை. இலியானாவும் தமிழில் அவ்வளவாக முயற்சி செய்து பார்க்கவில்லை. ஆனால் ரகுல் பிரீத் சிங்கின் கதை வேறு. தெலுங்கில் முன்னணயில் இருக்கும்போதே தமிழிலும் முன்னணி நடிகையாக முயற்சி செய்து பார்க்கிறார். ம்கூம். முடியவேயில்லை. சில வருடங்களின் முன் புத்தகம், என்னமோ ஏதோ படங்களில் நடித்தார். அவை சரியாக போகவில்லை. அதன்பின் தெலுங்கில் முன்னணி ஹீரோயினாகி விட்டார். அண்மையில் முருகதாஸ் இயக்கத்தில் அவர் நடித்த ஸ்பைடர் வெளியானது. தமிழில் மெகா தோல்விப்படம். ரகுல் ராசியில்லாத நடிகை என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் அவருக்கு தமிழில் கைவசம் உள்ள ஒரேபடம், கார்த்தியுடன் நடிக்கும் தீரன் அதிகாரம் ஒன்று. விரைவில் வெளியாகவுள்ள இந்த படத்தைதான் ரகுல் மிகவும் எதிர்பார்த்திருக்கிறார். இந்த படமாவது அம்மணியின் தலையெழுத்தை மாற்றுமா?

## பாரிஸில் நான்கு நாயகிகள்

கங்கனா ரணாவத்தின் நடிப்பில் இந்தியில் வெளியானது குயின் படம். நான்கு மொழிகளில் ரீமேக் செய்யப்படுகிறது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிற்கும் தனித்தனி நாயகிகள். இதற்காக நான்கு நாயகிகளும் தற்போது பிரான்சில் முகாமிட்டுள்ளனர். தமிழில் காஜல் அகர்வால், தெலுங்கில் தமன்னா, மலையாளத்தில் மஞ் சிமா மோகன், கன்னடத்தில் பருல் யாதவ் ஆகியோர் நடிக்கிறார்கள். இதற்கான படப்பிடிப்புக்கள் பிரான்சில் ஆரம்பிக்கவுள்ளன. நால்வருக்குமான படப்பிடிப்புக்கள் தனித்தனியாக நடக்கிறது.

## சினேகனும் 200 அழகிகளும்

பிக்பாஸ் நிகழ்ச்சியில் இரண்டாமிடம் பெற்றவர் பாடலாசிரியர் சினேகன். யாருடனும் சண்டை சச்சரவிற்கு செல்லாவிட்டாலும், கட்டிப்பிடி வைத்தியம் போன்ற பலவற்றால் கடுமையான விமர்சனங்களை சந்தித்தவர். நிகழ்ச்சி முடிந்ததும் பல படவாய்ப்புக்கள் தனக்கு கிடைத்ததாக சினேகன் கூறியிருந்தார். இந்த நிலையில், யாரும் புத்தனில்லை என்ற படத்தில் அவர் நடிக்கிறார். இதில் அழகிகளுடன் ரொமான்ஸ் பாடலொன்றில் நடனமாடுகிறாராம். எதுவும் தப்பில்லை எவனும் புத்தனில்லையென்ற பாடலை அவர்தானாம் எழுதியுள்ளார். சினேகனின் கட்டிப்பிடி வைத்தியத்தை மையமாக கொண்டு எழுதப்பட்ட பாடலாம். சென்னை, மலேசியாவில் பாடல் காட்சிகள் படமாக்கப்படுகிறது.

## இயக்குனராக ஆசைப்படும் விஜய்

நாளைய தீர்ப்பு படத்தில் அறிமுகமான விஜய், மெர்சல் வரை 61 படங்களில் நடித்துவிட்டார். நடிப்பை தவிர வேறு எதிலும் தனக்கு ஆர்வம் உள்ளதாக வெளிப்படையாக கூறவில்லை. ஒளிப்பதிவாளரும், இயக்குனருமான விஜய் மில்டன் அளித்துள்ள ஒரு பேட்டியில், நடிப்பைவிட இயக்குனர் ஆக வேண்டுமென்பதுதான் விஜயின் கனவாக இருந்ததாக கூறியுள்ளார். விஜய் நடித்த பிரியமுடன் படத்தில் ஒளிப்பதிவு செய்தபோது இந்த தகவலை சொன்னதாக பேட்டியில் தெரிவித்துள்ளார். விஜய்க்குள் ஒரு இயக்குனர் உள்ள விசயம் இப்பொழுதுதான் வெளிச்சத்து வந்துள்ளது.

## அவளுக்கு வரவேற்பு

சித்தார்த், ஆண்ரியா நடிப்பில் கடந்த வாரம் அவள் படம் வெளியானது. இதுவரை தமிழில் பல பேய் படங்கள் வெளியாகியிருந்தாலும், அவையெல்லாம் காமெடி கலந்தவையாகவே இருந்தன. ஹொலிவூட்டில் வெளியாகும் கரார் படங்களை போல, தமிழில் வெளியான முதல்படம் இதுவென பாராட்டை பெற்று வருகிறது. சென்னையில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ள நிலையிலும், படத்திற்கு நல்ல வசூல் கிடைத்து வருகிறது. சமூக வலைத்தளங்களிலும் படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

# அரச வேலைவாய்ப்பு விபரங்கள்



சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, Global Fund To Fight AIDS, Tuberclosis, & Malaria

**பணிநிலை:** Procroment Specialist

**கல்வித் தகுதி:** வணிக நிர்வாகத்தில் விசேட பட்டம் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட துறையில் 07 வருட அனுபவத்தினையும் கொண்டிருக்க வேண்டும். கொழும்பில் கடமையாற்ற வேண்டும். திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டும். 57 வயதிற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பத்துடன் சுய விபரக் கோவையையும் சான்றிதழ்களின் பிரதியையும் வைத்து கடித உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியையும் குறிப்பிட்டு 18.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் திட்ட பணிப்பாளர், GFATM திட்ட அலுவலகம், 13 வது மாடி, பொதுச் சுகாதாரக் கட்டிடம், இல 555, எல்பிட்டிகல மாவத்த, கொழும்பு 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

சுதேச மருத்துவ நிறுவனம், கொழும்பு பல்கலைக் கழகம் ராஜகிரிய

**பணிநிலை:** பணிப்பாளர்

**கல்வித் தகுதி:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இளமானிப் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்டம் என்பவற்றை கொண்டிருக்க வேண்டும்.

அல்லது ஆயுர்வேதத்தில் 05 வருட டிப்ளோமா முடித்திருக்க வேண்டும். அத்துடன் பட்டப்பின் படிப்பும் இருக்க வேண்டும். அத்துடன் 10 வருட அனுபவத்தினையும் கொண்டிருக்க வேண்டும்.

40 தொடக்கம் 62 வயதிற்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் இரண்டு உறவினர் அல்லாத சிபார்சுடன் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினையும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை பிரதிப் பதிவாளர், சுதேச மருத்துவ நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், ராஜகிரிய என்ற முகவரிக்கு 30.11.2017 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

**பணிநிலை:** Project Coordinator

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு இலங்கை தேயிலைச் சபையில் Global Ceylon Tea Promotion Campaign Project Project திட்டத்தில் Project Coordinator பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளது.

திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். விளம்பரப்படுத்தல், திட்ட மேம்படுத்தல், ஊடகத் தொடர்புகள் போன்ற பணிகள் குறித்த பதவியில் எதிர்பார்க்கப்படு கின்றன.

**கல்வித் தகுதி:** இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றி லிருந்து சந்தைப்படுத்தல், வெகுஜன ஊடகத்துறைகளில் சிறப்பு பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது சந்தைப் படுத்தல் பட்டய நிறுவனத்தில் முழு உறுப்புரிமையை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் முதலாவது பட்டத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் 3 வருட அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும். அனுபவமானது சர்வதேச சந்தை, உலக உற்பத்திகள், ஊடக விளம்பரங்கள் பற்றியதாக இருக்க வேண்டும்.

மாதாந்த கொடுப்பனவாக ஒவ்வொரு மாதமும் ரூபா 100,000 வழங்கப்படும்.

1 வருட திட்டமாகும். தெரிவுகள் இலங்கை தேயிலைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் இடம்பெறும்.

விண்ணப்பங்களை இலங்கை தேயிலைச் சபை அலுவலகத்தில் நேரடியாக அல்லது www.pureceylontea.com என்ற வலைத்தளத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ், கல்வி தொழில் மற்றும் தொழில் சான்றிதழ்களின் பிரதியுடன் பதிவு செய்யப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 14 நவம்பர் 2017 ஆம் திகதிக்கு முன்னர் பொதுப் பணிப்பாளர், இலங்கை தேயிலைச் சபை, 574, காலிவீதி, கொழும்பு 03. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இலங்கை மின்சார சபை

**பணிநிலை:**

- மின்சாரப் பொறியியலாளர் வகுப்பு II தரம் II
- இயந்திரப் பொறியியலாளர் வகுப்பு II தரம் II
- கணக்காளர் வகுப்பு II தரம் II

**தகைமைகளும் அனுபவங்களும்:** மின்சாரப் பொறியியலாளர் இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றில் மின்சாரப் பொறியியல் துறையில் விசேட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தில் மின்சாரப் பொறியியல் பாறிட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

இயந்திரப் பொறியியலாளர் இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றில் இயந்திரப் பொறியியல் துறையில் விசேட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தில் இயந்திரப் பொறியியல் பாறிட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

கணக்காளர் - ICA, CIMA, ACCA நிறுவனங்களில் உறுப்புரிமை பெற்றிருக்க வேண்டும். அல்லது அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வணிகப்பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியில் கணக்கீட்டில் உயர் தேசிய டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும். அத்துடன் 100க்கு மேற்பட்ட ஊழியர்களைக்கொண்ட நிறுவனம் ஒன்றில் கணக்கீட்டு துறையில் பணியாற்றிய 05 வருட அனுபவத்தினை கொண்டிருக்க வேண்டும்.

35 வயதிற்கு மேற்படாதவர்கள் குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

மின்சார மற்றும் இயந்திரப் பொறி யியலாளர்களுக்கான தெரிவுகள் நேர்முகத் தேர்வின் மூலம் இடம்பெறும். கணக்காளருக்கான தெரிவு எழுத்துப் பாறிட்சை மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் நேர்முகத் தேர்வின் மூலம் இடம்பெறும்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் பணியாற்ற வேண்டும்.

நியமனங்கள் 1 வருட ஒப்பந்த அடிப் படையில் வழங்கப்படும். ஒப்பந்த காலத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் பணியாளர்கள் இலங்கை மின்சார சபையில் நிரந்தர மின்சாரப் பொறியியலாளர், இயந்திரப் பொறியியலாளர், கணக்காளர் பதவிகளில் அமர்த்தப்படுவார்கள். தொடர்ச்சியாக 07 வருடங்கள் நுரைச் சோலையில் பணியாற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை கல்வி மற்றும் தொழில் சான்றிதழ்களுடன் 14.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிட்டு மேலதிக பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, புதிய களனிப் பால வீதி, கொலன்னாவ, வெல்லம்பிட்டிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

வடமேல் மாகாண சபை

**பணிநிலை:** முகாமைத்துவ உதவியாளர்.


வடமேல் மாகாண சபையில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. வடமேல் மாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட பிரசைகள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கல்வித் தகுதி:** க.பொ.த சாதாரன தரத்தில் ஒரே அமர்வில் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் மொத்த மாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். க.பொ.த உயர்தர பாறிட்சையில் பொதுச் சாதாரன தரப் பாறிட்சை தவிர ஏனைய 3 பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அனைத்து தகுதிகளும் விண்ணப்ப திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும். எழுத்துப் பாறிட்சை மூலம் தெரிவுகள் இடம்பெறும். எழுத்துப் பாறிட்சைக்கான கட்டணம் 600 ரூபா ஆகும். தபாலகத்தில் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பங்களை 14.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வடமேல் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இறகான திறந்த போட்டிப் பாறிட்சை 2017 என்று குறிப்பிட்டு பொதுப் பாறிட்சைகள் ஆணையாளர், முகவர் மற்றும் வெளிநாட்டு பாறிட்சைகள் பிரிவு, இலங்கை பாறிட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ஸ்ரீதர் சுவாமிநாதன்




# தொண்டர்கள் நலன்

அதிமுகவின் முதல் உறுப்பினர் எம்.ஜி.ஆர் தான். கட்சியின் பெயரிலும் கொடியிலும் தனது தலைவரான பேரறிஞர் அண்ணாவுக்கு முக்கியத் துவம் அளித்தார். கட்சி உறுப்பினர் அட்டையிலும் தனது படத்தைவிட அண்ணாவின் படமே பெரிதாக இருக்கும்படி செய்து, தலைவரை மதிக்கும் தொண்டர் என்பதை எம்.ஜி.ஆர் நிரூபித்தார்!

**எம்.ஜி.ஆர்.** மக்களிடம் தனக்கு உள்ள செல்வாக்கைக் கொண்டு அரசியலில் உயர்ந்தாரே தவிர, ரசிகர்களையும் தொண்டர்களையும் தனது சுயநலத்துக்காக அவர் பயன்படுத்திக் கொண்டது இல்லை. அவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர் அவர். தொண்டர்களுக்கு ஒரு ஆபத்து என்றால் துடித்துப் போய்விடுவார். அவர்களது குடும்பம் அதிலிருந்து மீள உதவும்வரை ஓயமாட்டார்.

எம்.ஜி.ஆர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் என்றால் அதில் பங்கேற்க வெளியூர்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வருவார்கள். ஒருமுறை மதுரையில் ஒரு கூட்டத்தில் எம்.ஜி.ஆர் கலந்து கொண்டார். கூட்டத்துக்கு வெளியூரில் இருந்து வந்த சில தொண்டர்கள், இரவு திரும்பிச் செல்லும் போது வாகன விபத்தில் பலத்த காய மடைந்து மதுரை அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

மதுரை நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு எம்.ஜி.ஆர் சென்னை திரும்புவதாகஏற்பாடு. ஆனால்,விபத்து பற்றி கேள்விப்பட்டு தனது பயணத்தை அவர் ரத்து செய்துவிட்டார். காயமடைந்த தொண்டர்களை சந்திக்க மறுநாள் காலையில் மதுரை அரசு மருத்துவமனைக்குச் சென்றார். அவர் வருவது முன்கூட்டியே யாருக்கும் தெரியாது. திடீரென மருத்துவமனைக்கு எம்.ஜி.ஆர் வந்ததும் பரபரப்பு ஏற்பட்டது.

பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த தொண்டர் ஒருவர் படுத்திருந்த இடத்துக்கு எம்.ஜி.ஆர் சென்றார். படுக்கையில் கிடந்த அந்த தொண்டரின் அருகே உதவிக்கு அவரது மனைவி மட்டும் இருந்தார். அந்தப் பெண்மணியின் கோலமே அவர்களது குடும்ப நிலைமைக்கு கட்டியம் கூறியது.

எம்.ஜி.ஆரைப் பார்த்த மகிழ்ச்சி, கணவனின் நிலையால் துயரம், அந்தத் துயரை சமாளிக்க தோள் கிடைத்த நிம்மதி என எல்லாம் கலந்த உணர்ச்சிக் குவியலாய் அந்தப் பெண்மணி அழ ஆரம்பித்து விட்டார். "ஐயா, எப்பப் பார்த்தாலும் உங்க பெயரையும் பெருமையை யும் சொல்லிக் கொண்டிருப்பாரய்யா. அவருக்கு இப்படி ஆகிவிட்டதே" என்று சொல்லிக் கதறினார். கிழிந்த ஆடையுடன் பரிதாபமாகக் காட்சி அளித்த அந்தப் பெண்மணியின் கதறலைக் கண்டு எம்.ஜி.ஆரின் கண்கள் கலங்கின.

"கவலைப்படாதே அம்மா. உன் கணவருக்கு ஒன்றும் ஆகாது. எல்லாம் சரியாகிவிடும். நான் இருக்கிறேன்" என்று ஆறுதல் கூறினார். அந்த வார்டில் இருந்த டாக்டரிடம் தொண்டரின் உடல் நிலை குறித்து விசாரித்து, அவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

டாக்டரிடம் பேசிவிட்டு அந்த தொண்டர் படுத்திருந்த கட்டில் அருகே சென்ற எம்.ஜி.ஆர், அவரது தலையைத் தடவிக் கொடுத்து கையை இறுகப் பற்றி, "நீ எதுக்கும் கவலைப்படாதே. டாக்டரிடம் சொல்லியிருக்கிறேன். இன்னும் சில நாட்களில் நீ வீடு திரும்பலாம். தைரியமாய் இரு" என்றார். தனது அபிமான தலைவர் தன் கையைப் பிடித்து பேசுவதைப் பார்த்து உணர்ச்சிப் பெருக்கில் பதில்கூட சொல்லமுடியாமல், அந்த தொண்டரின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் அருவியாய் கொட்டியது. அந்தத் தொண்டர் உட்பட காயமடைந்த தொண்டர்களின் உடல்நலம் தேறும் வரை, அவர்களது குடும்பங்களுக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்ய எம்.ஜி.ஆர் ஏற்பாடு செய்தார்.

எம்.ஜி.ஆரை மக்கள் தங்கள் வீட்டுப் பிள்ளையாகவே நினைக்கின்றனர் என்பதை விளக்கும் இன்னொரு சம்பவம். எம்.ஜி.ஆர் பேசிய கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு ஊர் திரும்பும்போது மதுரை அருகே வாடிப்பட்டியைச் சேர்ந்த ஒரு தொண்டர் விபத்தில் சிக்கி இறந்து விட்டார். அந்தக் குடும்பத்துக்கு வேண்டிய உதவிகளை செய்யுமாறு கட்சியினருக்கு எம்.ஜி.ஆர் உத்தரவிட்டார். சில நாட்கள் கழித்து வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னையில் இருந்து அவர் மதுரை வந்தார்.

முதலில் வாடிப்பட்டிக்கு சென்று, விபத்தில் இறந்த அந்த தொண்டரின் குடும்பத்தை சந்தித்து ஆறுதல் கூற விரும்பினார். அதன்படி, வாடிப்பட்டிக்கு காரில் சென்றார். இறந்துபோன தொண்டர் இருந்த வீடு குறுகிய சந்தில் இருந்தது. அதில் கார் செல்ல முடியாத நிலை. என்ன செய்வது என்று டிரைவர் சில விநாடிகள் குழம்பினார். இதை கவனித்த எம்.ஜி.ஆர் சட்டென காரைவிட்டு இறங்கி விறுவிறுவென நடக்க ஆரம்பித்து விட்டார்.

சில நிமிடங்கள் நடைக்குப் பின், அந்த தொண்டரின் வீட்டை எம்.ஜி.ஆர் அடைந்தார். அது மிகவும் எளிமையான சிறிய வீடு. வாசலில் தனது ஷூவை கழற்றிவிட்டு உள்ளே சென்றார். அங்கே வைக்கப்பட்டிருந்த இறந்து போன தொண்டரின் படத்துக்கு மரியாதை செலுத்திய பின், குடும்பத்தாரை விசாரித்து ஆறுதல் கூறினார். கைக்குழந்தையுடன் இருந்த அந்த ஏழைத் தொண்டரின் மனைவிக்கு தைரியம் சொன்னார்.

அவர் பேசிக் கொண்டிருக்கும்போது, அருகே இருந்த தொண்டரின் தாயாரால் துயரத்தை அடக்க முடியவில்லை. யாரும் எதிர்பாராத வகையில் எம்.ஜி.ஆரின் தோளில் கைபோட்டு அவரை இறுகக் கட்டிப்பிடித்து, "என் மகன் போயிட்டானேப்பா, நான் என்ன செய்வேன்?" என்று குலுங்கி அழ ஆரம்பித்தார்.

எம்.ஜி.ஆர் தோளில் அந்த மூதாட்டி உரிமையுடன் கைபோட்டாலும் அங்கிருந்தவர்களும் உதவியாளர்களும் திகைத்தனர். எம்.ஜி.ஆர் எப்படி எடுத்துக் கொள்வாரோ என்று அவர்கள் நினைத்தனர். ஆனால், அந்த தாயின் உணர்வுகளை அவர் புரிந்து கொண்டார். அந்த மூதாட்டியை விலக்க வந்தவர்களை பார்வையாலேயே தடுத்து நிறுத்தினார் எம்.ஜி.ஆர்!


அந்த தாயை அணைத்தபடி, "நானும் உங்க மகன்தான். உங்க குடும்பத்துக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்யக் காத்திருக்கிறேன். கவலைப் படாதீங்க" என்று எம்.ஜி.ஆர் ஆறுதலாய் பேசினார். அந்த தாயின் சோகம் மறைந்து மனம் லேசானது!

எம்.ஜி.ஆர் நடித்த 'புதியபூமி' திரைப் படம் 1968ம் ஆண்டு வெளியானது. அந்தப் படத்தில் எம்.ஜி.ஆர் ரசிகர்களால் பெரிதும் விரும்பப்படும் சூப்பர் ஹிட் பாடல் இதுஞ்


**'நான் உங்கள் வீட்டுப் பிள்ளை**
**இது ஊரறிந்த உண்மை**
**நான் செல்லுகின்ற பாதை**
**பேரறிஞர் காட்டும் பாதை!'**

(தொடரும்)














# ஹீலியோஸ்திரும்ப வருவாரா?

**உலகம் சுற்றி பார்ப்போம் 5**

சாள்ஸ் ஜே போர்மன்

ரோடோஸ் நகரின் கோட்டைக்குள் ஒரு மாலையைக் கழித்த பின்பு அடுத்தநாள் திட்டமாக அதிகாலையில் நகரின் துறைமுக பகுதியை சுற்றிப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம் என்று நானும்கதிரும்திட்டமிட்டுக்கொண்டோம்.

காலையில் வெயில் ஏற முதலேயே நகரின் ஒரு பக்கமாக இருக்கும் துறைமுகப் பகுதியை சுற்றி நடந்து அங்கு என்னென்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு அறைக்குத் திரும்பி வந்து, மாலையில் நகருக்கு எதிர்த்திசையில் சுமார் 3 கி.மீ தொலைவிலிருக்கும் புராதன ரொடினி பூந்தோட்டத்துக்குப் போவதற்கிருந்தோம்.

மண்டிராக்கியில் இரண்டு துறை முகங்கள். ஒன்று நகருடைய எல்லையுடன் இருக்கும் வியாபாரத் துறைமுகம். அதைத்தாண்டி நகரின் வடக்காக உள்ள சிறிய படகுத்துறைமுகம். பண்டைக்கால ரோடோஸின் இராணுவப் பாதுகாப்புத் துறைமுகம். அவற்றைத் தவிரவும் நகரில் வேறு சிறிய, பெரிய துறைமுகங்களும் ஆங்காங்கே இருக்கின்றன.

காலைச் சூரியனில் குளித்துக்கொண்டு சுற்றி ஓடிப்பாய்ந்துகொண்டு அனுபவித்தான் கதிர். அவன் ரோடோஸைப் பற்றி வாசித்த புத்தகத்தில் அந்த இடத்தின் படங்களும் விபரங்களும் இருந்ததால் தூரத்தில் தெரிந்த மான் சிற்பங்களைக்காட்டி "அங்கே நிற்கின்றன எலபோஸும், எலபீனாவும்," என்று கூவினான். அவனுடைய ஆர்வத்தைப் போக்க அதை நோக்கி நடந்தோம்.

கடல்மூலம் ரோடோஸுக்குள் நுழைபவர்களைஇரண்டுபக்கமும்இருக்கும் 15 மீற்றர் உயரமான தூண்களில் இருக்கும் இரண்டு வெண்கலத்திலான மான்கள் வரவேற்கின்றன. இதே உயரத்தூண்களின் மீது உலகின் பண்டைக்கால ஏழு அதிசயங்களில் ஒன்றான கொலொஸஸ் என்றழைக்கப்படும் சூரியக்கடவுளான ஹீலியோஸின் 30 மீற்றர் உயரமான பிரம்மாண்டமான சிற்பம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஹீலியோஸ்தான் அமெரிக்காவில் நியூயோர்க்கில் இருக்கும் சுதந்திரதேவி சிற்பத்திற்கு அடிப்படையான கருவாக இருந்தது என்றும் சிலர் சொல்கிறார்கள். ஹீலியோசின்கையில் ஒரு எரியும் தீப்பந்தம்-விளக்கு இருந்ததாம்.

கி.மு 305 இலிருந்து ரோடோஸை தாக்கிய மசடோனிய அரசன் டெமெதிரியுஸ் போலியோர்ஸேடஸின் (Demetrius Poliorcetes) தாக்குதலை சமாளிக்க ரோடோஸின் துறைமுகம் பலப்படுத்தப்பட்டபோது கி.மு 280 இல் கொலொஸஸ் ஸ்தாபிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஆனால், கி.மு 226 இல் ரோடோஸ் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் அது இடிந்து விழுந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

துறைமுகத்தினருகில் ஓரிருவர் தூண்டில் போட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்தார்கள். கடந்த இரவு மதுக்கேளிக்கைகளில் திளைத்த சுற்றுலாப் பயணிகள் அந்தக்காலைநேரத்தில்இன்னும் எழுந்து நடமாட ஆரம்பிக்கவில்லை என்பதால் மக்கள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. இப்படியான சமயத்தில் முக்கியமான இடங்களுக்குப் போனால் நெருக்கியடிக்காமல் படங்கள் எடுக்க வசதியாக இருக்கும் என்பது எனது அனுபவம்.

"நீ இங்கே நின்று கொள். நான் காலைச்சாப்பாட்டுக்கு ஏதாவது வாங்கிக்கொண்டு வருகிறேன்," கதிரிடம் சொல்ல அவன் தலையை ஆட்டினான்.

துறைமுகத்தைச்சுற்றி எண்ணி முடிக்க முடியாத அளவு சிற்றுண்டிச்சாலைகளும், உணவுச்சாலைகளும், தவறணைகளும் இருந்தன. அப்போதுதான் அவைகளைத் திறக்க ஆரம்பித்திருந்தார்கள். பெரும்பாலான உணவகங்கள் பத்துமணிக்கு பிறகுதான் திறக்கப்படும் என்று தெரிந்தது. இப்பகுதியிலுள்ள வியாபாரஸ்தலங்களும், அர சதிணைக்களங்களும் 1920 களில் இத்தாலியர்கள் கையில் ரோடோஸ் இருந்தபோது கட்டப்பட்டவை. அக்கட்டடக்கலையும் மண்டிராக்கியின் பழையகாலக் கட்டடக்கலைக்கும் வித்தியாசம் அப்பட்டமாகத் தெரிந்தது. வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் சுற்றிக் கடந்துபோகும் இடம் இது.

கிரேக்க ரொட்டிக்குள் பாலாடையும் கீரையும் வைத்து சூளையடுப்பில் செய்யப்பட்ட இரண்டு ஸ்பனகோபிதாக் களைவாங்கிக்கொண்டுகதிர் நிற்குமிடத்தை நோக்கித் திரும்பி நடந்தேன்.

துறைமுகக் கட்டிலிருந்து கால்களை வெளியே போட்டபடி காலைச் சூரியக்கதிர்களின் கீழிருந்து கதைத்தபடி நாங்கள் ரொட்டியைச் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து அகன்றோம்.

குழுக்களாகவும் தனித்தனியாகவும் சுற்றுலாப் பயணிகள் துறைமுகக் கரையை நோக்கி முற்றுகை இட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து ரோடோஸைச் சுற்றிவர உள்ள நீச்சல் கடற்கரைகளுக்கும் சிறுதீவுகளுக்கும் படகுசேவைகள் நிறைய இருந்தன. ஒவ்வொரு படகுகளும் போகும் இடங்களைப் பற்றிய விபரங்களடங்கிய விளம்பரங்களுடன் ஆங்காங்கே வியாபாரம் பிடித்துக் கொண்டிருந்தார்கள் பலர்.

அத்துறைமுகத்திலிருந்து துருக்கியிலிருக்கும் மார்மாரிஸ் நகருக்குப்போய் துருக்கியின் கரையோரப் பகுதியில் ஒரு பண்டைக்கால நகருக்குப் போய்த் திரும்பி வரும் திட்டம் எங்களிடம் இருந்தது. எனவே அங்கே அது பற்றிய விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டோம். வெவ்வேறு படகுச்சுற்றுலா பற்றி விளம்பரப் பிரசுரங்களும் பெற்றுக் கொண்டு தொடர்ந்து நடந்தோம்.

ரோடோஸ் நகரில் பல இடங்களிலும் காணக்கூடிய கட்டடங்களில் இஸ்லாமிய ஐரோப்பிய கலாச்சாரக் கலவையைக் காணலாம். அவைகளில் ஒன்றான புதியசந்தை (Nea Agora) க்கட்டடம் அதையடுத்து இருந்தது. வித்தியாசமான நிற, கலாச்சாரக் கலவையான மூரியக் கட்டடக்கலையை இத்தாலியின் கையில் ரோடோஸ் இருந்தபோது கட்டப்பட்ட இதில் அப்பட்டமாகக் காணலாம்.

அடுத்ததாக இருந்தது 24 மணிநேரமும் உயிருடன் இயங்கும் ரோடோஸின் சூதாட்ட அரங்கம். மிகப்பெரிய அளவில் 1925 இல் கட்டப்பட்டது இது.

சூதாட்ட விடுதிக்கெதிராக சுமார் அரைக் கி.மீ தூரத்துக்குப் பரந்து கிடந்தது "எல்லி கடற்கரை". இது இளைய வயதுள்ளவர்களால் மற்றப்படி நிறைந்திருக்கும். ஆனால், காலையில் பெரும்பாலும் வெறுமையாகக் கிடந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிந்த மஞ்சள் வெள்ளை மணற்றரையெங்கும் விதம்விதமாக சார்மனைக் கதிரைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இன்னும் சில மணிகளில் அருகிலுள்ள உல்லாச விடுதிகளில் தங்குபவர்கள் இவைகளை முழுவதுமாக ஆக்கிரமித்து விடுவார்கள். இரவுகளின் ஆழம் வரை இங்கே நடமாட்டம் குறையாது.

வெயில் ஏறிக்கொண்டிருந்தது. கதிரும் நானும் கடற்கரை மணலிலும் ஆழமில்லாத நீர்ப்பகுதியிலும் வெறுங்காலுடன் சொஞ்ச

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

8-ம் பக்க தொடர்ச்சி...

படிப்பைத் தொடர முடியாமற்போய்விட்டது. ஆகவே, தன்னைப்போலப் படிக்கும் கனவுகளோடிருக்கும் வசதியற்ற, பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கனவை நிறைவேற்றுவதற்கு ஒரு சிறார் இல்லத்தை ஆரம்பித்து நடத்துங்கள்" என்று கேட்டிருந்தார். 1990இல் காந்தரூபன் கடற்படை படகுடன் மோதி மரணமானார். காந்தரூபன் அறிவுச் சோலையை 13.11.1993 இல் பிரபாகரன் ஆரம்பித்திருந்தார்.

இப்படித் தொடங்கிய காந்தரூபன் அறிவுச்சோலையைத் தன்னுடைய நேரடிக் கண்காணிப்பிலும் நெறிப்படுத்தலிலும் வழிநடத்தினார். அங்கே அடிக்கடி சென்று அங்கிருந்த பிள்ளைகளுடன் உறவாடி வந்தார். இதனால், புலிகள் இயக்கத்திலும் பொது மக்களிடத்திலும் காந்தரூபன் அறிவுச் சோலையைப் பற்றி பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது. புலம்பெயர்ந்த மக்களும் காந்தரூபன் அறிவுச்சோலைக்காகப் பெருமளவு ஆதரவை வழங்கி வந்தனர். காந்தரூபன் அறிவுச் சோலையின் தொடர்ச்சியாகவே பின்னர் "செஞ் சோலை" என்ற பெண்சிறுவர்களுக்கான இல்லத்தைப் பிரபாகரன் ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு சிறப்பு வரலாற்றைக் கொண்ட அறிவுச்சோலைச் சிறுவர் இல்லத்தை ஷிரி நாதன் அறிவுச்சோலை சிறுவர் இல்லமாக்கிய தரப்பு, இதனோடு மட்டும் நிற்கவில்லை. அதாவது காந்தரூபன் அறிவுச்சோலையின் பதிவை கையகப்படுத்தியது மட்டுமல்ல, புலிகளால் கணினிப் பிரிவின் பயன்பாட்டுக்கென் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தொகுதியையும் புலிகளின் பராமரிப்பிலிருந்த 14 ஏக்கர் காணியையும் கூடக் கையகப்படுத்தியிருக்கிறது. கிளிநொச்சி நகரிலிருந்து 1400 மீற்றர் தொலைவிலுள்ள கிளிநொச்சி நகர அபிவிருத்திப் பகுதியிலுள்ள திருவையாறிலேயே இந்தக் காணியும் கட்டிடத்தொகுதியும் கையகப்படுத்தியிருக்கிறது. இதற்குத் துணையாகவும் ஆதரவாகவும் செயற்பட்டிருக்கிறார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் என்ற அடிப்படையில் தன்னுடைய அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி, இதைச் செய்துள்ளார் சிறிதரன்.


விடுதலைப்புலிகள் செயற்பட்ட காலத்தில் திருவையாறு 02 ஆம் பகுதியில் மிகப் பெரியதொரு கணினிப்பிரிவு இயங்கியது. 14 ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பகுதியில் இதைப்புலிகள் நிர்மாணித்து இயக்கி வந்தனர். பிரபாகரனின் மூத்த மகன் சார்ள்ஸ் அன்ரியின் பொறுப்பிலிருந்த இந்தக் கணினிப் பிரிவு இறுதி யுத்தம் வரை இயங்கியது. யுத்தம் முடிந்த பின்னர் இந்த வளாகத்தைப் படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இந்தக் காணிகள் அனைத்தும் பொது மக்களுடையவை. 1973 ஆம் ஆண்டு இரணைமடுத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா இரண்டு ஏக்கர் வீதம் அரசாங்கத்தினால் விவசாய உற்பத்திக்கென வழங்கப்பட்டவை. கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள வளமான செம்மண் காணிகள் இவை. இதனால், அந்தக் காலத்தில் திருவையாறில் சிறப்பான விவசாயச் செய்கை நடந்தது. யுத்தம் வலுத்தபோது இந்தக்காணிகள் பலவிதமான தேவைகளுக்கென மாற்றமடைந்தன. அத்துடன் சில காணிகளின் உரிமையாளர்கள் கிளிநொச்சியை விட்டு வெளியேறியிருந்தனர். இவ்வாறான ஒரு சூழலிலேயே இங்குள்ள ஏழு பேரின் காணிகளைப் புலிகள் தமது கணினிப்பிரிவுக்கெனப் பயன்படுத்தினார்கள்.

யுத்தம் முடிந்த பிறகு, படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த இந்தக் காணிகளை மீட்பதற்காக உரிமையாளர்களிற் சிலர் முயற்சித்தனர். இதற்காக அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் தமது கோரிக்கைக் கடிதங்களைக் கொடுத்து விட்டுப் பதிலுக்காகக் காத்திருந்தனர். இதேவேளை இந்தக் காணியில் கண்வைத்தார் ஷிரி நாதன் என்ற கதிர்காமநாதன். இவர் புலம்பெயர்ந்து சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெருவர்த்தகர். யுத்தத்திற்குப் பிறகு இலங்கைக்கு வந்து குதித்த இவர், தமக்கிருக்கும் நிதி வளத்தைப் பயன்படுத்தி, புலிகளின் சொத்துகளைச் சுற்றி வளைத்துக் கையகப்படுத்தும் முயற்சிகளில் இறங்கினார். இதற்குத் தோதாக உள்ளூரில் கிளிநொச்சியில் சிலரை வளைத்துப்போட்டார். கொழும்பில் அரசாங்கத்தரப்பிலும் சிலரைக் கைக்குள் வைத்துக் கொண்டார். இதனையடுத்து முதற்கட்டமாக, கிளிநொச்சி அறிவியல் நகரில் புலிகள் அமைத்திருந்த முதியோர் இல்லத்தைத் தன்னுடைய பொறுப்பில் எடுத்தார். புலிகளால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களுடன் மேலும் சில கட்டிடங்களைக் கட்டி, இப்பொழுது இதைப் பெருப்பித்திருக்கிறார்.

இதேவேளை இந்தக் காணியைத் தமது கிராமத்தின் பொதுப் பயன்பாட்டுக்குத் தருமாறு கிராமப் பொது அமைப்புகள் கரைச்சிப் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்தன. ஆனாலும் அது நடக்கவில்லை. இதற்குப் பதிலாக அறிவியல் நகர், மலையாளபுரம் கிராமங்களில் உள்ள சில வறிய மக்களுக்குச் சிறிய அளவிலான உதவிகளைச் செய்தார் நாதன். கூடவே சனங்களை வென்றெடுக்கும் முகமாக அந்தப் பகுதியிலிருந்த ஒரு கோயிலையும் பெரிதாக நிர்மாணித்தார்.

இதில் வெற்றியடைந்த ருசியை வைத்துக் கொண்டு அடுத்த கட்டமாக சிறுவர் இல்லமொன்றை அமைப்பதற்கான முயற்சியில் இறங்கினார் நாதன். இதற்குரிய காணியை நாதனுக்கு உள்ளூரில் வலக்கை, இடக்கையாக இயங்கும் ஒருசிலர் அடையாளம் காட்டினர். அதன்படியே திருவையாறுக் காணி கையகப்படுத்தப்பட்டது. இந்தப் பதினான்கு ஏக்கர் நிலப்பரப்பையும் கரைச்சிப் பிரதேச செயலகம் ஷிரி நாதனிடம் வழங்கியுள்ளது. தனியொருவருக்கு இவ்வளவு காணியையும் பிரதேச செயலகத்தினால் வழங்க முடியாது. இதற்காக ஷிரி நாதன், ஒரு தந்திரோபாயத்தைக் கையாண்டார். ஏற்கனவே முதியோர் இல்லத்துக்கான காணியை எடுக்கும்போது கையாண்ட உத்தியைப்போல, உள்ளூரில் உள்ள சிலருடைய பெயர்களை இணைத்து, சிறுவர் இல்லத்துக்கும் ஒரு சபையை உருவாக்கினார் நாதன். அந்தச் சபை சிறுவர் இல்லமொன்றை அமைப்பதற்கான காணியொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுத்து கரைச்சிப் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் (சிறிதரன் எம்பி) போன்றவற்றிடம் விண்ணப்பித்தது. இது ஒரு சம்பிரதாயமான விண்ணப்பம் மட்டுமே. நடவடிக்கைகள் அனைத்தும் பின்கதவினால் நடந்து முடிந்தன.



தொலைபேசி / Telephone 021 228 5739
மின்னஞ்சல் / Email dpskarachchi@gmail.com
தொலைநகல் / Fax 021 228 5635
பிரதேச செயலர் / Divisional Secretary 021 228 3874

பிரதேச செயலகம் - கரைச்சி - கிளிநொச்சி
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - කරච්චි - කිළිනොච්චිය
Divisional Secretariat - Karachchi - Kilinochchi

எனது இல / My No KN/KR/LB/Thiru-ii/226/2*2
திகதி / Date 03.01.2017


திரு.திருநாவுக்கரசு பொன்னம்பலம்,
சாவகச்சேரி.

காணி உரிமை தொடர்பானது

மேற்படி விடயம் தொடர்பாக திருவையாறு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் தங்களால் உரிமைகோரப்படும் காணி தொடர்பாக குறித்த காணி விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்டு யுத்தத்தின் பின்னர் இராணுவத்தின் பாவனையிலிருந்து இராணுவத்தினருக்கு காணிசுவீகரிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு காணி கையளிக்கப்பட்டுள்ளது குறித்த காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் 21.11.2014ந் திகதிய வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் குறித்த காணியை இராணுவத்தினர் தமது பாவனையிலிருந்து விடுவித்து தற்போது கையளித்துள்ளனர். குறித்த காணியிலுள்ள பெரிய கட்டடங்கள் காணப்பட்டமையால் தற்போது அறிவுச்சோலை சிறுவர்இல்லம் இயங்குவதற்கு தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த காணியின் சுவீகரிப்பு தொடர்பான நடவடிக்கை நிறுத்தி காணிஆணையாளரின் ஆலோசனை பெறப்பட்டு குறித்த காணி தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் குறித்த காணி தொடர்பான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

பிரதேச செயலர்,
கரைச்சி.

காணி உரிமையாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம்.



மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் - வடமாகாண சபை
80, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
DEPARTMENT OF PROVINCIAL LAND COMMISSIONER - NORTHERN PROVINCIAL COUNCIL
80, KANDY ROAD, CHUNDUKKULI, JAFFNA

உமது இல / Your No
எனது இல / My no NP/28/LKH/KARA/GEN/2016
திகதி / Date 04.02.2017

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

காணி விடயம் தொடர்பானது - திரு.தி.பொன்னம்பலம்

மேற்படிவிடயம் தொடர்பாக திரு.திருநாவுக்கரசு பொன்னம்பலம் என்பவரால் 01.02.2017 ம் திகதி நேரடியாக தந்த முறைப்பாடு சார்பானது.

சுவீகரிப்பு கைவிடப்பட்டது தொடர்பாக காணிசுவீகரிப்புச்சட்டத்தின் பிரிவு 39 இன் கீழ் வர்த்தமானி பிரசுரம் செய்யவேண்டும். அறிவுச்சோலை சிறுவர் இல்லத்திற்கு தற்காலிகமாகவே கையளிக்கப்பட்டுள்ளதாக தங்களது KN/KR/LB/Thiru-ii/226/2*2 ம் இலக்க 11.01.2017 ம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே காணியின் ஆரம்ப உரிமையாளர்களுக்கு காணியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கை.மகேஸ்வரன்
மாகாணக்காணி ஆணையாளர்.

மாகாண காணி ஆணையாளரின் கடிதம்.

பிரதி: திரு.திருநாவுக்கரசு பொன்னம்பலம், சாவகச்சேரி.

(அடுத்த வாரமும் வரும்)

---

நேரம் நடந்தோம். இப்பிரயாணத்தின் முதல் கடற்கரை இது. உற்சாகத்துடன் நீருக்குள் குதித்து கதிரின் உடைகள் ஏற்கனவே நனைந்து விட்டன. "போய் முழுசாக நீந்து," என்று நான் சொல்லமாட்டேனா என்ற எதிர்பார்ப்பு அவனிடம் தெரிந்தது. ஆனால், குளிப்பதற்கான எந்த ஆயத்தத்துடனும் நாங்கள் வராததால், "இன்னொரு நாள் இங்கே வந்து குளிப்போம். இப்போது எங்கள் விடுதிக்குத் திரும்பிப் போவோம். அங்கே நீச்சல்குளத்தில் நாங்கள் நீந்தலாம்" என்று அவனிடம் சொல்லிவிட்டுத் திரும்பி நகரை நோக்கி நடக்க அவனும் என்னைத் தொடர்ந்தான்.

அருகே நடந்து போகும்போது ஒரு பக்கத்தில் பகுதி இடிந்துபோன பள்ளிவாசலொன்றையும் அதனுடன் இணைக்கப்பட்ட மயானம் ஒன்றையும் காண முடிந்தது. இடிபாடுகளுக்குள் இருந்த அந்த மயானத்தின் பெரும்பகுதி செடிகொடிகள் வளர்ந்தும் குப்பையாகவும் இருந்ததை இடிந்த மதிலின், வேலிகளின் ஊடாகக் காணமுடிந்தது.

கிரீஸுக்கும் பக்கத்து நாடான துருக்கிக்கும் இருக்கும் அரசியல் வேறுபாடுகள் ஞாபகத்துக்கு வந்தது. ஆனாலும் அது இவ்வளவு வெளிப்படையாக



ஒரு பண்டைய ஞாபகச்சின்னமாக இருக்கக்கூடிய விடயத்தில் பிரதிபலிக்கும் என்று நான் நினைத்திருக்கவில்லை.


நான் அந்த வேலியருகில் சென்று எட்டிப்பார்ப்பதைக் கண்டதும் கதிர் "அதுக்குள் பாய வேண்டாம், பொலீஸ் பிடிக்கும்," என்றான். இப்படியான தொன்மையான, சரித்திர, சமயக் கட்டிடங்களைக் கண்டால் நான் அதைப் பார்க்காமல், ஆராயாமல் விடமாட்டேன் என்று அவனுக்குத் தெரியும்.

நான் அப்பாகத்தைச் சுற்றி வீதிப்பக்கமாக நடந்ததில் அதற்குள் போகும் வழியிருப்பதைக் கண்டேன். உள்ளே ஓரிருபகுதியில் மனித நடமாட்டத்தையும் காண முடிந்தது. எதற்கும் முதலில் இதைப்பற்றி கூகுளிப் பார்க்கலாம். கொஞ்சமாவது தெரிந்து கொண்டபின் உள்ளே சென்று பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

நகருக்குள் வந்தவுடன் முதல் தடவையாக ரோடோஸ் பேருந்தில் ஏறி எங்கள் விடுதிக்குத் திரும்பினோம். பேருந்து நிலையத்திலே அங்கிருந்து எங்கெல்லாம் போக வசதிகள் இருக்கின்றன என்று கேட்டுத் தெரிந்து கொண்டு நேர அட்டவணையையும் எடுத்துக் கொண்டேன்.

சொல்ல மறந்து விட்டேன், துண்டுகளாக இடிந்து விழுந்த ஹீலியோஸை நகருக்குள் எடுத்து சென்றதாக கதைகள் சொல்லப்படுகின்றனவே தவிர அத்துண்டுகள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. பண்டைய விபரிப்புக்களையும், வரைபடங்களையும் பாவித்து அதே இடத்தில் ஹீலியோஸின் பிரம்மாண்டமான நவீன சிற்பத்தை நிறுவும் எண்ணம் கிரேக்க அரசிடம் இருக்கிறதாகச் செய்திகள் வருகின்றன. ஆனால் 2008ம்ஆண்டு முதல் பெரும் பொருளாதார சரிவில் தளர்ந்திருந்தும் கிரேக்க அரசிடம் அதற்கான பொருள்வளம் தற்போது இல்லை. தொடரும்.

# யாழ்ப்பாணத்தாரின் கெட்ட குணங்களும்... வெள்ளவத்தையாரின் நல்ல குணங்களும்!






யாழ்ப்பாணத்தாருக்கு என விசேசமாக சில குணங்கள் உண்டு. சுட்டுப்போட்டாலும் அவை மாறாது. அந்த குணங்களை விட்டால், உடலைவிட்டு உயிர்போய் விடும் என்பதை போல நம்மவர்கள் நடந்து கொள்வார்கள்.

இப்பொழுது பாருங்கள், கொழும்பில் ஒரு குட்டி யாழ்ப்பாணம் இருக்கிறது. அது வெள்ளவத்தை. வெள்ளவத்தையில் காடுவெட்டி வேளாண்மை செய்து பரம்பரையாக குடியிருப்பவன் அல்ல தமிழன். வடக்கு, கிழக்கிலிருந்து சென்றவர்கள்தான் அங்கு குடியிருக்கிறார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்கள்தான் அனேகர். யாழ்ப்பாணத்தாரில் உள்ள சில குணங்கள் குட்டி யாழ்ப்பாணமான வெள்ளவத்தையாரிடம் இல்லை. தனியே வெள்ளவத்தை என்று சொல்ல முடியாது. அக்கம் பக்கத்தில் உள்ள தெஹிவளை, பம்பலபிட்டி, கொட்டஹேன என தமிழர்கள் செறிவாக உள்ள கொழும்பு பிரதேசங்களை மையமாக வைத்துதான் குறிப்பிடுகிறோம்.

யாழ்ப்பாணத்தாருக்கும், கொழும்பாருக்கும் அப்படியென்ன பெரிய வித்தியாசம் என தலையை பிய்க்காதீர்கள். சும்மா ஒரு பொழுதுபோக்கிற்காக சில விடயங்களை பட்டியல்படுத்தியுள்ளோம். படிக்கும்போது சும்மா பொழுதுபோக்கு மாதிரித்தான் இருக்கும். ஆனால் நமக்கென வந்தால் வயிறுபற்றியெறியும் அத்தியாவசிய பிரச்சனைகளாக மாறும். அன்றாட வாழ்க்கையில் நடக்கும், படிக்கும்போது அவ்வளவு பெரிதாக தோன்றாத, நமக்கென்று வரும்போது பெரிய பிரச்சனைகளாக தோன்றும் சில விடயங்களில், யாழ்ப்பாணம் கொழும்பு பகுதிகளில் உள்ள நல்லது கெட்டதுகளை பட்டியல்படுத்தியுள்ளோம்.

**கவுண்டர் காண்டாமிருகங்கள்**

டயப்பிற்றீஸ் காரனாக இருப்பார். ஆஸ்பத்திரியில் கிளினிக் முடித்துக் கொண்டு, பக்கத்திலுள்ள கடையில் சீனி போடாத பிளென்ரீ குடித்துவிட்டு காசை கொடுத்தால், மிச்சக்காசு இல்லையென பத்து ரூபாவிற்கு நாலு இனிப்பு ரொபியை எடுத்து வைத்துவிட்டு, அடுத்தவரிடம்பில்லை கேட்பான் கவுண்டரில் இருக்கும் காண்டாமிருகம். ரொபி வேண்டாம் என்றால் முகத்தில் ஒரு ரியாக்சன் இல்லாமல் எடுத்து உள்ளே வைத்துவிட்டு மற்றப் பக்கம் பார்த்துக் கொண்டிருப்பான். யாராவது உரத்த குரலில் கேட்டால்தான் புதையல் தோண்டுவதை போல கல்லாப் பெட்டிக்குள் அரைமணித்தியாலம் தோண்டி பத்து ரூபா கொடுப்பான். பேருந்துகளில் இன்னும் மோசம். மீதிப்பணம் கேட்டால், ஜிஜி பொன்னம் என்ற நினைப்பில் "மாத்தின காசு கொண்டரத் தெரியாதோ. மிச்சம் தேவையென்றால் பஸ் நிற்கிற இடத்துக்கு வாங்கோ" என கொண்டக்ரர் லோ கதைப்பான். யாழ்ப்பாணம் என்றல்ல, வடக்கு கிழக்கில் பரவலாக உள்ள தமிழர்களின் தனிக்குணம் இது. கொழும்பில் ஒரு ரூபாவிற்கும் மதிப்பு கொடுக்கும் வர்த்தக குணம் அதிகம். கடை, பேருந்துகள் என்றில்லை, முச்சக்கரவண்டிகளிலும் சில்லறை மிச்சம் கொடுப்பவர்கள் அனேகர்.

**றோட்டோர றோமியோக்கள்**

இப்போது யாழ்ப்பாணம் இருக்கிற நிலைமையில் பெண்களை பெற்றாலே வயிறு பக்குபக்கென எரியும். அதிலும் கொஞ்சம் அழகான பெண்ணை பெற்றால்... பார்வையாலே துகிலுரியும் மன்மத குஞ்சுகளிடமிருந்து அவர்களை காப்பாற்ற கிருஷ்ண பரமாத்மா பத்து பதினைந்து சேலை தொழிற்சாலைதான் ஆரம்பிக்க வேண்டும். சில்வெஸ்டர் ஸ்ரோலோன் போல அப்பன்காரன் அருகில் வந்தாலும் றோட்டோர றோமியோக்கள் அடங்கமாட்டார்கள் யாழ்ப்பாணத்தில். ரொமான்ஸ் செய்வது எப்படியென நாக்கை சுழற்றி ஒரு அக்சனை ஒரு படத்தில் ஆர்யாவிற்கு சந்தானம் சொல்லிக்கொடுப்பார். அதை பார்த்தோ என்னவோ, வீதியோரங்கள், பஸ்நிலையங்களில் றோமியோக்கள் நாய் நாக்கை சுழற்று வதைபோல எதையோ செய்து கொண்டிருப்பார்கள். அந்த கண்றாவியை பார்த்தால் அந்த பெண்ணிற்கு காதல் வராது. சத்திதான் வரும். எதிரே ஒரு பெண் வந்தால், எங்காவது ஜோடி வந்தால் ஆளை விழுங்குவதைபோல பார்த்துக் கொண்டிருக்கும் றோமியோக்களால் ஆனது வடக்கு. கொழும்பில் அது கிடையாது. வெள்ளவத்தை மார்க்கெட்டிற்கு முன்பாகவோ, பம்பலபிட்டி எம்.சியில் நின்றோ நம்மாள் ஒருவன் பக் பக் பார்வை பார்த்துக் கொண்டு நின்றால், "எப்ப தம்பி கொழும்பிற்கு வந்தனீ... எப்ப ஊருக்கு கிளம்புகிறாய்" என கேட்கலாம்.

**ஸ்பீக்கர் விழுங்கியவர்கள்**

நம்மாள் தொலைபேசியில்தான் பேசுவான். ஆனால் அதில் பேசுகிறோம் என்ற விவஸ்தையே கிடையாது. பக்கத்து வீட்டுக்காரனுடன் நேரில் பேசுவதை போல பேசுவான். இன்னும் சற்று குரல் வைத்தால் அமெரிக்க கண்டத்தில் இருப்பவனிற்கே கேட்கும். அப்படி சத்தம் வைத்து தொலைபேசியில் பேசுவார்கள். பேருந்தில் இளையராஜாவின் பாடல்கள் தாலாட்டிக் கொண்டிருக்கும். அப்போது ஒரு ஸ்பீக்கர் தொண்டைக்காரன் போனில் பேசத்தொடங்குவான். வீட்டில் ஆட்டுக்குகுழை வெட்டியதா என்பதில் தொடங்கி மத்தியானம் முருங்கைக்காய் வைக்க சொல்வது வரை மனைவியுடன் கத்தி பேசுவான். வீடிருக்கும் திரை பார்த்து பேசினால்தொலைபேசியே தேவையில்லை. குறிப்பாக நடுத்தர வயதுக்காரர்கள் பெரும்பாலானவர்கள் இப்படித்தான். கொழும்பில் உள்ளவர்களிடம் இந்த இயல்பை காண முடியாது.

**இது பெண்கள் மேற்றர்**


ஊரில் இருக்கும்வரை ஓவராக சீன் போடும் பெண்கள்தான் அனேகர். முழங்கால் தெரிய பாவாடை அணிய மாட்டேன், ஜீன்ஸ் போடுபவர்கள் பெண்கள் இல்லை, சேலை கட்டும் பெண்களிற்குத்தான் ஒரு வாசம் உள்ளதென் இன்னும் பாலசந்தர், பாரதிராஜா பட ஹீரோயின்கள் போலவே தம்மை கற்பனை பண்ணிக் கொண்டிருப்பார்கள். உடையென்பது நமது சௌகரியத்திற்கு, நமக்கானது என்பதை விட, "பார்க்கிறவை என்ன சொல்லுவினமோ" என்று தமது உடைகளை மற்றவர்களின் கண்ணாடியில் பார்க்கும் மோசமான குணம் நமது பெண்களிடம் இருக்கும். இதே பெண்கள் கொழும்பு போனால், கொழும்பில் தங்கியிருந்தால் ஓவர் நைட்டில் கண்ணகியிலிருந்து சில்க் ஸ்மிதாக்களாகிவிடுவார்கள். சில்க் ஸ்மிதா மாதிரி உடையணிவதொன்றும் தப்பில்லை. நமக்கு எது பொருத்தம், எது நமக்கு சௌகரியம் என்று பார்த்து உடுத்தாமல், ஊருக்காக உடுத்தும் பகட்டு வாழ்க்கையை ஊரில் வாழ்வார்கள். கொழும்பிலிருந்து புறப்படும்போது, அந்த ஆடைகளை அப்படியே மடித்து பெட்டிக்கு அடியில் வைத்துவிடுவார்கள். கொழும்பு தமிழ் பெண்கள் அப்படியல்ல, மற்றவர்களிற்காக அல்லாமல் தமக்காக வாழ்பவர்கள்.

**விரும்பினால் வா... இல்லாவிட்டால் போ!**

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது கடைகள்தான் அதிகம். அதிலும் அனேக கடைகள் ஈயோட்டிக்கொண்டுதான் இருக்கின்றன. முதலாளி, அங்கு வேலை செய்பவர்களின் நடமாட்டம்தான் கடையிலிருக்கும். எப்பொழுதாவது வரும் வாடிக்கையாளர்களிடம் கடை முதலாளியில் இருந்து, கடைப்பையன் வரை யாரும் முறையாக வர வேற்கமாட்டார்கள். வந்தால் வா, வராவிட்டால் போ என்ற பாணியில் மூஞ்சையை வைத்திருப்பார்கள். நகரத்தில் உள்ள பெரிய உணவகங்கள், வர்த்தக நிலையங்களில் எல்லாம் முதலாளி இருந்தால்தான் கடைப்பையன்களின் கவனிப்பு. சில உணவகங்களிற்கு போனால், கடைப்பையன்கள் ஒன்றாக இருந்து அரட்டையடித்து கொண்டிருப்பார்கள். வாடிக்கையாளர் பசியால் வாடிப் போயிருப்பார். அந்த மேசையை யார் கவனிப்பது என அடிபடுவார்கள். யாராவது பொறுப்பானவர் தலையிட்ட பின்னர்தான், "வந்தனி தாறதை சாப்பிட்டு போ" என வேண்டாவெறுப்பாக உபசரிப்பார்கள். ஆனால் கொழும்பில் நேர்மாறு. பெரிய, இடைநிலை உணவகங்களில் எல்லாம் வாடிக்கையாளர்களை பக்காவாக வரவேற்று உபசரிக்கிறார்கள்.


# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்





கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்




**ஆண் (வயது 57)**
**வட்டுக்கோட்டை**

***கேள்வி:*** ***நான் ஒரு சிறிய கைத்தொழில் நிலையம் நடத்துகிறேன். இந்த வருட ஆரம்பத்தில் தெரிந்தவர் மூலம் 20 வயது பிள்ளையொருவர் வேலைக்கு வந்தார். இவர் வன்னியிலிருந்துவந்துதகப்பனுடன் எங்கள் ஊருக்கு பக்கத்தில் தங்கியிருந்த பெண். அவர்களின் குடும்பத்தில் வேறு யாரும் இல்லையாம். ஏப்ரல் மாதமளவில் அந்த பெண்ணிடம் எனக்கு ஈர்ப்பு வந்தது. ஆனால் அந்த பெண் எனது ஆசைக்கு இணங்கவில்லை. சம்பள காசை கொடுக்காமல் வைத்துத்தான் எனது ஆசைக்கு இணங்க வைத்தேன். சிலமுறை உடல்லீறிதியான தொடர்பு வைத்தேன். ஒரு வாரத்தில் அந்த பெண் வேலைக்கு வராமல் நின்றுவிட்டார். வீட்டுக்கு தேடிப்போக அவர்கள் வன்னிக்கு போய்விட்டார்கள் என பக்கத்திலிருந்தவர்கள் சொன்னார்கள். ஆரம்பத்தில் இதை சாதாரணமாக விட்டுவிட்டேன். இப்போது என் உள்மனது கடுமையாக உறுத்துகிறது. நான் ஒரு சிறுபிள்ளையின் வாழ்வில் மண்ணள்ளி போட்டுவிட்டேனே? என உறுத்தலாக இருக்கிறது. அந்த பிள்ளையை தேடிச்சென்று மன்னிப்பு கேட்கலாம் என்றும் தோன்றுகின்றது. என்ன செய்வதென்றே தெரியாமல் இருக்கின்றது.***

***பதில்:*** *அன்புச் சகோதரரே! உங்கள் மடலை வாசிக்கும்போது எனக்கு ஒரு விடயம் தெளிவாகப்புரிகிறது. வாழ்க்கை என்பது கத்தியில் நடப்பது போன்றது. கொஞ்சம் கவனயீனமாக இருந்தாலும் காலை அறுத்துவிடும். அதேபோல வாழ்க்கையின் ஒவ்வொரு விடயத்திலும் கொஞ்சம் நிதானம் தவறின் இந்த மாதிரியான சிக்கல்கள் வரும். நடந்த நிகழ்வில்இரண்டுவகையான விடயங்களை காணக்கூடியதாக உள்ளது. ஒன்று ஆண், பெண் கவர்ச்சி என்பதும் அதன் வழியாக ஏற்படக்கூடிய தொடர்புகளும் இயற்கையானது என்பதுடன் இது அவரவரின் ஆளுமைப் பண்புகள், அனுபவவாயிலான மன முதிர்ச்சித்தன்மை போன்றவற்றில் தங்கியுள்ளது. இதேவேளை இந்தத்தொடர்பு ஏற்படுத்தப்பட்ட விதமானது இயற்கைக்கும்இ தர்மத்துக்கும் முரணானதாகக் காணப்படுகின்றது. உண்மையில் இந்தவிடயம் சட்டத்தின் கைக்குப் போனால் தண்டனைக்குரிய குற்றமாகக்கூட கொள்ளப்படலாம்.*

*அன்று தொட்டு இன்றுவரை பல பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் இவ்வகையான பாலியல் லீறிதியிலான துன்புறுத்தல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் பற்றி பொதுவாக வெளியே தெரிந்து விடாமல் பாதுகாத்து வருகின்றார்கள். ஏனெனில் "முள்ளில் சேலை விழுந்தாலும் சேலை மேல் முள் விழுந்தாலும் பாதிப்பு என்னவோ சேலைக்குதான்" எனும் முதமொழியின் அடிப்படையில் மறைத்தும், மறந்தும் விடுகின்றார்கள். நான் நினைக்கிறேன் உங்களின் விடயத்திலும் இதுதான் நடந்துள்ளது போல் தெரிகின்றது. இது விடயத்தில் உங்களால் செய்யக்கூடியது "பாவமன்னிப்பு" கேட்பது தான. நடந்தது நடந்ததாகவே போகட்டும்.*

*உடற்புண்ணை கொஞ்சம் காற்றுப்பட காயவிட்டால் ஆறுவதுபோல, மனப்புண் ஆற கொஞ்சம் கால அவகாசம் தேவை. எனவே காலவோட்டத்தில் அப்பெண்ணின் மனது கொஞ்சம் ஆறியபின் நீங்கள் விட்ட தவறிற்காக வருந்துவதை தெரியப்படுத்தலாம். முடியுமாயின் விட்ட தவறிற்கான பிரதியுபகாரமாக ஏதாவது செய்யமுடியுமாயின் செய்யலாம். குறிப்பாக அவளின் திருமணம் போன்ற ஏதாவது ஒரு தேவையின்போது அப்பெண்ணின் முன்னைய முதலாளி எனும் [illegible] நிதி அன்பளிப்பு செய்துவிடலாம். ஆனால் உண்மையான மனமாற்றம் இல்லாமல் இவ்வகையான செயல்களை செய்வது மேலும் சிக்கலினுள் சிக்குவதாகக்கூட அமையலாம்.*

*எனவே நீங்கள் தெய்வத்தை நோக்கிய திசையில் உங்கள் மனதை திருப்பியிருப்பதே மகிழ்வான விடயம். தேடிச்சென்று மன்னிப்பு கேட்கப்போய் பிரச்சினையை பெரிதாக்கிவிட வேண்டாம். அப்பெண்ணின் குடும்பநிலையை கண்காணிப்பு செய்துகொள்ளுங்கள்.நான் மேலே கூறியதுபோல தேவையானபோது நீங்கள்தான் செய்தீர்கள் என்று தெரியாமல் முடிந்தளவு உதவியை செய்துவிடுங்கள். எனக்கு திடீரென ஒரு யேசுநாதரின் வேதப்பாடல் வரிகள் ஞாபகம் வருகிறது. "திருந்து மனம்திருந்து பரலோகம் சமீபமே"என்பது. ஆண்டவரின் பரலோக வாழ்விற்கு சமீபமாகவுள்ள உங்களுக்கு எல்லாம் இனிதே நடக்கும். கவலை வேண்டாம். வாழ்க்கையை கவனமாக கடவுங்கள்.*

**பரம்சோதி (வயது 58)**
**கந்தரோடை**

***கேள்வி:*** ***எனக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவர் தவிர மற்ற மூவரும் ஏதோ ஒரு வேலையில் சேர்ந்துவிட்டார்கள். அரச உத்தியோகம்.மூத்தவரிற்கு 33 வயதாகிறது. அவருக்கு யு/டு முடிவும் காணாது. மொபைல் ரிப்பியரிங் படித்தவர். ஆனால் எந்த வேலையையும் அவரால் செய்யமுடியாமல் உள்ளது. உடல் வல்லமை உள்ளது. மூளைக்குறைபாடும் இல்லை. ஆனால் வருமானம் தரும் வேலை எது? என்பதை கண்டறிந்து, வருமானம் தரும்விதத்தில் வேலை செய்யத்தெரியாமல் உள்ளார். இதனால் வீட்டிலும் தொடர்ந்து பிரச்சினை. அவரை எப்படி சரிசெய்யலாம்?***

***பதில் :*** *ஐயா! உங்களின் மனக்கவலை எனக்கு தெளிவாகப் புரிகிறது. ஒரு சரியான தந்தைக்குரிய யதார்த்தமான கவலை. அதிலும் மற்றப்பிள்ளைகள் தொழில் செய்து உழைத்துக்கொண்டிருக்க மூத்தபிள்ளை இப்படியாக மற்றவர்களின் வாய்க்குள் சிக்குப்படுவதனை ஒரு தந்தையால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பது உண்மையே. உங்கள் மகனின் உடலில் எதுவித குறைபாடும் இல்லை. அதேபோல புத்தியிலும் குறைபாடில்லை என்று கூறியுள்ளீர்கள்.*

*அப்படியானால் அவரை மூத்தபிள்ளை என்று நன்றாக செல்லம் கொடுத்து வளர்த்து விட்டீர்களோ? எதிலும் பொறுப்பில்லாமல்இ விட்டேந்தித்தனமாக வளர்க்கப்பட்டுவிட்டாரோ தெரியவில்லை. ஏனெனில் வளரும் காலத்திலேயே, பிள்ளைகளுக்கு குடும்பப் பொறுப்பு, வாழ்க்கைச்சுமை, எதிர்காலவாழ்வு பற்றிய எதிர்பார்ப்பு, அதற்கான திட்டமிடல் போன்றவை சிறிது சிறிதாக ஊட்டப்பட்டிருக்கவேண்டும். அப்படியல்லாமல் பிள்ளையின் தேவைகள் எல்லாவற்றையும் அவர்களுக்கான தேவைகளின்போது நீங்கள் கொடுத்துக்கொண்டே வந்திருப்பீர்களானால் 35 வயதிலும் உழைத்துதர அப்பா இருக்கிறார். உழைத்துத்தர தம்பிமார் இருக்கிறார்கள். எனக்கேன் உழைப்பு பிழைப்பு? என்று திரியும் நிலைதான் வரும். உங்கள் மகனின் மனோநிலை என்னவென்று சரியாக தெரியாமல் உள்ளது. உங்கள் மகன் நிலையாயினும் பரவாயில்லை. யாழ்ப்பாணத்தில் தினமும் குடிப்பதற்கே 500, 1000 ரூபாவென்று கொடுக்கவேண்டிய நிலையில் பல பெற்றோர்கள் இருக்கிறார்கள்.*

*சரிபோகட்டும், உங்கள் மகனின் எதிர்கால இலட்சியம் என்ன? அவரின் பொழுதுபோக்குகள் என்ன? அவரின் எதிர்பார்ப்பு, ஆசைகள் என்ன? இப்படியான சிலபல விடயங்கள்பற்றி தெரியாமல் என்னால் எதுவித நிலைப்பாட்டுக்கும் வரமுடியாது. இருந்தாலும் நான் நினைக்கிறேன், அவரை ஒரு தொழில்வழிகாட்டும் ஆலோசகரிடம் வழிப்படுத்துவது நல்லது. உண்மையில் நல்ல வருமானம் தரும் தொழில்தான் செய்யவேண்டுமென்று நீங்களோ அல்லது உங்கள் மகனோ நினைத்தால் இன்று எமது பிரதேசத்தில் சாதாரணமாக இடம்பெறும் போதைப்பொருள் வியாபாரம் அல்லது வாள்வெட்டு, கொள்ளை போன்றவைதான் செய்யவேண்டும். அப்படியல்லாமல் தனது மனதுக்குப் பிடித்த, மகிழ்ச்சி தரக்கூடியதும் அதே வேளை ஓரளவுக்கேனும் ஒரு சராசரியான வருமானம் தரக்கூடியதானதுமான ஒரு தொழிலை செய்தாலே வாழ்வில் முன்னுக்கு வந்துவிடலாம்.*

*எனக்குப்பிடித்த பேராசிரியர் ஒருவர் அடிக்கடி கூறுவார். "நாம் என்ன வேலை செய்கிறோம் என்பதால் நமக்கு பெருமையும், உயர்வும் கிடைப்பதில்லை. மாறாக நாம் எப்படிச்செய்கிறோம் என்பதிலேதான் எமக்கான மதிப்பும், உயர்வும் கிடைக்கிறது" என்று.வைத்தியராக இருப்பதில் பெருமை இல்லை. எப்படி வைத்தியம் பார்க்கிறார் என்பதில்தான் நோயாளர் வரவு தங்கியிருக்கிறது. இது எல்லாத்தொழிலுக்கும் பொருந்தும்.*

*எனவே உங்கள் மகனை முதலில் தன்னால் செய்யக்கூடிய, தனக்கென விசேட தகைமைகள் உள்ள ஏதாவது ஒரு தொழிலை தெரிவுசெய்ய வழிகாட்டுங்கள்.அந்தத்தொழில் காலத்திற்கும், இடத்திற்கும், எதிர்பார்க்கும் வாடிக்கையாளர் இலக்கினருக்கும் பொருத்தமானதாகத்தான் இருக்க வேண்டும். "ஐயர்" ஏரியாவில் போய் மீன்கடை போட்டால் யார்தான் உதவமுடியும்? அதற்காக மீனவர் சமூகத்திற்குள் போய் மீன்கடையை போட்டால் யார்தான் வாங்குவார்கள்? எனவே ஒரு தொழிலை தொடங்கமுன், அது தொடர்பான சுயவிழிப்புணர்வு மிகஅவசியம். அதுபோல அத்தொழில் தொடர்பாக உள்ள பலங்கள், பலவீனங்கள், சந்தர்ப்பங்கள், இடைஞ்சல்கள் பற்றியெல்லாம் ஓரளவு ஆராய்ந்தபின்பே தொழிலில் 'முதல்' போடமுனையவேண்டும்.*

*எனவே உங்களது மகனுக்கு ஒரு நல்ல தொழில் வழிகாட்டுனரின் உதவியோடு பொருத்தப்பாடான தொழிலை தொடங்க உதவுங்கள். அல்லாவிடின் ஒரு நல்ல மனநல ஆலோசகரை சந்தித்து அவரின் உளாறிதியான மாற்றங்களை ஏற்படுத்தியபின் தொழில்முயற்சியைப்பற்றி சிந்திப்பது நல்லது.*

# ‘ஒரு சமயத்திற்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கும் அரசியலமைப்பினால் எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை வழங்க முடியாது’

**30.10.2017 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற யாப்பு உருவாக்க இடைக்காலக்குழு அறிக்கை மீதான விவாதத்தின் போது, தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரையின் முழுமையான வடிவம்.**

எனக்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிகு சந்தர்ப்பத்தில் உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு சபை தலைவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன். வரலாற்றிலே முதல்முறையாக இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சி, யாப்பு உருவாக்க செயன்முறையிலே முன்மொழிவுகளாக மட்டுமே இருந்தாலும், முன்வைக்கப்பட்ட சில பரிந்துரைகளுடன் இணங்கும் சந்தர்ப்பம் இதுவாகும். நாங்கள் முன்பு வழங்கியிருந்த 1-C என இலக்கமிடப்பட்ட “நிலை அறிக்கையில்”, யாப்பு உருவாக்க செயற்பாட்டின் மீதான எங்கள் கட்சி நிலைப்பாட்டினைத் தெளிவாக முன்வைத்துள்ளோம். அவ் அறிக்கையின் இறுதிக் குறிப்பான குறிப்பு இலக்கம் 9ன்பால் உங்கள் கவனத்தைச் செலுத்தும்படி வேண்டுகின்றேன்.

அக்குறிப்புபின்வருமாறு:

“ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்பாடு ஒன்றினை எட்டும் இலக்குடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள பிரதான கொள்கைகளுடன், ஏனைய இரு பிரதான கட்சிகளும் ஆமோதிக்கும் பட்சத்தில், அது குறித்து ஆராய்ந்து இணக்கம்தெரிவிக்க எத்தனிக்கும்.”

**ஒரு பரந்த அரசியல் சீர்திருத்தம் ஓர் புதிய அரசியல் கலாச்சாரம் ஒழுங்கான விவாதங்களோ கலந்துரையாடல் களோ இன்றி மக்கள் மீதும் நாட்டின் மீதும் திணிக்கப்பட்ட 1978ம்ஆண்டு யாப்பின் மூலம் நாங்கள் 36 வருடங்களாகப் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளோம்.**

நாங்கள் இரு பிரதான கட்சிகள் என்று குறிப்பிட்டது சுட்டிக்காட்டத்தக்க ஒரு விடயம். ஏனெனில், சபை தலைவர் முன்பு குறிப்பிட்டதைப்போல, வரலாற்றிலே தேசியரீதியான தீர்மானங்கள் ஒருபோதும் இரு கட்சிகளின் ஒருமித்த இணக்கத்துடன் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் இல்லை. ஆனால் இன்றோ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத் தருணத்தில் இரு பிரதான கட்சிகளும் இணைந்து நாட்டு மக்களுக்காகப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை உருவாக்குவதற்காகவென தேசிய அரசாங்கமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையில், நாமும் அவர்களுடைய யாப்பு உருவாக்க கொள்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்க முன்வந்துள்ளோம்.

தலைவர் அவர்களே, புதிய யாப்புத் தொடர்பாக பல்வேறு விதமான கருத்துகள் பதியப்பட்டு வருகின்றன. 2015ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, பொது எதிர்கட்சி வேட்பாளர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினை நீங்குவார் என தன் நிலைப்பாட்டினைத் தெளிவாகத் தெரிவித்தார். அவர் தன்னைப் பொது எதிர்க்கட்சி வேட்பாளராக அறிவித்த அத்தினத்தில் வழங்கப்பட்ட முதலாவது வாக்குறுதி அதுவாகும். அவர் மொத்தமாக மூன்று வாக்குறுதிகளை வழங்கினார். அதில் இதுவே முதலாவது. இரண்டாவதாக, தேர்தல் முறைமை பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். இவ்வகையான மாற்றங்கள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும் எனின் மக்களின் ஒப்புதல் ஓர் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பெறப்பட வேண்டும். வாக்குறுதிகளின் அடிப்படையிலான சில மாற்றங்கள் 19வது சீர்திருத்தத்தினூடாகக் கொண்டுவர எத்தனிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் உச்சநீதிமன்றம் சில பரிந்துரைக்கப்பட்ட சீர்ருத்தங்கள் சர்வஜன வாக்கெடுப்பின் பின்னரே அமுலாக்கப்படலாம் எனத் தீர்ப்பளித்தது.

ஒரு உறுப்பினர் எதிராக வாக்களித்த நிலையில், இச்சபையிலே 19வது சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்ட தினத்தில், அப்போதைய நீதி அமைச்சராலும் கௌரவ பிரதம மந்திரி அவர்களாலும் அச் சீர்திருத்தமானது வெறுமனே இடைக்காலத்தீர்வாக மட்டுமே கருதப்பட வேண்டும் எனவும் புதிய பாராளுமன்றம் கூட்டப்பட்டவுடன் புதிய யாப்பு ஒன்று உருவாக்கப்படும் எனவும் பலமுறைகள் உறுதிமொழி வழங்கப்பட்டது. இக்கூற்றுக்களை அன்றைய தினத்திற்கான ஹன்சார்டிலே அப்போதைய நீதி அமைச்சர் கௌரவ டாக்டர் விஜேயதாச ராஜபக்ச அவர்களின் உரையில் பல இடங்களிலும் பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் உரையில் சில இடங்களிலும் காணலாம். இது, மேன்மை தங்கிய ஜனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்களாலும் ஐக்கியதேசியக்கட்சியினாலும் தேர்தலின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்று.

அதுமட்டுமல்லாமல் ஜனவரி 8ம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் திரு. மகிந்த ராஜபக்ச அவர்களும்புதியயாப்பினை அமைப்பதாக வாக்களித்தார்.

அவருடைய தேர்தல் பிரச்சார அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

“ஒரு பரந்த அரசியல் சீர்திருத்தம் ஓர் புதிய அரசியல் கலாச்சாரம் ஒழுங்கான விவாதங்களோ கலந்துரையாடல்களோ இன்றி மக்கள் மீதும் நாட்டின் மீதும் திணிக்கப்பட்ட 1978ம்ஆண்டு யாப்பின் மூலம் நாங்கள் 36 வருடங்களாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளோம். மேலும் இந்த யாப்பானது பல வருடங்களாகப் பல்வேறு சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு சீர்குலைக்கப்பட்டது என்பதையும் ஏகமனதாக ஒப்புக்கொள்ள வேண்டும். இவற்றுள் ஒன்றுக்கொன்று முரணான சீர்திருத்தங்களும் உள்ளடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சீர்திருத்தங்களின் ஊடாக யாப்பினை மேலும் சீர்குலைப்பதற்குப் பதிலாக மக்களின் அபிலாஷைகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் புதிய யாப்பினை 1 வருடகாலத்தினுள் உருவாக்குவேன்”

மேலும் சில புள்ளடியிடப்பட்ட குறிப்புகளும் காணப்படுகின்றன. அவையாவன :

- “முழுப் பாராளுமன்றமும் பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் அரசியலமைப்பு கவுன்சிலாக மாற்றப்பட்டு புதிய யாப்பு உருவாக்கத்திற்காகவென மக்களின் அபிலாஷைகள் கண்டறியப்படும்.”

தலைவர் அவர்களே, இதைத்தான் நீங்கள் இன்று செய்துள்ளீர்கள்.

மேலும்இன்னொருகுறிப்புபின்வருமாறு குறிப்பிடுகின்றது:

- “பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத அரசியல்கட்சிகளினுடைய பிரதிநிதிகள். இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியலமைப்பு நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் தொழில் நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கி குடிமக்களின் ஆலோசனைக் கவுன்சில் ஒன்று உருவாக்கப்பட்டு புதிய யாப்பிற்கான மக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் சேகரிக்கப்படும்”

மூன்றாவதாக:

- “இத்தகைய குழுக்களின் பரிந்துரைகளுக்கு அமைவான யாப்பின் வரைபினை நான் முதலில் பாராளுமன்ற ஒப்புதலுக்காக சமர்ப்பித்துப் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் ஒப்புதலைப் பெறுவேன்”

எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கௌரவ மகிந்த ராஜபக் சஅவர்களின் 2015 தேர்தல் பிரச்சார அறிக்கையின், குறிப்பிட்ட இப்பக்கத்தை நான் சபையில் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.



ஆகவே இந்நாட்டு மக்களின் ஆணை வரவேற்கத்தக்கது. 2015ம் ஆண்டுஜனவரி 15ம் திகதி வாக்களித்த மக்கள் சதவீதத்தில் 97% ஆனோர் இச்சபையினை அரசியலமைப்பு பேரவையாக மாற்றி நாட்டிற்குப் புதிய யாப்பினை உருவாக்குவதற்காகவே வாக்களித்துள்ளனர். அவர் “சபாவ”என சிங்கள மொழியில் குறிப்பிட்டிருந்தார். ஆங்கிலத்தில் “கவுன்சில்” என்ற பதம் அதற்கு சமானமானதே. இவ்வளவு பெரிய ஆணை வரலாற்றில் முன்பு எப்போதும் கிடைத்ததில்லை. இப்போது வீதிகளில் இறங்கிப் போராடும் சில மனிதர்கள் 97% மான மக்களின் ஆணையை புறக்கணிக்குமாறு கோஷமிடுகின்றனர். உலகில் வேறு எங்காவது 97% மான மக்கள் தம்முடைய பிரதிநிதிகளிடம் புதிய யாப்பு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஒன்றினை உருவாக்க ஆணை வழங்கிய சந்தர்ப்பம் உண்டா?

அவ் ஆணையின் காரணத்தால்தான் அரசியலமைப்புச்சபையினை உருவாக்குவதற்கான தீர்மானம் மன்றிலே 2016ம் ஆண்டு ஜனவரி 9ம்திகதி சமர்பிக்கப் பட்டது. இது நான்கு சந்தர்ப்பங்களில் விவாதிக்கப்பட்டது: ஜனவரி 9ம் திகதி 2016, பெப்ரவரி மாதத்தில் இரு தினங்கள் மற்றும் இறுதியாக மார்ச் 9ம் திகதி 2016. மார்ச் 9ம் திகதி 2016 அன்று அத்தீர்மானம் மன்றினால் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதுவரை சிறந்த சட்டப் பேராசிரியராக இருந்து வந்த, இன்று புதிய அரசியல் கட்சி ஒன்றிற்கு தலைவராக இருக்கும் ஒருவர் அவ்வேளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது "புதிய யாப்பினை உருவாக்க முனைதல் சட்டவிரோதமானது" என்று குறிப்பிட்டார். எனினும் மார்ச் 9ம் திகதி 2016 இற்குப் பின் எந்தவிதமான கருத்துகளையும் தெரிவிக்கவில்லை. அதற்கான காரணம், அவருடைய புதியகட்சியில் உள்ள சிலர், தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்று எதிர்ப்புகள் எதையும் தெரிவிக்காமையேயாகும். அந்தத் தீர்மானம் தற்போதய யாப்பின் 74ம்மற்றும்75ம் உறுப்புரைகளுக்கு அமைவாகவே நிறைவேற்றப்பட்டது. கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களும் தேர்தல் பிரச்சாரத்தின்போது தற்போதய யாப்பிற்கு அமைவாக புதிய அரசியலமைப்பினை உருவாக்கி மன்றில் சமர்ப்பிப்பேன் எனக் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், யாப்பு உருவாக்கத்தின் செயன்முறை விளக்கமாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. 21 அங்கத்தவர்களைக் கொண்ட வழிகாட்டல்குழு, நிபுணர் குழு, 6 உபகுழுக்கள், இப்போது சமர்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை அதேபோல இறுதிஅறிக்கை ஒன்றுடன் யாப்பு வரைபுச்சட்ட மூலம் ஒன்று பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.யாப்பு வரைபுச் சட்டமூலமானது எம்முடைய தற்போதய அரசியலமைப்பிற்கு அமைவாக முக்கிய வரைவிலக்கணத்தைக் கொண்டது. அந்தவகையில் தற்போதய யாப்பிற்குப் பதிலாக புதியயாப்பினை ஏற்றுக்கொள்வதற்காகவே அச்சட்டமூலம் கொண்டுவரப்படும்.

எமது யாப்பின்74 (I) ம்உறுப்புரை பின்வருமாறு அமைகின்றது:

"........பாராளுமன்றமானது ஒரு தீர்மானத்தின் மூலம்...... ஏற்பாடு செய்யலாம்

(ii)...ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என அரசியலமைப்பினால் தேவைப்படுத் தப்பட்ட கருமம்."

மேலும் உறுப்புரை 75(b) பின்வருமாறு குறிப்பிடுகின்றது,

"இயற்றப்படுகின்ற சட்டமானது ஏலவேயுள்ள அரசியலமைப்பினை மாற்றீடு செய்கின்ற ஒரு புதிய அரசியலமைப்பை இயற்றினாலொழிய, அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குகின்ற ஏதேனும் சட்டத்தை"

அதாவது பாராளுமன்றத்தால் யாப்பினை முழுமையாக மாற்றும் எந்த சட்டத்தினையும் இயற்ற முடியாது, ஏனெனில் அச்சட்டம் புதிய யாப்பினை உருவாக்கும்.

ஆகவே புதிய யாப்பினை உருவாக்கும் முறை உறுப்புரை 75 மற்றும் 74 (I) (ii) இலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் உறுப்புரைகளின்படி பாராளுமன்றத்தில் இச்செயற்த்திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும்.

மார்ச் 9ம்திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இச்செயன்முறையே விளக்கப்பட்டுள்ளது. ஆகவே மக்களின் ஆணை பெறப்படவில்லை என்றும் இது சட்டவிரோதமானது என்றும் கூறப்படும் கூற்றுக்கள் தற்போதய யாப்பின் உறுப்புரைகளின் பிரகாரம் தோற்றுவிடுகின்றன.

இம்மன்றில் வீற்றிருக்கக்கூடிய அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்க்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட எல்லாப் படிமுறைகளும் கிராமமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. வழிகாட்டல்குழு ஏகமனதாக யாப்புப்பேரவையினால் நியமிக்கப்பட்டது. அனைத்து நிபுணர்களும் அவ்வாறே நியமிக்கப்பட்டனர்.

உபகுழுக்களின் அங்கத்தவர்களும் தலைவர்களும் இம்மன்றினால் ஏகமனதாக நியமிக்கப்பட்டனர். ஒரு உறுப்பினர்கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மேலும் வழிகாட்டல் குழுவில், அனைத்து அரசியல்கட்சிகளினதும் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பங்குபற்றலின் அளவைக் குழுச்சந்திப்புகளின் அறிக்கைகள் ஊடாகப் பெறலாம். நானும் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் என்னிடமும் அவ் அறிக்கைகள் உண்டு. அவைத்தலைவர், வழிகாட்டல் குழுவில் இருந்த எதிர்கட்சி உறுப்பினர் ஒருவரின் பாரிய பங்களிப்பிற்காக



நன்றிசெலுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது. இவ் அறிக்கையில் அக்கட்சியின் ஏனைய உறுப்பினர்களின் பங்களிப் பினையும் காணலாம். இவ் அறிக்கையின் 20% இதற்கும் அதிகமான பங்கு அவர்களின் பங்களிப்பு பற்றியே எழுதப்பட்டிருக்கின்றது.

ஒருமுறை, உபகுழு ஒன்றில் குறிப்பிட்ட அங்கத்தவர்கள் சிலரின் கருத்துகள் நிராகரிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. அது தொடர்பாகக் கடிதம் ஒன்று வழிகாட்டல்குழுவிடம் கையளிக் கப்பட்டது. அதற்கமைவாக ஒக்டோபர் 26ம்திகதி சட்டம் மற்றும் ஒழுங்கிற்கான உபகுழுவின் அங்கத்தவர்களான இருவர், வழிகாட்டல் குழுவால் அழைக் கப்பட்டனர். அன்று இடம்பெற்ற கலந்துரையாடலின் நிமிட அறிக்கை யின்படி உபகுழுவின் தலைவர் ஞாயமாக செயற்பட்டதாகவும் தம்மால் உபகுழுவின் சில அறிக்கைப் பரிந்துரை களுடன் இணங்க முடியவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். இது தொடர்பாக எட்டப்பட்ட முடிவு பின்வருமாறு: (வழிகாட்டல் குழுவின் 33வது சந்திப்பின் நிமிட அறிக்கையில் இருந்து வாசிக்கின்றேன்)

"கௌரவ பிரதம மந்திரி, கௌரவ நாமல் ராஜபக்ச மற்றும் கௌரவ ஷேஹான் சேமசிங்க அவர்களைத் தமது கருத்துக்களை எழுத்துமூலம், வழிகாட்டல்குழுவிற்கு ஒரு வாரத்தினுள் தெரியப்படுத்துமாறு கூறினார்"

ஆகவே அவர்களின் கருத்துக்களைத் தெரியப்படுத்த இன்னொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. எழுத்துமூலம் வழிகாட்டல்குழுவிற்குத் தெரியப் படுத்துமாறு கூறிய போதிலும் அவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவர்கள் குழுவின் முன்னிலையில் வருகைதந்த போதிலும் எழுத்துமூலமான எந்த ஆவணங்களையும் சமர்பிக்கவில்லை.

அவர்களுக்கு ஒருவாரம் கொடுக் கப்பட்டும் அவர்கள் எந்த ஆவணங் களையும் சமர்பிக்கவில்லை. என்னை தற்போது குழப்ப முற்படும் கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்கள் கூட, தன்னுடைய தனிப்பட்ட கருத்தினை வழிகாட்டல்குழுவிடம் ஒப்படைத்திருந்தார். எனினும் சிறிது காலத்தின் பின் அவர் அதனைக் கைவிடுவதாக வழிகாட்டல்குழுவின் மற்றுமொரு அங்கத்தவர் கௌரவ தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார். இவை எல்லாம் குறிப்புகளில் உண்டு.

நான் அங்கத்தவர்களின் பங்களிப்பு மட்டங்களைப் பற்றி மட்டுமே பேசுகின்றேன். நான் இதை இப்போது பொதுமக்களுக்கு அறிவிக்கக் காரணம், சிலருக்கு இச்செயற்திட்டத்தில் பங்குபற்ற வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பது தவறான கருத்து என்பதைத் தெளிவுபடுத்தவேயாகும்.

இப்போது எமது கட்சியின் நிலைப்பாடு குறித்து ஒருசில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன். இலங்கை ஓர் மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்ற எமது நிலைப்பாடானது மிகவும் தெளிவானது. தனது மக்கள் அனைவரையும் சமமாக நோக்கும் எந்த யாப்பும் ஓர் மதச்சார்பற்ற யாப்பாகவே அமைய வேண்டும். நான் பௌத்த மதத்தவன் அல்ல என்ற காரணத்தால் என்னை இரண்டாம் பட்ச குடிமகனாகக் கருத முடியாது. ஒரு சமயத்திற்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கும் அரசியல் அமைப்பினால் எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை வழங்க முடியாது. எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை உறுதிசெய்யாத யாப்பு ஒன்றுதான் எமக்குத் தேவையா என்பதை இந்த சபைதான் தீர்மானிக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் பௌத்தர்கள் அவர்களின் சமயத்திற்கு ஏதேனும் அங்கீகாரம் வழங்க வேண்டும் என எண்ணும்பட்சத்தில் நாம் அதற்கு இடையூறு விளைவிக்க மாட்டோம்.

ஆனால் அது பௌத்தர்களால் எடுக்கப்படக்கூடிய மிகச்சிறந்த தீர்மானம் அல்ல. பௌத்தர்கள் அல்லாத நாங்கள், பௌத்தமதத்திற்கு முன்னுரிமை வழங்கினால் எமக்கு பிரச்சினை ஏதும் இல்லை என்று கூறுகையில், பௌத்தர்களால் தமது மதம் மட்டுமே முதன்மை பெற வேண்டும் என்றும் அனைத்து ஏனைய மதங்களும் இரண்டாம் பட்சம்தான் என்றும் கூற முடியுமா? சமத்துவத்திற்கு மதிப்பளிக்கும் எந்தவொரு பௌத்தனாலும் அதனைக் கூற முடியுமா? இருப்பினும் உங்களுக்கு அதுதான் வேண்டும் என்றால் நாம் எங்களுடைய சம்மதத்தைத் தருகின்றோம்.

இலங்கை சமஷ்டி அரசாக அமைய வேண்டும் என்ற எமது விருப்பம் தெளிவானது. சமஷ்டிமுறை பற்றி சில விடயங்களைப் பகிர விரும்புகின்றேன். இது பற்றிய தவறான எண்ணங்களும்

**பௌத்தர்கள் அல்லாத நாங்கள், பௌத்தமதத்திற்கு முன்னுரிமை வழங்கினால் எமக்கு பிரச்சினை ஏதும் இல்லை என்று கூறுகையில், பௌத்தர்களால் தமது மதம் மட்டுமே முதன்மை பெற வேண்டும் என்றும் அனைத்து ஏனைய மதங்களும் இரண்டாம் பட்சம்தான் என்றும் கூற முடியுமா?**

கருத்துகளும் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றன. பலரும், தமிழ் மக்கள் தமக்கென தனி ஆட்சி வேண்டும் என்பதாலேயே சமஸ்டி முறையினை அமோதிக்கின்றனர் என எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் சமஷ்டிமுறையை முதல்முறையாக 1926ம் ஆண்டு அறிமுகப்படுத்தியவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக அவர்களே. "த சிலோன் மோர்னிங் லீடர்" என்ற பத்திரிகைக்கு அவர் 6 கட்டுரைகள் எழுதினார். அவற்றில் இலங்கை கூட்டாட்சி அரசாக அமைய வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். அத்தனை கட்டுரைகளையும் இச்சபையில் சமர்பிக்கின்றேன்.

அது மட்டும் அல்ல, 1944 ஆம் ஆண்டுகளில் இடதுசாரியினரும் அக்கருத்தினை ஆதரித்தனர். அதற்கும் முன்னர் கம்யூனிசக் கட்சி, இந்நாடு கூட்டாட்சி முறையினைப் பின்பற்ற வேண்டும் எனப் பிரேரணை சமர்ப்பித்தது. இது அக்கட்சியினுடைய 1944 இல் வெளியிடப்பட்ட "த பீட்டர் கெனமன் வைத்தியலிங்கம் அறிக்கை" மூலம் புலனாகின்றது. அவ் அறிக்கையை சபையில் சமர்பிக்கின்றேன். (தொடரும்)




# டொக்ரர் அன்ரிக்காக கரிகாலனை மன்னித்த பிரபாகரன்..
## மனமுடைந்த விதுஷா

பீஷ்மர்

கடந்த சில வாரங்களாக விடுதலைப் புலிகளின் கடல் நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட்டிருந்தேன். கடந்த வாரத்தில் அனுராதபுர வான்படை தளம் மீதான ஒப்ரேஷன் எல்லாளன் பற்றி குறிப்பிட்டிருந்தேன். இந்த பகுதியின் ஆரம்பத்தில் நான்காம் கட்ட யுத்தத்தின் ஆரம்பகால கட்டங்கள், மன்னாரில் இருந்து இராணுவம் எப்படி நகர்வை ஆரம்பித்தது, புலிகளின் எதிர்தாக்குதல்கள் பற்றியெல்லாம் விரிவாக குறிப்பிட்டிருந்தேன்.

அடுத்த சில வாரங்கள் வன்னியில் நடந்த தரை யுத்தம் பற்றி குறிப்பிடவுள்ளேன். விடுதலைப்புலிகள் எப்படி இராணுவத்தின் முற்றுகைக்குள் சிக்கினார்கள், அப்போது என்ன நடந்தது என்பது பற்றி அடுத்த வாரங்களில் அறிந்து கொள்ளலாம்.

இந்த தொடரின் ஆரம்பத்தில் வந்த பகுதிகளை படிக்காத வாசகர்களிற்காக மிகச்சுருக்கமாக 2006 இல் மன்னார் முனையில் எப்படி யுத்தம் ஆரம்பித்தது, புலிகளின் பின்னடைவிற்கு காரணம் என்னவென்பதை குறிப்பிட்டு விடுகிறேன்.

மன்னாரில் இராணுவம் தாக்குதலை ஆரம்பித்த சமயத்தில் மன்னார் களமுனைக்கு பொறுப்பாக இருந்தவர் ஜெயம். தள்ளாடியில் இருந்து படை நடவடிக்கையை 58வது டிவிசன் ஆரம்பித்தது. வவுனியாவில் இருந்து 57வது டிவிசன் நகர்ந்தது. மண்கிண்டி மலையிலிருந்து 59வது டிவிசன் நகர்ந்தது.

இதில் தள்ளாடியிலிருந்து நகர்ந்த 58வது டிவிசனின் நகர்வை பற்றித்தான் குறிப்பிட வேண்டும். மன்னாரில் கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் சில கிலோமீற்றர் தூரத்தை கடக்க போரிட்டார்கள். விடுதலைப்புலிகளின் எதிர்தாக்குதல் பலமாக இருந்தது என்பதைவிட, இடத்தை கைப்பற்றும் நோக்கம் இராணுவத்திற்கு இருக்கவில்லை. தொடர்ந்து சண்டை பிடித்து விடுதலைப்புலிகளின் ஆளணியை சேதமாக்குவதே இராணுவத்தின் நோக்கம். மன்னார் களமுனையில் 2006 இல் அதிகம் இழப்பை சந்தித்த படையணி மாலதி படையணி. 2006 இல் மட்டும் மன்னார் களமுனையில் 320 மாலதி படையணி போராளிகள் மரணமானார்கள்.

புலிகளின் சில திட்டமிடல் குறைபாடுகளால் பாரிய மண் அணைகள் அமைக்கப்பட்டும் இராணுவத்தின் நகர்வை தடுக்க முடியவில்லை. முழங்காவிலிருந்து அண்மையாக ஜெயபுரம், நாச்சிக்குடா பகுதிகளை அண்டி பாரிய மண் அணை அமைக்கப்பட்டது. அதை கடந்து இராணுவத்தால் முன்னேற முடியாமல் இருந்தது. அந்த அணை முழுமையாக அமைக்கப்பட்டு முடியவில்லை. நாச்சிக்குடாவிற்கு அண்மையாக மண் அணை அமைக்கப்படாத பகுதிக்குள்ளால் இராணுவம் நகர்ந்தது. ஆரம்பத்தின் மன்னார் களமுனை தளபதியாக ஜெயம் இருந்தார். இராணுவத்தின் நகர்வை அவரால் தடுக்க முடியவில்லையென்றதும், பானுவிடம் அந்த பொறுப்பு வழங்கப்பட்டது.

கடந்த அத்தியாயங்களில் சொல்லப்பட்ட இந்த தகவல்களை மீள நினைவூட்டிக்கொண்டு, தொடரின் புதிய பகுதிக்கு அழைத்து செல்கிறேன்.

பானு வன்னி களமுனையை பொறுப்பேற்கமுன்னர், நடந்தசிலசம்பவங்களையும் குறிப்பிட வேண்டும்.

கருணாவின் பிரிவின் பின்னர், கேணல் ரமேஷ் கிழக்கு பிராந்திய தளபதியாக புலிகளால் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த சமயத்தில் திருகோணமலையில் சொர்ணம், மட்டக்களப்பில் பானு ஆகியோர் இருந்தனர். இவர்களிற்கு எல்லாம் கட்டளையிடுபவராக ரமேஷ் ஏன் நியமிக்கப்பட்டார்?

இந்த இடத்தில்தான் பிரபாகரனின் ஸ்டைல் ஒன்றை சொல்ல வேண்டும்.

கருணாவின் பிரிவின் பின்னர் கிழக்கு தளபதியாக நியமிக்கப்பட்ட ரமேஷ் மீது கொண்ட நம்பிக்கையால் அந்த நியமனம் வழங்கப்படவில்லையென்பதே உண்மை.


கருணா பிரிந்து செல்ல முடிவெடுத்த போது, அதற்கு ஆதரவாக இருந்தவர்களில் ரமேசும் ஒருவர். கருணாவின் பிரிவு ஆரம்பத்தில் தனிப்பட்ட காரணங்களினால் நிகழ்வதாகவே இருந்தது. நிதி விவகாரங்களில் ஏற்பட்ட குழப்பங்களை தீர்க்குமாறு புலிகள் கேட்க, கரடியனாறில் பலத்த பாதுகாப்புடன் கருணா தனி நிர்வாகத்தை ஆரம்பித்தார். இந்த சமயத்தில் கருணாவின் பிரிவிற்கு கோட்பாட்டு விளக்கங்கள் கொடுக்க உதவியவர் பத்திரிகையாளர் தராகி சிவராம். கருணாவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, கருணா அணியின் தத்துவாசிரியராக மாறும் ஆசை அவரிற்கு ஏற்பட்டுவிட்டது. பின்னர் புலிகள் "சொல்வது மாதிரி சொல்லி"த்தான் அவரை அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

மட்டக்களப்பு அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த கௌசல்யன் தவிர்ந்த உயர்மட்ட உறுப்பினர்கள் அனைவருமே கருணாவின் பிரிவை ஆதரித்தார்கள். இதில் இருவர் முக்கியமானவர்கள். கருணாவிற்கு அடுத்த நிலையில் இருந்த ரமேஷ், கிழக்கு அரசியல்துறை பொறுப்பாக இருந்த கரிகாலன் ஆகியோரே அவர்கள். ஜீவாத்தன், ஜிம்கெலி தாத்தா, ஜெயம், றொபர்ட், விசு போன்ற தாக்குதலணி தளபதிகள் எல்லோரும் கருணாவின் கிளர்ச்சியை ஆதரித்தனர். இந்த சமயத்தில் பிள்ளையான், கருணாவின் மெய்ப்பாதுகாவலர். அவர் முக்கியஸ்தர் பட்டியலிலேயே இருக்கவில்லை. முக்கியஸ்தர்களையெல்லாம் புலிகள் கட, கீழ் வரிசையில் இருந்த பிள்ளையான் முக்கியஸ்தரானார்.

கருணா பிரிவதாக அறிவித்த சமயத்தில், அந்த முடிவை ரமேஷ், கரிகாலன் போன்றவர்கள் ஆதரித்தனர். கருணா பிரிந்ததும், அங்கிருந்த முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரையும் தொலைத்தொடர்பு கருவிகளில் தொடர்புகொண்டு புலிகள் பேசினார்கள். வன்னியிலிருந்து முக்கிய தளபதிகள், நாகர்கோவில் முன்னரணை பொறுப்பேற்றிருந்த ஜெனார்த்தனன், வன்னியிலிருந்த கிழக்கின் முக்கிய போராளிகள் இந்த பொறுப்பை ஏற்றிருந்தனர். கருணாவுடன் பிரிந்து சென்றவர்களை மீளவும் தம்முடன் இணையும்படியும், அவர்களிற்கு எந்த பிரச்சனையுமில்லையென்றும் புலிகள் வாக்களித்தனர். ரமேசுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பொட்டம்மானே பேசினார்.

2004 மார்ச் 03ம் திகதி புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து செல்வதாக கருணா அறிவித்தார். அன்று இரவு மார்ஷல் (பின்னாளில் புலிகளின் இராணுவப் பேச்சாளராக இருந்தவர் கிழக்கை சேர்ந்தவர்) ரமேஷை தொடர்பு கொண்டு பேசினார். கருணாவுடன்




சென்றால், மன்னிக்கப்பட மாட்டார் என்றும், கருணாவுடன் நடக்கும் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் நிலையில் இருப்பதால் அவர் உங்களையெல்லாம் கைவிட்டு விடலாமென கூறினார். மார்ஷலின் தகவலால் ரமேஷ் ஆடிப்போய் விட்டார். எங்களிடம் சொல்லாமல் அம்மான் புலிகளுடன் டீல் பேசுகிறாரோ, ஒரு வேளை புலிகளுடன் பேசி அவர் நாட்டை விட்டு போனால் தமக்கு சங்குதான் என ரமேஷ் நினைத்தார். ரமேஷிற்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க பொட்டம்மான் தயாராக இருப்பதாகவும் மார்ஷல் சொன்னார். சிறிதுநேரம் யோசித்த ரமேஷ், பொட்டம்மானுடன் பேச விரும்புவதாக சொன்னார்.

சிறிதுநேரத்தில் ரமேஷை தொடர்பு கொண்டு பொட்டம்மான் பேசினார். முழுமையான பாதுகாப்பு உத்தரவாதம் கொடுத்தார். கருணாவைவிட்டு வெளியேறி வருவதாக ரமேஷ் வாக்களித்தார்.

இதற்குள் கிழக்கு அரசியல்துறை பொறுப்பாளர் கரிகாலனை யாரும் கணக்கெடுக்கவில்லை. கரிகாலனின் மனைவிதான் டொக்ரர் அன்ரி (எழில்மதி). பிரபாகரன் குடும்பத்தின் தனிப்பட்ட மருத்துவர். அதனால் எந்த நேரத்திலும், என்ன விடயத்தையும் பிரபாகரனுடன் நேரடியாக பேச அவரால் முடியும். கரிகாலனுடன் பேசி, அவரை வன்னிக்கு வர சம்மதிக்க வைத்த டொக்ரர் அன்ரி, அவருக்கு மன்னிப்பு வாங்கவிரும்பினார். கரிகாலன் செய்த வேலை பிரபாகரனிற்கு

தொடர்ச்சி அடுத்தபக்கம்..

துளியும் பிடிக்காது என்பது அன்றிக்கு தெரியும். அதனால் இந்த விடயத்தை பிரபாகரனுடன் நேரடியாக பேசவில்லை.

கருணாவின் பிளவு சமயத்தில் பிரபாகரனின் மனைவி மதிவதனியும் பிள்ளைகளும் முள்ளியவளையில் குடியிருந்தனர். பிரபாகரன் விசுவமடு முகாமில் தங்கியிருந்தார். விசுவமடு 12ம் கட்டையில் உள்ள பிரபாகரனின் முகாம், யுத்தத்தின் பின்னர் பொதுமக்கள் பார்வைக்காக திறந்து விடப்பட்டிருந்தது. அந்த முகாமில்தான் பிரபாகரன் தங்கியிருந்தார். மதிவதனி, டொக்ரர் அன்ரி, வான்புலி தளபதியாக இருந்த சங்கரின் மனைவி குகா மூவரும் நெருங்கிய நண்பிகள். யுத்தத்தின் இறுதிநாட்களில் மதிவதனியும், குகாவும் ஒன்றாகவே தங்கியிருந்தனர். அது பற்றி பின்னர் குறிப்பிடுகிறேன்.

டொக்ரர் அன்ரி முள்ளியவளைக்கு மதிவதனி வீட்டுக்கு சென்று, நிலைமையை சொன்னார். கரிகாலனை வன்னிக்கு அழைப்பதாகவும், அவருக்கு மன்னிப்பு வழங்குமாறு பிரபாகரனிடம் கேட்குமாறும் அன்ரி கேட்டுக்கொண்டார். அன்ரியையும் அழைத்துக்கொண்டு பிரபாகரனின் விசுவமடு முகாமிற்கு மதிவதனி உடனே புறப்பட்டார். பிரபாகரனையும் அன்ரியையும் நேரில் பேச வைத்தார். அன்ரி கண்ணீருடன் பேச, பிரபாகரன் இறுகிய முகத்துடன் உட்கார்ந்திருந்தார். அன்ரியின் கோரிக்கையை பிரபாகரனால் தட்ட முடியாது. ஆனால் அன்று அவர் அதிகம் பேசவில்லை. இரண்டுநாளில் கரிகாலன் வந்துவிட வேண்டும் என்பதை மட்டும் சொன்னார்.

இப்படித்தான் ரமேஷ், கரிகாலன் வன்னிக்குவந்து சேர்ந்தார்கள். இருவரையும் புலனாய்வுத்துறை உயர்மட்டத்தினர் மேலோட்டமான விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவுசெய்ததுடன் விடயம் முடிந்தது.

இதன்பின் ரமேஷ் கிழக்கு பிராந்திய தளபதியாக நியமிக்கப்பட்டார். உண்மையில் இந்த நியமனம் வெறும் சம்பிரதாய நியமனம். கிழக்கை உண்மையில் வழிநடத்தியது மூவர். திருகோணமலையை சொர்ணம். மட்டக்களப்பை பானு. அம்பாறையை ராம் வழிநடத்தினார்கள்.

கருணா பிரிவு வடக்கு கிழக்கு பிரதேசவாதத்தை தூண்டும் வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. யாழ்ப்பாணத்தவர் களிற்கு எதிரான கடுமையான பிரசாரத்தை கருணா அணி நடத்தியது. பிரதேசவாதத்தை வளரவிடக்கூடாதென புலிகள் நினைத்தனர். யாழ்ப்பாணத்தை சேர்ந்த பானு அல்லது தீபன் போன்றவர்களை கிழக்கு தளபதியாக்கினால், கருணாவின் பிரசாரம் எடுபடாது விடும். கருணாவின் பிரசாரத்திற்காக ரமேஷிற்கு பொறுப்பு வழங்கவும் முடியாது. இந்த சிக்கலை சமாளிக்க புலிகள் கையாண்ட ஐடியாவே ரமேஷை கிழக்கு பிராந்திய தளபதியாக அறிவித்தனர். உண்மையில் ரமேஷிற்கு அப்படியொரு அதிகாரமே கிடையாது. திருகோணமலையை சொர்ணமும், மட்டக்களப்பை பானுவும், அம்பாறையை ராமும் வழிநடத்தினார்கள். இவர்களிற்கு உத்தரவிடும் எந்த அதிகாரமும் ரமேஷிற்கு வழங்கப்படவில்லை.

2004 ஏப்ரல் முதல் வாரத்தில் கிழக்கை கருணா குழுவிடம் இருந்து மீட்கும் நடவடிக்கையை புலிகள் ஆரம்பித்தபோது, ரமேசும் நடவடிக்கை குழுவில் இருந்தார். கருணா அணியிலிருந்த முக்கியஸ்தர்களை தொடர்பு கொண்டு பேசி, அவர்களை விடுதலைப்புலிகளின் பக்கம் இழுக்கும் வேலையை ரமேஷ் செய்தார்.

கருணா குழுவின் முதுகெலும்பாக இருந்தவர்கள் ஜிம்கெலி தாத்தா, ரொபர்ட், விசு போன்றவர்கள். ஜிம்கெலி தாத்தா, ரொபர்ட் இருவரும் வன்னியில் ஜெயசிக்குறு தாக்குதல் முறியடிப்பில் பெரும் பங்காற்றிய தளபதிகள். இவர்கள் தாக்குதல் தளபதிகளே தவிர, அரசியல் அனுபவமற்றவர்கள். கருணா வில் விசுவாசமிக்கவர்கள். கருணா பிரிவதாக அறிவித்தபோது, அவருடன் சென்றுவிட்டார்கள். பின்னர், ரமேஷ் அவர்களுடன் பேசினார். இந்த பிளவினால் போராட்டத்திற்கு நேரும் ஆபத்தை புரியவைத்து, அவர்களை மீள தம்முடன் இணையுமாறு கேட்டார். புலிகளுடன் இணைய அவர்களிற்கு முழு விருப்பம் இருந்தாலும், புலிகள் என்ன செய்வார்கள் என்ற அச்சம் அவர்களிடம் இருந்தது.

ஜிம்கெலி, ரொபர்ட், விசு உள்ளிட்ட பன்னிரண்டு கிழக்கின் தளபதிகளிற்கு ரமேஷ் பாதுகாப்பு உத்தரவாதம் கொடுத் தார். அவர்களிற்கு எந்த ஆபத்தும் நிகழாதென வாக்களித்தார். இந்த வாக்குறுதியை நம்பிய தளபதிகள் புலிகளிடம் சரணடைந்தனர். அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர், மட்டக்களப்பிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். கருணாவின் மகளிர் பிரிவிற்கு பொறுப்பாக இருந்த சாளி/ நிலாவினி உள்ளிட்ட நான்கு பெண் போராளிகளும் சரணடைந்திருந்தனர். அவர்கள் முல்லைத்தீவின் வள்ளிபுனத்தில் இருந்த அல்பா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்து, பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கருணா பிளவின் பின்னர் பானு மட்டக்களப்பின் தளபதியாக செயற்பட் டார். கிழக்கில் மாவிலாற்றில் தொடங்கிய யுத்தம், படிப்படியாக மட்டக்களப்பு அம்பாறைக்கும் பரவியது. கஞ்சிகுடிச்சாறு, வாகரை என புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளை கைப்பற்றிய இராணுவம் இறுதியில் குடும்பிமலையை (தொப்பிகல) கைப்பற்றியது. 11.07.2007 தொப்பிகலவை முழுமையாக கைப்பற்றியதாக அரசு அறிவித்தது.

தொப்பிகலவில் கிழக்கு படையணி களுடன் நிலைகொண்டிருந்த பானு, அடர்ந்த காட்டின் வழியாக பன்னிரண்டு நாள் நடைபயணத்தில் வன்னியை வந்து சேர்ந்தார். அந்த அணி காட்டிற்குள் இருக்கும் அருவி, குட்டைகளில்தான் தாகத்தை தீர்த்து கொண்டது. இது கொலரா தொற்றை அந்த அணிக்கு ஏற்படுத்தியது. காட்டுக்குள் இராணுவத்திற்கு தெரியாமல் நீண்ட நடைபயணத்தை செய்யும் அணிக்கு கொலரா தொற்று ஏற்பட்டால் எப்படியிருக்கும்?

கொலராவால் நடக்க முடியாமலிருந்த வர்களை காவிக்கொண்டு வந்தார்கள். முறையான சாப்பாடு இல்லாதநிலையில் இன்னொருவரை காவுவதும் பெரும் சிரமமான விடயம். மருந்துப்பொருட்கள் இல்லாததால் உயிரிழப்புக்களும் ஏற்பட தொடங்கியது. ஏழு போராளிகள் அடர்ந்த காட்டுக்குள் கொலரா தொற்றில் உயிரிழந்தனர். அவர்களின் உடலை காட்டுக்குள் அடக்கம் செய்துவிட்டு, தொடர்ந்து நகர்ந்து, பெரும் சிரமத்தின் மத்தியிலேயே வன்னியை வந்தடைந்தார்கள்.

வன்னிக்கு வந்ததும், பானுவிற்கு மீண்டும் குட்டிசிறி மோட்டார் படையணி பொறுப்பு வழங்கப்பட்டது. சில மாதங்களில் அந்த பொறுப்புடன் மேலதிகமாக, மேற்கு களமுனை பொறுப்பு வழங்கப்பட்டது. அப்பொழுது இராணுவம் மன்னாரிற்குள் நகர்வை செய்துகொண்டிருந்தது. மூத்த தளபதிகள் விதுஷா, துர்க்கா போன்றவர்களும் அந்த களமுனையில்தான் இருந்தார்கள். ஏனெனில், மன்னார் களமுனையில் அதிக மாக பெண் போராளிகளே நின்றார்கள்.

**கருணா குழுவின் முதுகெலும்பாக இருந்தவர்கள் ஜிம்கெலி தாத்தா, ரொபர்ட், விசு போன்றவர்கள். ஜிம்கெலி தாத்தா, ரொபர்ட் இருவரும் வன்னியில் ஜெயசிக்குறு தாக்குதல் முறியடிப்பில் பெரும் பங்காற்றிய தளபதிகள். இவர்கள் தாக்குதல் தளபதிகளே தவிர, அரசியல் அனுபவமற்றவர்கள்.**

மன்னார் களமுனையில் மாலதி படை யணிதான் அதிகமாக இழப்பை சந்தித்தது என்பதை குறிப்பிட்டிருந்தேன். கட்டாயமாக படைக்கு சேர்க்கப்படு பவர்கள் சில வார பயிற்சியுடன் களமுனைக்கு வருவதையும், அதனால் இழப்பை சந்திப்பதையும் விதுர்ஷா விரும்பவில்லை. மன்னார் களமுனையில் பெண்போராளிகளை உயிருடன் பிடித்து செல்லும் புதிய உத்தியை இராணுவம் கையாண்டது. பெண்களின் காவலரண்களை box அடித்து உயிருடன் பிடித்துசெல்ல ஆரம்பித்தார்கள். களத்தில் ஏற்படும் இந்த இழப்புக்கள் விதுர்ஷாவை அதிகம் பாதித்தது. அவர் உற்சாகமிழந்து, யுத்தத்தை வெல்ல முடியுமென்ற நம்பிக்கையுடன் இருக்கவில்லை.



தளபதிகள் விதுஷா, துர்க்கா

(தொடரும்)

12-ம் பக்க தொடர்ச்சி...

தேவைப்படும்போது கடன் வாங்கலாம். வங்கிகளில் கடன் கிடைக்கவில்லை எனில், மைக்ரோ பினான்ஸ் நிறுவனங்களில் கடன் வாங்கலாம். மைக்ரோ பினான்ஸ் நிறுவனங்களும் கிட்டத்தட்ட கோட் சூட் போட்ட கந்துவட்டிக்காரர்கள் ஆகுவதாக குற்றச்சாட்டுக்கள் வந்தாலும், கந்துவட்டிக்காரர்களை விட இந்த வட்டி பரவாயில்லை எனலாம்.

### வர்த்தகர்களுக்கான தீர்வுகள்

வர்த்தகர்கள் ரொக்கெட் வட்டி, நிமிட வட்டி, மீற்றர்வட்டி மாதிரியான கடன்களை வாங்குவதைவிட, வங்கியில் பேர்சனல் லோன், ஓவர் டிராப்ட் கடன் போன்றவற்றை வாங்கலாம். வங்கி விஷயத்தில் நீங்கள் நேர்மையாக நடந்து, ஆண்டுதோறும் வரிக் கணக்கைச் சரியாகத் தாக்கல் செய்யும்பட்சத்தில், உங்களுக்கு வங்கியானது கடன் தரத் தயங்காது. இதற்கு வட்டி 14% 22% மட்டுமே. ஒவ்வொரு மாதமும் அசலும், வட்டியும் சேர்த்துக் கட்டி 35 வருடங்களில் கடனை முடிக்கலாம்.

மாத வட்டிக்குத் தனிநபர்களிடம் கடன் வாங்கியவர்கள் தங்களிடம் தங்க நகை இருந்தால், அதை வங்கியில் அடமானம் வைத்துக் கடன் பெற்று, கடனை அடைக்கலாம்.

### முதலீடுதான் நீண்ட காலத் தீர்வு

ஏதோவொரு அவசரத் தேவைக்காக அதிக வட்டி என்றாலும் குறுகிய காலத்துக்குள் திரும்பக் கட்டிவிட முடியும் எனில், கடன் வாங்குவதில் தவறில்லை. வங்கிகளில் குறைந்த வட்டியில் வீட்டுக் கடன் வாங்குவதில் தவறே இல்லை. மிக மிக அதிக வட்டியில் கந்துவட்டிக்காரர்களிடம் கடன் வாங்குவதுதான் தவறு. இந்தக் கடன் மற்றும் வட்டியிலிருந்து தப்பிக்க ஒரே வழி, முதலீடு செய்வதுதான். மாதமொன்றுக்கு 100 ரூபாய்கூட சேமிக்கலாம். இதற்கு வருடத்துக்கு 3% முதல் 6% வரை வட்டி கிடைக்கும். நமக்கு எப்போது பணம் தேவையோ, அப்போது எடுத்துக்கொள்ளலாம்.

### கடனிலிருந்து விடுதலை

ஓரளவுக்கு வருமானம் பெறுகிறவர்கள் மாதமொன்றுக்கு ரூ.1,000 அல்லது ரூ.2,000 என வங்கிகளிலோ அல்லது காப்புறுதி கடன் சார்ந்த திட்டங்களிலோ முதலீடு செய்யலாம். இப்படிச் செய்வதன் மூலம் குறைந்தது 7% வருமானம் கிடைக்கும். ஐந்து ஆண்டுகளுக்கு மேல் முதலீடு செய்ய முடியுமெனில், பங்குச் சந்தை சார்ந்த திட்டங்களில் முதலீடு செய்யலாம்.

இதற்கு 12 சதவிகிதத்துக்கு மேல் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. இப்படி முதலீடு செய்திருக்கும் பணத்தை எதிர்காலத்தில் தேவைப்படும்போது எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் கடன் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை. வட்டி கட்ட வேண்டிய தொல்லையும் இல்லை. நாள் வட்டியில் கடன் வாங்கிவிட்டு, தினமும் ரூ.100 கொடுக்க முடிகிறபட்சத்தில், தினமும் ரூ.100 ஏன் உங்களால் சேமிக்க முடியாது? பணம் எப்போதுமே கடன் வாங்குபவர்களுக்கு மிக எதிராகவும், முதலீடு செய்யும்போது உற்ற நண்பனாகவும் இருக்கும். பணத்தின் இந்தத் தாரக மந்திரத்தை மறக்காதீர்கள், ஒருபோதும் கடன் தொல்லையில் மாட்ட மாட்டீர்கள்.

தமிழகத்திலிருந்து நீண்டகாலத்தின் முன்னர் இலங்கைக்கு வந்த செட்டியார்களின் பிரதான தொழில் வட்டிக்கு பணம் கொடுப்பது. இவர்களின் வட்டி இராச்சியத்தை நிறுத்தவே, வட்டி தொடர்பான சட்டம் அறிமுகமானது. இலங்கையர் அல்லாத யாரும் இலங்கையில் வட்டிக்கு பணம் கொடுக்க முடியாது. இலங்கையர்கள் வட்டிக்கு பணம் கொடுப்பதில் சட்டரீதியான தடை இல்லை. ஆனால், அதை தொழிலாக செய்ய முடியாது. வட்டியாக கொடுக்கும் பணத்தின் பெறுமதியைவிட அதிக வட்டி அறிவிட முடியாது. கந்துவட்டி தொடர்பான இறுக்கமான சட்ட ஏற்பாடுகள் மூலமே, இதன் பாதிப்புக்களை சரி செய்யலாம்.



வேள்வி விவாதம்

# கொல்லும் இடத்திலா மனிதாபிமானம் இருக்கிறது?


சியா

ஆலயங்களில் மிருகங்கள் பலியிடப்படுவதற்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றம் விதித்துள்ள தடையை தொடர்ந்து, பலியிடல் தொடர்பான பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

பலியிடல் சரியா தவறா?, மத நம்பிக்கையின் பெயரில் நடப்பவற்றை ஆதரிக்க வேண்டுமா வேண்டாமா?, பலியிடலை தடுப்பது சிறுதெய் வழிபாட்டின் மீதான தாக்குதலா? இவை எது பற்றியும் நான் பேசவில்லை. பலியிடல், பலியடலை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் பற்றிய பொதுவான சில கேள்விகளை எழுப்பவுள்ளேன். உண்மையை சொன்னால், பலியிடலை இந்த நோக்கிலிருந்து அணுகுவதே சிறந்ததென நினைக்கிறேன்.

பலியிடலை மதத்தின், நம்பிக்கையின், கால்நடைகளின் எதிர்காலத்தின் பெயரால் ஒரு பகுதியினர் ஆதரிக்கிறார்கள். மனிதநேயத்தின், ஆகமவிதிகளின் பெயரால் ஒரு பகுதியினர் எதிர்க்கிறார்கள். இந்த மேலோட்டமான மனித உணர்வுகளிற்கு அப்பால், ஆழமான மிருகநேயப்பார்வையும் உண்டு.

பலியிடலுக்கு எதிரான பெரும்பாலான எதிர்ப்பு மிருகநேயத்தின் அடிப்படையில் எழுந்ததல்ல. அது மத வழிபாட்டிடத்தின் புனிதத்தின் பெயரால்தான் நிகழ்கிறது. உண்மையில் பலியிடலுக்கு எதிரான உணர்வு முதலில் மிருகநேயத்தின் அடிப்படையில்தான் எழுந்திருக்க வேண்டும். தமிழ் சமூகத்தில் அந்த



பார்வை இல்லை. ஆலயத்தின் புனிதத்தின் பெயரால் மேலோட்டமான மிருகநேயமே பேசப்படுகிறது. இந்த so call மிருகநேய பேச்சால் எதுவுமே ஆகப்போவதில்லை.

சில காலத்தின் முன்னர் யாழில் ஒரு காளை காட்சிப்படுத்தப்பட்டு, இறைச்சியாக்கப்படவிருந்த நிலையில் சில அமைப்புக்கள் தலையிட்டு காளையை காப்பாற்றியிருந்தனர். அந்தகாளை கோயிலொன்றில் பராமரிக்கப்பட்டது. ஒரு காளை காப்பாற்றப்பட்டதென்ற அளவில் மகிழ்ச்சியடையலாம். ஆனால்நமது சூழலில் என்ன நடக்கிறது? தினமும் எத்தனை பசுக்கள் இறைச்சியாக்கப்படுகின்றன?

சட்டவிரோதமாகவும், சட்டத்தின் ஓட்டைகளை பயன்படுத்தியும் தினமும் பசுக்கள் கொல்லப்படுகின்றன. பசுவதை தடை செய்ய வெண்டுமென்ற இந்துத்துவா பிரசாரங்களை நான் செய்யவில்லை. ஒரு காளையை காப்பாற்றியவர்களால், தாம் வணங்கும் பசுக்களை காப்பாற்ற சிந்தனை மாற்றமொன்றை உருவாக்க முடியவில்லை. அதற்காக செயற்பட முடியவில்லை என்பதை குறிப்பிடுவதே இதன் நோக்கம்.

இந்தவகையான மனிதநேயம், மனிதர்கள் கண்ணைமூடிக்கொண்டு சுயதிருப்தியடைய முடியுமே தவிர, விலங்குகளின் உரிமைகளை பாதுகாக்க உதவாது. ஆங்காங்கே தலையிட்டு, சில கால்நடைகளை இறைச்சியாக்கப் படுவதிலிருந்து காப்பாற்றப்படுவதல்ல மனிதாபிமானம். கால்நடைகளிற்கும் மனிதர்களிற்குமான இன்றைய ஒரே பிணைப்பு இறைச்சிதான். இறைச்சியாக்கப் படுவதிலிருந்து காப்பாற்றினால், கால்நடைகளை ஏன் மனிதர்கள் வளர்க்கப் போகிறார்கள்?

ஆக, நாம் செய்ய வேண்டியது இறைச்சியாக்கப்படும் கால்நடைகள், சரியாக வளர்க்கப்பட்டு, முறையாக கொல்லப்படுவதை உறுதிசெய்வதே.

உண்மையான மிருகநேயர்கள் தமது பணியை கோயில்களில் இருந்தல்ல மக்டொனால்ட்ஸ், கேஎவ்சி போன்ற பெரு வணிக நிறுவனங்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். உள்ளூர் விவகாரத்திற்கு மக்டொனால்ட்ஸ் பேச்சு எதற்கு என்ற கேள்வியும் வரலாம். சரி விடுவோம். நமது கால்நடை கொல்களன்கள் எந்த நிலையில் உள்ளன?

அதொரு கொலைக்களம்தான். அங்கு கொண்டு செல்லப்படும் கால்நடை, தான் கொல்லப்பட போகிறேன் என்பதை ஏற்கனவே அறிந்து கொண்டு விடுகின்றன. கொல்களனில் இருந்து வெறிகொண்டு தப்பியோடும் காளைகள் பற்றிய கதைகள் ஏராளம் உள்ளன. கசாப்புகடை காரர்களிடம் கேட்டால் சொல்வார்கள். அங்கு வரும் இரத்தவாடை மரணத்தின் வாசனையை கால்நடைகளை நுகரவைக்கின்றன. கொல்லப்படுவதற்கு வெகுநேரத்தின் முன்னரே, கொல்லப்பட போவதை அந்த கால்நடைகள் தெரிந்து விடுகின்றன. இதுவே ஆகப்பெரிய மிருகவதை. மிருகத்தை உடல்ரீதியாக சித்திரவதை செய்வதற்கு நிகரான, அல்லது அதையும் விட குரூரமான வதையிது. இன்னும் சிறிதுநேரத்தில் கொல்லப்பட போகிறேன் என்பதை கால்நடைகளை உணரவைத்து, வதைத்து கொன்று, அந்த இறைச்சியை உண்பதே ஆகப்பெரிய குரூரம். அந்த குற்றவுணர்வு நம்மில் எத்தனை பேரிடம் இருக்கிறது? இந்த குற்றவுணர்வு இல்லாத சமூகத்தால், ஆலய பலியிடலை தடுக்க கோருவது நியாயமா?

கண்ணிற்கு முன்னால் கால்நடைகளிற்கு நடக்கும் கொடுமைகளை பேசும் மேலோட்டமான ஜீவகாருண்ய பார்வைதான் தமிழ் சமூகத்திடம் உள்ளது. இது கால்நடைகளின் பாதுகாப்பான வாழ்வை உறுதிப்படுத்தாது.

இருபது வருடங்களின் முன் ஐரோப்பாவில் கால்நடை கொலை பற்றிய தீவிர உரையாடல்கள் நிகழ்ந்தன. முடிவாக இன்று ஐரோப்பா ஒரு மனச்சமரசத்திற்கு சென்றுவிட்டது. கால்நடைகள் மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்து, வலியற்ற மரணத்தை சந்தித்தன என்ற திருப்தியை இறைச்சி உண்பவர்களிடம் ஏற்படுத்தும் புதிய கலாசாரம் பெருமளவில் உருவாகிவிட்டது.

அதாவது, கால்நடை உயிர்வாழ்ந்த காலத்தில் அதை சரியாக பராமரித்து, கொல்லும் சமயத்திலும் அதன் உயிர்பிரிவது தெரியாமல் நொடியில் உயிரிழக்க வைக்கப்படுகின்றன. இந்த இறைச்சிக்குரிய கால்நடை மகிழ்வான வாழ்வை வாழ்ந்து, வலியின்றி உயிரிழந்தது என்பதை இறைச்சி பொதியிலேயே குறிப்பிடுகிறார்கள்.

ஆனால்நமது கொல்களன்களில்இன்றும் கனமான ஆயுதத்தால் காலநடைகளின் தலையில் அடித்து கொல்லும் மோசமான நடைமுறை நீடிக்கிறது. உண்மையில் நாம் மனிதர்கள் என்றால், தற்போதைய நமது கொல்களன் முறை பற்றிதான் பேச வேண்டும். கால்நடைகளும் உயிரினங்கள், அவற்றின் வாழும் உரிமையைதான் பேண முடியவில்லையென்றால், முறையாக கொல்லப்படும் உரிமையையாவது பேண வேண்டும்.

நாம் இப்பொழுது கால்நடைகளை கொல்லும் இடத்தை பற்றித்தான் விவாதிக்கிறோமே தவிர, கொல்லும் முறையை பற்றி விவாதிக்கவில்லை. கொல்லும் முறையை விவாதிக்காமல் கொல்லும் இடத்தை விவாதிப்பதில், மனிதாபிமானம் எதுவும் இருக்கப்போவதில்லை.

கால்நடைகளை இறைச்சியாக்கும் முறையில் ஏற்படுத்தும் மாற்றமே, வேள்வி தொடர்பான உண்மையான சுயவிமர்சனத்தை ஏற்படுத்தும். நமது சமூகத்தில் மிருகநேயம் பற்றிய உரையாடல்கள் தீவிரம்பெற வேண்டும். துன்னாலையில் கள்ள மண் ஏற்றி வருபவர்கள் சிலர், மாடுகளை உயிரோடு வைத்து இரண்டு தொடைகளையும் வெட்டிக்கொண்டு செல்வது அண்மைக்காலம் வரை நடந்த கொடூரம். மிருகங்களை சித்திரவதை செய்யும் வன்மமனம் நமக்குள் உள்ளது. அதைநாம்இதுவரை கேள்விகேட்கவில்லை. அதைகேட்காதவரை வேள்வி சிந்தனையை மாற்ற முடியாது.




"பிக்பாஸ் வெடியா... புதுசா இருக்கே?"

"வீட்டுக்கு வெளில வெச்சு வெடிச்சாக்கூட வீட்டுக்குள்ளே வந்து வெடிக்குமாம்."




"கட்சி ஆபீஸ் உள்ளே எதுக்கு ஏ.டி.எம் கவுன்ட்டர்?"

"அணி மாறி வர்றவங்க அவசரமா பணம் கேட்கிறாங்களே!"



"தலைவர் ரொம்ப சுலபமா ஊழலை ஒழிச்சுட்டாரா எப்படி?"

"ஊழல் இருக்குன்னு ட்வீட் பண்ணதை டெலிட் பண்ணிட்டார்!"

# நரி செய்தது சரியா?

ஜி.ராமமூர்த்தி













## புதிரோடு விளையாடு!









## மாணவர் பூங்கா




**முறைமையான சாரத்தியத்தை கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள் சாரத்திய அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்**

- ✓ தேசிய அடையாள அட்டை
- ✓ மருத்துவச்சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
- ✓ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதிபெண்களுக்கு மட்டும்)
- ✓ சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)

**வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)**

- ✓ விண்ணப்பதாரி, கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- ✓ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- ✓ எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- ✓ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- ✓ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

## தலைமைக் காரியாலயம்

இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE 0777226247
☎ 0212217678 / 0776140361
sasikadrivingSchool@gmail.com
sasikalearners.com

## கிளை நிறுவனங்கள்

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
☎ 0212215472 / 0703013012

மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
☎ 0212243393 / 0703013014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
☎ 0212251664 / 0703013016

யாழ்ப்பாணம்
இல.281,மணிக்கூட்டுக் கோபுரவீதி,
யாழ்ப்பாணம்.
☎ 0212228004




தங்கத்தமிழன் 360°

மிக குறுகிய காலத்தில் அதிக பார்வையாளர்களுடன்
உங்கள் tamilan360.Com
உலகில் அனைத்து பாகத்திலும் நடைபெறும் நிகழ்வுகளை
உடனுக்குடன் அறிய Tamilan360.com உடன் இணைந்திருங்கள்

**நீங்களும் பாடகராகலாம்**
நடிகை நவயுகா தொகுத்து
Tamilan360.com வழங்கும் 360செல்பி பாடகர் .
மேலதிக தகவலுக்கு tamilan360.com க்கு விரையுங்கள்.



வருகின்ற புதுவருடத்தை முன்னிட்டு 5000 க்கு மேல் ஆடைகளை கொள்முதல் செய்யும் 10 வாடிக்கையாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு 5 வாடிக்கையாளர்களுக்கு சாம்சங் கலக்சி ஸ்மார்ட் போன்கள், ஏனைய 5 வாடிக்கையாளர்களுக்கு ருவாவி ஸ்மார்ட் போன்கள் காத்திருக்கின்றது. பரிசில்களை பெற்றுக்கொள்ள உங்களை நாம் அழைக்கின்றோம்.




MFD
MILLENNIUM
FASHION DESTINATION
Retail Dealers in : Textile Specialist in Jeans, T.Shirt, Shirts, Salwar, Sarees & Boys Suits & Etc..
No.10-11, Power House Road, Grand Bazaar, Jaffna.
Tel : 021- 2217575 www.Facebook.com / MILLENNIUM


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 12.11.2017 அன்று வெளியிடப்பட்டது.